# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2052 வைகாசி / மே 2021 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be

## தேசத்தின் குரல்

# ஒடுக்கும் ஒன்றியமும் இறைமையற்ற மாநிலமும்




இந்திய அரசை ஒன்றிய அரசு என்று சொல்லக் கூடாதாம்! தமிழ்நாடு மாநிலத்தையும் தமிழ்நாடு என்று சொல்லக் கூடாதாம்! பாசக தமிழ்நாடு மாநிலத் தலைவர் முருகன்

## உள்ளே...

1. தேசத்தின் குரல் -1
2. பாஜக அரசின் ஒடுக்குமுறை ஆயுதமாகிய கொரோனா -8
3. செங்காட்டான் குறிப்பு-15
4. ஒவ்வொரு சுற்றுச் சூழலியலாளரும் முதலாளித்துவத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன? -20
5. தோழர் சுபவீ அவர்களுக்குத் திறந்த மடல் -38
6. ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான வியன்னா ஒப்பந்தமும் , மான்ட்ரியல் நெறிமுறையும்-49
7. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (19) -58
8. நான் ஏன் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தில் சேர்ந்தேன்?- 80

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

தொடங்கி “தேசிய” நாளேடு தினமலர் வரை குமுறுவதிலும் பொருமுவதிலும் சட்டக் காரணமும் இல்லை: வரலாற்று ஏரணமும் இல்லை.

இந்திய அரசமைப்பு இந்தியாவை ”Union of States” என்றே வரையறுக்கிறது. State என்பதை அரசு என்றோ நாடு என்றோ மாநிலம் என்றோ மொழிபெயர்க்கலாம். Nation without State என்பதை அரசற்ற தேசம் என்கிறோம். Stateless people என்றால் நாடற்ற மக்கள் என்று பொருள். United States of America என்பதை அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்று சொல்கிறோம். நீதிமன்றத் தீர்ப்புகளில் இந்திய அரசானாலும் மாநில அரசானாலும் State என்றுதான் குறிக்கப்பெறும்.

State Government என்னும் போதுதான் அன்றாட வழக்கில் மாநில அரசு என்றாகிறது. இதிலும் கூட province அல்லது மாகாணம் வேறு. State அல்லது மாநிலம் வேறு. மாகாணம் என்பது வெறும் ஆட்சியலகு (admninistrative unit). State அல்லது மாநிலம் என்பது இறைமை அல்லது அரசுரிமையைக் குறிக்கும். இங்கு மாநிலம் என்பதை குறுநிலத்துக்கு எதிர்நிறுத்திப் புரிந்து கொள்ள வேண்டும். குறுநிலம் என்பது இறைமையற்றது, ஒரு பேரரசுக்குக் கப்பம் கட்டி வாழ்வது. அயலாட்சிக்கு அடங்கிய பாளையப்பட்டைப் போன்றது. எனவே Union of states என்பதை அரசமாநிலங்களின் ஒன்றியம் என்று தமிழாக்கம் செய்வது பொருத்தமாக இருக்கும்.

“India, that is Bharat, shall be a Union of States” (பாரதம் என்னும் இந்தியா அரசமாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும்) என்பதுதான் அரசமைப்புச் சட்டத்தின் முதல் உறுப்பு (Article 1). சட்டமுறைப்படியும் அதிகாரமுறைப்படியும் இந்திய ஒன்றியம் என்பதுதான் இந்த நாட்டின் சரியான பெயர். ஆண்டுதோறும் இந்திய நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வது ஒன்றிய நிதிநிலை அறிக்கைதான். உச்ச நீதிமன்றமும் உயர் நீதிமன்றங்களும் எப்போதுமே இந்திய அரசை ஒன்றியம் (Union) என்றுதான் குறிப்பிடுகின்றன. ஊடகங்களும் எளிய மக்களும் இந்திய அரசை மத்திய அரசு என்றோ மைய அரசு என்றோ நடுவண் அரசு என்றோ தில்லி சர்க்கார் என்றோ சொல்வதால் இந்திய ஒன்றியம் என்ற அதிகாரமுறைப் பெயர் மறந்தோ மறைந்தோ போய் விடாது.

எனவே இந்திய ஒன்றியம் என்பதில் சொற்குற்றம் ஏதுமில்லை. அதற்கு உள்நோக்கம் கற்பிப்பது

இந்திய அரசமைப்பின் சிற்பிகளுக்கும் அரசமைப்புப் பேரவைக்கும் உள்நோக்கம் கற்பிப்பதே ஆகும். இந்திய ஒன்றியம் என்பதற்கு மாறுபட்ட பொருள்விளக்கம் தருவதிலும் பிழையில்லை; அது கருத்துரிமையின் பாற்பட்டது.

தமிழ்நாடு என்ற பெயருக்கு மறுக்கவியலா இலக்கிய, வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. தொல்காப்பியம் "வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்" என்று எல்லை வரையறையே கொடுத்துள்ளது.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் "இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இது நீ கருதினை ஆயின்" என்று முக்கடலையும் வேலியாகக் கொண்ட தமிழ்நாடு என்பதை அறுதியிட்டுரைப்பார்.

எந்த வினாவுக்கும் சரியான விடை (வழா விடை) சொல்ல வேண்டும் என்பதற்கு 11ஆம் நூற்றாண்டிலேயே தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணார் எடுத்துக் காட்டியது என்ன தெரியுமா? "நும் நாடு யாதென்றால் தமிழ்நாடு என்றல்"!

இவ்வளவு தொன்மைச் சிறப்பு வாய்ந்த தமிழ்நாடுதனை பற்பல பாவலர்களும் அறிஞர்களும் போற்றிய போதிலும் தமிழ்நாடு என்ற அரசியல் அலகு ஏதும் அதிகாரமுறைப்படி அறிந்தேற்கப்படாத நிலைதான் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை நிலவிற்று. தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய காந்தியார் மொழிவழிக் குமுகங்களின் விடுமைக்காகக் குரல் கொடுத்தார். முதல் படியாகக் காங்கிரஸ் மாகாண அமைப்புகளை மொழிவழி வகுத்தமைக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

1920ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயககம் நடத்தத் தீர்மானித்த அதே நாகபுரிப் பேராயத்தில்தான் காந்தியாரின் விருப்பப்படி காங்கிரஸ் அமைப்பை மொழிவழி வகுத்தமைக்கவும் முடிவு செய்யப்பட்டது. இப்படித்தான் தமிழ்நாடு காங்கிரஸ் என்ற பெயர் வந்தது. 1924-25இல் தந்தை பெரியார் தலைவராக இருந்தது தமிழ்நாடு காங்கிரசுக்குத்தான்! இப்போதும் சத்தியமூர்த்தி பவனில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்ற பெயர்ப் பலகையைக்

காணலாம்.

விடுமைப் போராட்டக் காலத்தில் மொழிவழி மாநிலங்கள் அமைப்பதாக உறுதியளித்து வந்த காங்கிரஸ் தலைமை அதிகாரக் கைமாற்றத்துக்குப் பின் மொழிவழி மாநிலங்கள் அமைந்து விடாமல் பார்த்துக் கொண்ட போது பொட்டி சிறிராமுலுவின் உயிரீகமும், ”விசலாந்திரத்தில் மக்கள் இராச்சியம்” என்ற முழக்கத்துடன் பொதுமையர் தலைமையில் நடந்த வீரத் தெலங்கான ஆய்தப் போராட்டமும் 1953இல் ஆந்திர மாநிலம் அமைக்கச் செய்தன.

மொழிவழி மாநிலம் அமைத்து அதற்குத் தமிழ்நாடு என்று பெயரிடக் கோரி விருதுநகர் சங்கரலிங்கனார் 76 நாள் பட்டினிப் போராட்டம் நடத்தி 1956 அக்டோபர் 13ஆம் நாள் உயிரீகம் செய்தார்.

1956 நவம்பர் முதல் நாள்தான் ’மதராஸ்’, கேரளம், கர்நாடகம் ஆகிய மொழிவழி மாநிலங்கள் பிறந்தன. நம் தமிழ்நாடுதான் அப்போது மதராஸ் என்றும் Madras என்றும் சென்னை என்றும் பலவாறு பெயரிட்டழைக்கப்பட்டது. இந்த மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர்சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை காங்கிரஸ் ஆட்சியாளர்கள் ஏற்க மறுத்தார்கள். முதலமைச்சர் காமராசரே எள்ளி நகையாடினார்.

1967ஆம் ஆண்டு திமுக ஆட்சிக்கு வந்த பிறகுதான் சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர்மாற்றம் செய்வதற்கான
தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக இயற்றப்பட்டது. 1968 நவம்பரில் இந்திய நாடாளுமன்றம் இந்தப் பெயர் மாற்றத்துக்கு ஒப்புதல் அளிக்க வேண்டியிருந்தது.

இப்போது அரசமைப்புச் சட்டத்தின் முதல் அட்டவணையில் அரசமாநிலங்களின் பட்டியலிலும் தமிழ்நாடு என்ற பெயர்தான் உள்ளது. இந்திய ஒன்றியம் என்று சொல்லாதே என்பதில் போலவே தமிழ்நாடு என்று சொல்லாதே என்ற கூச்சலிலும் சட்டக் காரணமோ வரலாற்று ஏரணமோ துளியும் இல்லை. இருக்கிற அரசமைப்புக்கு உட்பட்ட சில உரிமைகளையும் கூட மறுக்கவும் அந்த மறுப்பை ஞாயப்படுத்தவும் இந்திய ஆட்சியாளர்கள் செய்து வரும் கெடுஞ்சதிக்கு உருமறைப்பாகவே இந்துத்துவ ஆற்றல்கள் கூச்சல் கிளப்பிக் கொண்டுள்ளன.

இந்திய ஒன்றியம் என்பதிலோ தமிழ்நாடு என்பதிலோ பேச்சுக்கும் கூட பிரிவினை இல்லை. அரசமைப்புக்குட்பட்ட மாநில உரிமைகளையும் கூட மறுத்து அழிச்சாட்டியம் செய்வதன் வாயிலாக நரேந்திர மோதி - அமித்சா வகையறாதான் பிரிவினை எண்ணத்தை மாநிலங்கள் எங்கும் விதைத்து வருகின்றார்கள் என்பதே உண்மை. ஆட்சியாளர்களின் பிரிவினைத் தூண்டுதல் செயல்பாடுகளை மறைக்கவே இந்துத்துவக் கையாட்கள் பிரிவினைப் பூச்சாண்டி கிளப்பி வருகின்றனர். எந்தப் பூச்சாண்டிக்கும் அஞ்சாமல் எல்லாத் தரப்பினரும் இந்திய ஒன்றியம், தமிழ்நாடு என்ற பெயர்களைத் தொடர்ந்து பொருத்தமான எல்லாவிடத்தும் ஆள வேண்டுகிறோம்.

அதேபோது, இந்தப் பெயர்கள் மட்டுமே இந்திய வல்லரசியத்தை வழிக்குக் கொண்டுவந்து விடும் என்ற மயக்கம் கூடாது. தமிழ்நாடு அரசு இறைமை கொண்டது என்பது மெய்யா? மாநில அதிகாரப் பட்டியல் என்ற அளவிலாவது அதற்கு இறைமை உள்ளதா? மாநிலப் பட்டியலில் மிச்சமுள்ள அற்பசொற்பக் கூறுகளில் சட்டமியற்றுவதானலும் கூட ஆளுநரிடம் (அல்லது குடியரசுத் தலைவரிடம்) ஒப்புதல் பெற வேண்டும் என்ற விதிமுறை இருப்பதால் இந்த அரசமைப்பில் மாநில இறைமை என்பதெல்லாம் சட்டக் கற்பனையே தவிர வேறல்ல.

ஒன்றியம் என்ற பெயரே இந்திய ஒன்றியத்தை சோவியத்து ஒன்றியம் போன்றதாக்கி விடாது. ஒன்றியம் என்ற பெயர் இருப்பினும் அதன் உறுப்பலகுகளுக்கு (மொழிவழித் தேசங்களுக்களுக்கு)

பிரிந்து செல்லும் உரிமை உள்ளிட்ட தன்தீர்வுரிமை கிடையாது.

ஒன்றியம் என்ற பெயரைச் சொன்னாலே கூட்டாட்சிக்கு வழிதிறக்கும் என்பதற்கும் அடிப்படை இல்லை. இந்தியாவைக் கூட்டாட்சி என்று குணங்குறிப்பதை அண்ணல் அம்பேத்கர் வன்மையாக மறுத்தார்: அமெரிக்காவில் நடந்தது போல் தற்சார்பான தனித்தனி குடியேற்றங்கள் விரும்பிச் சேர்ந்துதான் கூட்டாட்சி அமைத்தன. இங்கு நாமாக விரும்பிச் சேரவில்லை. பிரித்தானிய ஆட்சியாளர்களே பொருளியல், அரசியல் காரணங்களுக்காக நம்மைச் சேர்த்து வைத்தனர். நாம் சேர்ந்து போராடினோம். சேர்ந்தே தொடர்வோம். அதற்கு ஏற்றது ஒன்றியமே என்றார்.

மாநிலங்களுக்கென்றுத் தனியாக அதிகாரப் பட்டியல் இருப்பதால், அந்த அளவுக்கு அவை இறைமை கொண்டவை என்று அம்பேத்கர் விளக்கமளித்தார். அவரது எண்ணம் பட்டறிவால் மெய்ப்படவில்லை. இறைமை இருக்கட்டும், மாநில உரிமைகள் படும் பாட்டை அவர் கண்டிருக்க வேண்டும்.

அரசமைப்புப் பேரவையில் மகபூப் அலி பெய்க் சாகிப் பகதூர் என்ற உறுப்பினர் தந்த எச்சரிக்கையின் தொலைநோக்கு நம் கவனத்துக்குரியது:

“நமது அரசு ஒரு கூட்டாட்சி அரசாகத்தான் இருக்க வேண்டும் என்றும், ஒற்றையாட்சி அரசாக இருக்கக் கூடாது என்றும் நீங்கள் கருதினால், எதிர்காலத்தில் ஏதேனும் அதிகார நாட்டங்கொண்ட கட்சி இதனை ஒற்றையாட்சி முறையாக மாற்றி, பாசிச வல்லாட்சியாக்கி விடுவதை நீங்கள் தடுக்க விரும்பினால், கூட்டாட்சி என்ற சரியான சொல்லைத்தான் பயன்படுத்த வேண்டும். ஆகவே ஒன்றியம் என்பதற்கு மாற்றாக கூட்டாட்சி என்ற சொல்லைப் பயன்படுத்துமாறு முன்மொழிகிறேன்.”

அவரது முன்மொழிவு மறுதலிக்கப்பட்டது. அவரது எச்சரிக்கையின் அருமையை பாசக ஆட்சி

இப்போது புரிய வைத்து விட்டது.

அறிஞர் கே.வி. ராவு "இந்திய நாடாளுமன்றக் குடியாட்சியம் (ஒரு குற்றாய்வு)" என்ற நூலில் ஒன்றியத்தின் உண்மையை உடைக்கிறார்:

"நமது அரசமைப்புச் சட்டத்தில் உள்ள ஒற்றையாட்சிக் கூறுகளைக் கோடிட்டுக் காட்டுவதற்குத்தான் ஒன்றியம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. கூட்டாட்சி என்ற சொல் அரசமைப்புப் பேரவையில் வன்மையாகவும் வெற்றிகரமாகவும் எதிர்க்கப்பட்டது."

ஆக, இந்திய ஒன்றியம் என்பது மாநிலங்கள் விரும்பிச் சேர்ந்ததோ விரும்பினால் பிரிந்து செல்லத்தக்கதோ அன்று. இது கூட்டாட்சித் திரையால் தன்னுரு மறைத்துக் கொள்ளும் ஒற்றையாட்சி ஒன்றியமே தவிர, உரிமைகளை மதிக்கும் கூட்டாட்சி-ஒன்றியமன்று.

தமிழ்நாடு நாடெனப்பட்டாலும் இறைமை கொண்டு இலங்குவதன்று. மாநிலம் எனப்பட்டாலும் தன்னாட்சி கொண்டு இலங்குவதன்று. இறுதிக்கும் இறுதியாக, அது இந்திய வல்லரசியத்துக்கு அடிமைப்பட்ட ஒரு தேசம். பெயரை மட்டும் மாற்றி வைப்பதாலேயே மீட்சி பெற்று விட முடியாது.

இந்திய ஒன்றியம், தமிழ்நாடு என்று நாம் சொல்வதால் இந்துத்துவக் கும்பல் ஆத்திரப்படுவதைக் கண்டு மனநிறைவுற்று, இறைமை மீட்புக்கும் தன்தீர்வுரிமைக்குமாகப் போராடும் தேவையைப் புறக்கணித்து விட வேண்டாம்.

:

# பாஜக அரசின் ஒடுக்குமுறை ஆயுதமாகிய கொரோனா

சமந்தா

உலகளவில் இது வரை 15 கோடிக்கு மேலானோர் கோவிட்-19 தொற்று நோய்க்கு ஆளாகியுள்ளனர். அவர்களில் 31 லட்சத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அதிக கொரோனா பெருந்தொற்றினால் தாக்குற்ற நாடுகளில் அமெரிக்கா முதலிடத்திலும், இந்தியா இரண்டாம் இடத்திலும் உள்ளன. இந்தியாவில் இது வரை 2.5 கோடிக்கு மேலானோர் கொரொனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் இதில் 3 லட்சத்துக்கு மேலானோர் இறந்துள்ளனர். ஜனவரி 6 முதல் அளிக்கப்படும் கோவிட் தடுப்பு மருந்து இது வரை 1.7 விழுக்காடு மக்களுக்கே முழுமையாக அளிக்கப்பட்டுள்ளது. 2021-22 நிதிநிலையறிக்கையில் கோவிட் தடுப்பு மருந்துக்காக 35,000 கோடி நிதி ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது, அதன் பிறகு அதிகரித்து வரும் கொரோனா தாக்குதலைக் கட்டுக்குள் வைக்க கூடுதல் நிதி ஒதுக்கப்படவில்லை என்பதுடன், ஒதுக்கப்பட்ட 35,000 கோடி ரூபாய் முறையாகப் பயன்படுத்தப்பட்டதா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

உலகிலேயே மிக அதிகமான தொற்றுகளைப் பதிவு செய்துள்ள நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. நாள்தோறும் 4 லட்சத்துக்கு மேல் மக்கள் தொற்றுக்கு ஆளாகி வருகிறார்கள். இந்தியாவில் மக்கள் சந்தித்து வரும் இக்கட்டான சூழலைப் பார்த்து சீனா, பாகிஸ்தான், பிரிட்டன் நாடுகள் உதவுவதாக ஆதரவு தெரிவித்துள்ள நிலையில் மத்தியில் ஆளும் பாஜக அரசோ கொரோனாவை அரசின் ஒடுக்குமுறை ஆயுதமாகவே பயன்படுத்தி வருகிறது. முறையான மருத்துவ சேவை அளிக்கப்படாததால் பல மாநிலங்களில் மக்கள் கொத்துக் கொத்தாகச் செத்து மடிகின்றனர்.

கோவிட்-19 தடுப்பு மருந்தை அனைத்து மக்களுக்கும் இலவசமாக அளிக்க வேண்டியது ஒரு மக்கள்நல அரசின் கடமை. உலக நாடுகளில் பொதுச் சுகாதாரத்திற்கு ஒதுக்கீடு செய்வதில் 2020இல் 158 நாடுகளில் கடைக்கோடி நிலையில், 155ஆம் இடத்தில் இந்தியா உள்ளது. ஆனால், உலகளவில் இராணுவத்திற்கு அதிகம் செலவு செய்யும் நாடுகளில் அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாக 2020இல் இந்தியா 3ஆம் இடத்தில் உள்ளது என ஸ்டாக்ஹோமின் சர்வதேச அமைதிக்கான ஆய்வமைப்பு (சிப்ரி) தெரிவித்துள்ளது. இந்தியாவின் இராணுவச் செலவு 2020இல்

72.9 பில்லியன் டாலர் (54 லட்சம் கோடி ரூபாய்). இராணுவத்திற்கு 54 லட்சம் கோடி ரூபாய் செலவு செய்யும் பாஜக அரசால் மக்களுக்கு ஒரு தடுப்பு மருந்தைக் கூட இலவசமாக அளிக்க முடியவில்லை என்றால், எப்பேர்ப்பட்ட மக்கள் விரோத அரசாக பாஜக அரசு உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

பாஜக அரசின் சரியான திட்டமின்மையால், நிர்வாகச் சீர்கேடுகளாலும் கோவிட் 2ஆம் அலை கட்டுப்படுத்தப்படாமல் மென்மேலும் அதிகரித்து வருகிறது. மே 1 முதல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசி போடுதல் தொடங்கும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் தேவைக்கேற்ப கோவிட் தடுப்பு மருந்துகளின் உற்பத்தி அதிகமாக்கப்படவில்லை என்பதால் தட்டுப்பாடு நிலவுகிறது. கோவிட் தடுப்பு மருந்துகளின் விலை நிர்ணய ஒழுங்குமுறையை மத்திய அரசு மேற்கொள்ளாமல், இந்த இக்கட்டான சூழலை மருந்து நிறுவனங்கள் பெருலாபம் ஈட்டுவதற்கான நல்வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு விட்டுள்ளது. கோவிட் தடுப்பு மருந்துகளின் விலைகளில் கடும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. நிறுவனங்கள் மத்திய அரசிற்கு மலிவு விலையிலும், மாநில அரசுகளுக்கு அதிக விலையிலும் தடுப்பு மருந்துகளை விற்றுள்ளன. 'சீரம் இந்தியா நிறுவனம் கோவிட் தடுப்பு மருந்தை மத்திய அரசிற்கு 200 ரூபாய்க்கும், மாநில அரசுகளுக்கு 400 ரூபாய்க்கும், தனியார் மருத்துவமனைகளுக்கு. 600 ரூபாய்க்கும் விற்றுள்ளது. பாரத் பயோடெக் மாநில அரசுகளுக்கு 600 ரூபாய்க்கும், தனியார் மருத்துவமனைகளுக்கு 1,200 ரூபாய்க்கும் விற்றுள்ளது. மாநில அரசுகள் நிதி நெருக்கடியில் தவிக்கும் போது கோவிட்-19 தடுப்பு மருந்தை இலவசமாக பெற்றுத் தருவதற்கான குறைந்தபட்ச உதவியைக் கூட மத்திய அரசு செய்யவில்லை.

புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் (MoSPI) தரவுகள், ஜனவரி 2018 நிலவரப்படி, 345 திட்டங்களுக்குக் கூடுதலாக ரூ. 2.19 லட்சம் கோடி செலவு செய்யப்பட்டிருப்பதையும், 354 திட்டங்களை நிறைவேற்றுவதற்கு 45 மாதங்கள் தாமதமாகியிருப்பதையும் தெரிவிக்கிறது. முறையான திட்டமின்மை, ஆபத்துக் காரணிகளைச் சரியாக அடையாளம் காணாதிருத்தல் மற்றும் பங்குதாரர்களிடையே முறையான ஒத்துழைப்பு இல்லாமை ஆகிய காரணங்களால் பண விரயமும், கால தாமதமும் ஏற்பட்டுள்ளன.

மோடி அரசு குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச நிர்வாகம் என்ற கொள்கையின் அடிப்படையில்

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

பங்கு விலக்கலையும் தீவிரமான தனியார்மயத்தையும் கொள்கைகளாகப் பின்பற்றி வருகிறது. இந்த நிதியாண்டில் பங்குவிலக்கலுக்கான இலக்கு 1.75 லட்சம் கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிர வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி உட்பட நான்கு முதல் ஐந்து பொதுத் துறை வங்கிகளையும், பொது நிதிக் காப்பீட்டு நிறுவனத்தையும், தனியார்மயப்படுத்துவதற்கான ஆலோசனையை நிட்டி அயோக் (Niti Aayog) வழங்கியுள்ளது. தற்போது மாநிலங்களிலும் பொதுச் சொத்துகளைப் பணமாக்குதலையும் தனியார்மயத்தையும் ஊக்குவிக்கும் திட்டம் குறித்து நிதி அயோக்கும், முதலீடு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மைத் துறையும் பரிசீலித்து வருகின்றன.

காப்பீட்டுத் துறையில் அன்னிய நேரடி முதலீட்டு வரம்பை 49 விழுக்காட்டிலிருந்து 74 விழுக்காடாக உயர்த்தும் மசோதாவுக்கு கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஓய்வூதியத் துறையிலும் அந்நிய நேரடி முதலீட்டு (எஃப்.டி.ஐ) வரம்பை 49 விழுக்காட்டிலிருந்து 74 விழுக்காடாக உயர்த்துவதற்கான சட்டத் திருத்த மசோதா அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படவுள்ளது. புதிய சட்டத் திருத்த மசோதாவில் தேசிய ஓய்வூதிய அமைப்பை, ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை, மேம்பாட்டு ஆணையத்திலிருந்து பிரித்து, நிறுவனச் சட்ட ஒழுங்குமுறைக்குள் கொண்டுவர வாய்ப்பிருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. நவீன தாராளமயம் இந்திய மக்களின் ஓய்வூதியத்தையும் விட்டு வைக்காமல் கபளீகரம் செய்யவுள்ளது.

பெருந்தொற்றுக்கு நடுவில் பொதுத் துறையும், தனியார் துறையும் கூட்டாக நடைமுறைப்படுத்தவுள்ள அரசின் உள்கட்டமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வாய்ப்பே இல்லை என திட்டக்குழுவின் முன்னாள் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா தெரிவித்துள்ளார். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பதிவு செய்யப்பட்ட அமைப்புசார் துறையிலிருந்து அதிக வளர்ச்சி ஏற்படுகிறது, செலவுக் குறைப்பு நடவடிக்கைகள் காரணமாகப் பெருநிறுவனங்களின் வருவாயும், இலாபமும் அதிகரித்துள்ளன. ஒப்பந்த உழைப்பாளர்களைக் குறைப்பதன் மூலமும் இது செய்யப்பட்டது, இது வருவாய் வளர்ச்சியின் குறைவையும், முறைசாரா பொருளாதாரத்திற்கு அதனால் பாதிப்புகள் ஏற்படுவதையும் குறிக்கிறது. ஆனால் தற்போதைய மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவீட்டு முறையில் அமைப்புசாரா துறையின் வளர்ச்சி அமைப்புசார் துறைக்கு ஒத்ததாக இருக்கும் என்று கருதியே மதிப்பிடப்படுவதாகவும்

அலுவாலியா கவலை தெரிவித்துள்ளார்.

கொரோனா தாக்கத்தால் அமைப்புசாராத் துறையே பெரிதும் பாதிப்புற்றுள்ளது. கடன் சேவை கிடைப்பதிலும் கூடுதல் ஏறுமாறான நிலை காணப்படுகிறது. மூலப் பொருட்களின் விலைவாசி பெரிதும் அதிகரித்துள்ளது. சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் உரிய நிதிக் கடன் பெற முடியாமல் பாதிப்புற்றுள்ளன. அதேநேரத்தில் பெருநிறுவனங்களின் பங்கு மதிப்புகள் வீங்கியுள்ளன.

முதலாளித்துவ மேலாதிக்க நாடான அமெரிக்காவில் கூட பைடன் நிர்வாகம் பெருநிறுவனங்களின் மீதான வரிகளை உயர்த்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அமெரிக்க நிதியமைச்சர் ஜேனட் யெல்லன் பெருநிறுவனங்கள் வரி ஏய்ப்புச் செய்யும் பொருட்டு லாபங்களை இடமாற்றம் செய்வதைத் தடுப்பதற்காக உலகளாவிய குறைந்தபட்ச நிறுவன வரியை நடைமுறைபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அதானி குழுமம் 100 பில்லியன் டாலருக்கும் அதிகமான சந்தை மூலதன மதிப்பைக் கொண்ட 3ஆம் இந்திய நிறுவனமாக வளர்ந்துள்ளது. ஆசியாவிலேயே முதல் பணக்காரராக இருக்கும் முகேஷ் அம்பானிக்கு, கொரோனா பொது முடக்கக் காலத்தில் மட்டும் 3,500 கோடி அமெரிக்க டாலர் சொத்து சேர்ந்துள்ளது. இரண்டாவது பெரும் பணக்காரரான அதானியின் சொத்து மதிப்பு 5,050 கோடி டாலராக அதிகரித்துள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டில் மட்டும் அதானியின் சொத்து மதிப்பு 5 மடங்கு உயர்ந்திருப்பதாக ஃபோர்ப்ஸ் இதழ் தெரிவித்துள்ளது. இந்தியாவில் கடந்த ஆண்டு பெரும் பணக்காரர்களின் எண்ணிக்கை 102ஆக இருந்த நிலையில் இந்த ஆண்டு 140ஆக அதிகரித்துள்ளது. ஆனால் பெரு நிறுவனங்களின் கைக்கூலியான பாஜக ஆட்சியில் பெருநிறுவனங்களின் மீதான வரியையும், வருமான வரியையும் உயர்த்தும் பேச்சுக்கே இடமில்லாது போயிற்று. மாறாக எளிய மக்களின் துயர் தணிக்க எந்த நடவடிக்கையும் எடுக்காத பாஜக அரசு அவர்களின் மீதான வரிச் சுமையை மேலும் கூட்டியதாலேயே நிதியாண்டு 2021இல் மறைமுக வரிவருவாய் 12 விழுக்காடு அதிகரித்துள்ளது. 2021 ஏப்ரல் மாதத்தில் சரக்கு மற்றும் சேவை வரிகள் (ஜிஎஸ்டி) வழியிலான வருவாய் ரூ.1.41 லட்சம் கோடி உயர்ந்து, சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது 14 விழுக்காடு அதிகரித்துள்ளது.

பெருந்தொற்றினால் ஏற்பட்ட கடன்களை அடைப்பதற்கு செல்வ வரி விதிப்பது மோசமான

வழிமுறையாகும் என்றும், அது அறிமுகப்படுத்தப்பட்டால் அப்படியே நிரந்தரமாகி விடும் என்றும் கூறுகிறார் நோபல் பரிசு பெற்ற பொருளியல் வல்லுநர் அங்கஸ் டீட்டன். ஆனால் அவரோ பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை, சமத்துவமின்மையை எவ்வாறு குறைப்பது என்பது குறித்து ஆராயும் இங்கிலாந்தின் வல்லுநர் குழுவை வழிநடத்துகிறார்!. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்காக ஆய்வு செய்கிறோம் என்று சொல்லிப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகரிப்பதற்கே வழிகாட்டும் இத்தகைய பொருளியல் வல்லுநர்கள்தாம் சமத்துவமின்மையின் பாதுகாவர்கள்!.

இந்தியாவில் வேலைவாய்ப்புகளைப் பெருகச் செய்வதற்கான புதிய திட்டங்கள் ஏதும் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வேலையின்மை விகிதம் மேலும் அதிகரித்துள்ளது. இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் அமைப்பு அறிவித்துள்ள படி, வேலையின்மை விகிதம் இந்திய அளவில் 7.97 விழுக்காடாகவும், நகர்ப்புறங்களில் 9.78 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது. கடந்த ஒரு வருடத்தில் இந்தியாவில் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 3.2 கோடிக்கு மேல் குறைந்துள்ளது, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை 60 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

வேலையிழப்பாலும், ஊதிய இழப்பாலும் மக்கள் பெருமளவில் அல்லலுற்று வரும் நிலையில் கோவிட் இரண்டாம் அலை நாட்டின் பொருளாதாரத்திலும், மக்களின் வாழ்வாதாரத்திலும் மேலும் எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தவுள்ளது. கோவிட் முதல் அலையின் தாக்கத்திலிருந்தே இன்னும் மீளாத நிலையிலிருக்கும் பொருளாதாரம் இரண்டாம் அலையால் மேலும் தாக்குறுவது உறுதி என்ற நிலையில் பொருளாதார மீட்சி மேலும் தாமதமாகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

<u>பணவீக்கம்:</u>

பிப்ரவரியில் நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறைப் பணவீக்கத்தின் அளவு 5.52 விழுக்காடு அதிகரித்துள்ளது, உணவுப் பொருட்களின் விலைவாசி 4.94 விழுக்காடு அதிகரித்துள்ளது. காய்கறிகளின் விலைவாசி 4.83 விழுக்காடு குறைந்துள்ளது. பருப்பு

வகைகளின் விலைவாசி 13.25 விழுக்காடு அதிகரித்துள்ளது. முட்டை விலை 10.60 விழுக்காடு உயர்ந்துள்ளது. எண்ணெய், கொழுப்பு ஆகியவற்றின் விலைவாசி 24.92 விழுக்காடு அதிகரித்துள்ளது. மீன், இறைச்சியின் விலை 15.09 விழுக்காடு உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் பணவீக்கம் 7.70 விழுக்காடு உயர்ந்துள்ளது.

ஜனவரியில் தொழில்துறை வளர்ச்சி:

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி ஜனவரியில் மொத்த உற்பத்திக் குறியீடு 3.6 விழுக்காடு சரிவடைந்துள்ளது. முதன்மைத் துறைகளில் சுரங்கத் துறையில் உற்பத்தி 5.5 விழுக்காடு சரிவடைந்துள்ளது. செய்பொருளாக்கத் துறையில் உற்பத்தி 3.7 விழுக்காடு சரிவடைந்துள்ளது. மின்சார உற்பத்தி 0.1 விழுக்காடு அதிகரித்துள்ளது.

பயன்பாட்டு அடிப்படையிலான வகைப்பாட்டில் முதன்மை பொருட்களின் உற்பத்தி 5.1 விழுக்காடு சரிவடைந்துள்ளது. மூலதனப் பொருட்களின் உற்பத்தி 4.2 விழுக்காடும், உடனடி நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 3.8 விழுக்காடும் வீழ்ச்சியடைந்துள்ளது. கட்டுமானப் பொருட்களின் உற்பத்தி 4.7 விழுக்காடும், இடைநிலைப் பொருட்களின் உற்பத்தி 5.6 விழுக்காடும் குறைந்துள்ளது. நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 6.3 விழுக்காடு அதிகரித்துள்ளது.

மார்ச்சில் தொழில்துறை வளர்ச்சி:

இந்தியாவின் தொழில்துறை, உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கியத் தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக் குறியீடு மார்ச்சில் 6.8 விழுக்காடு உயர்ந்துள்ளது. சென்ற வருடம் மார்ச் மாதத்தில் கொரோனா தாக்கத்தைக் கட்டுப்படுத்தப் பொது முடக்கம் ஏற்படுத்தப்பட்டதால் பொருளாதாரம் கடுமையான சரிவை சந்தித்தது என்பதால், அதனுடன் ஒப்பிடும் போது இப்போது அதிக வளர்ச்சி ஏற்பட்டிருப்பது போன்ற தோற்றம் காணப்படுகிறதே தவிர இது உண்மையான வளர்ச்சியைக் குறிக்காது என்பதும் குறிப்பிடத்தக்கது. சென்ற ஆண்டு மார்ச் மாதத்தின் உற்பத்தி நிலையுடன் ஒப்பிடும் போது நிலக்கரி உற்பத்தி 21.9 விழுக்காடும், கச்சா எண்ணெய் உற்பத்தி 3.1 விழுக்காடும், பெட்ரோலிய சுத்திகரிப்பு பொருட்கள் உற்பத்தி 0.7 விழுக்காடும், உர உற்பத்தி 5 விழுக்காடும் குறைந்துள்ளன. இயற்கை எரிவாயு

உற்பத்தி 12.3 விழுக்காடும், எஃகு உற்பத்தி 23 விழுக்காடும், சிமெண்ட் உற்பத்தி 32.53 விழுக்காடும், மின்சார உற்பத்தி 21.6 விழுக்காடும் அதிகரித்துள்ளன.

கொரோனா தடுப்பு மருந்து கிடைப்பதில் உலக நாடுகளிடையே ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை நாடுகளில் வெறும் 0.3 விழுக்காடு மட்டுமே கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. வளர்ந்த நாடுகளே கொரோனா தடுப்பு மருந்துகளை உலகளவில் அனைவருக்கும் கிடைக்கச் செய்யாமல், தங்கள் பொருளாதார மேலாதிக்கத்தால் கொரோனா தடுப்பு மருந்துகளில் 82 விழுக்காட்டை அபகரித்துள்ளன.

கோவிட் தொற்றுநோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் ஏழை நாடுகளின் துயர் தணிக்கவும், பொருளாதார வீழ்ச்சியிலிருந்து அவற்றைப் பாதுகாக்கவும் 650 பில்லியன் டாலர் மதிப்பிற்குச் சிறப்பு வரைவு உரிமைகள் ஒதுக்கீடு செய்ய ஜி-20 நாடுகளின் கூட்டமைப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் சிறப்பு வரைவு உரிமைகளின் ஒதுக்கீடுகள் பெருமளவில் வளர்ந்த நாடுகளையே சேரும் என்பதால் அவை ஏழை நாடுகளுக்கு மீள் ஒதுக்கீடு செய்யப்படாத வரை அவற்றால் ஏழை நாடுகள் எந்தப் பயனும் அடையப் போவதில்லை.

முதலாளித்துவக் கொடுங்கோல் ஆட்சியின் காராணமாக கோவிட் தாக்கத்தால் உலகளவிலும் உள்நாட்டளவிலும் -- நாடுகளுக்கிடையிலும் அந்தந்த நாட்டுக்குள்ளும் -- சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துள்ளன. முதலாளித்துவ ஏற்றத்தாழ்வுகளை மேலும் அதீதமாக்கும் ஓர் அரச ஒடுக்குமுறை ஆயுதமாக கொரோனா பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் ஏகபோக மருந்து நிறுவனங்களின் காப்புரிமைகளையும், பெருலாபங்களையும் பாதுகாப்பதற்காகக் கோடிக்கணக்கான மக்களின் இன்னுயிர்க்ளைப் பலியிடலாம் அதில் ஒன்றும் தவறில்லை என்பதே முதலாளித்துவத்தின் நீதியாக உள்ளது!

# செங்காட்டான் குறிப்பு

## தோழர் ஞானம்:



நள்ளிரவு கடந்த நேரம் அந்தத் தொலைபேசிச் செய்தி வந்தது. "நான் ஞானத்தோட அம்மா" என்று அறிமுகம் செய்து கொண்டு, என்ன ஏது என்று நான் கேட்குமுன்பே சொல்லி முடித்து விட்டார்கள்: ஞானத்தின் மனைவி செத்துட்டா என்றார்கள். "ஞானம்?" என்று நான் கேட்டு முடிப்பதற்குள்ளேயே அவனும் செத்துட்டான்யா என்றார்கள். ஐயோ!

"விவரந்தெரியாத குழந்தையை வச்சுகிட்டு என்ன செய்யறதுனு தெரியாமத் தவிச்சுகிட்டிருக்கேன்! நீங்கதான் எனக்கு வழி சொல்லணும்!" என்ன நடந்தது என்று

சுருக்கமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். கணவன் மனைவி இருவருக்கும் கோவிட்-19 தொற்று இருவரும் காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். முதலில் மனைவி இறந்து விட்டார். பிறகு தோழர் ஞானம் வீட்டுக்குப் போய் பார்த்துக் கொள்ளலாம் என்று வந்து விட்டார். ஆனால் அடுத்த சில நாளில் அவரும் இறந்து விட்டார். இருவர் உடலையும் ஊராட்சிப் பணியாளர்கள் வந்து எடுத்துப் போய் அடக்கம் செய்தார்களாம். அடுத்த மாதம் வாடகை கொடுக்கக் கூட என்ன செய்வது என்று தெரியவில்லை என்று அம்மா சொன்னார்கள். 5 வயதுப் பையன் -- ஞானம் இணையரின் வளர்ப்புப் பிள்ளை -- என்ன நடக்கிறது என்று தெரியாமல் விளையாடிக் கொண்டே இருக்கிறான் என்றார்கள். அவனிடமிருந்து கைப்பேசியை வாங்கவே முடியவில்லை, அவன் தூங்கிய பிறகு அதை வாங்கி உங்கள் தொலைபேசி எண்ணைக் கண்டுபிடித்துப் பேசுகிறேன் என்றார்கள். எனக்கு அம்மாவை நன்றாகத் தெரியும், ஒருமுறை மயிலாடுதுறையில் கூட்டம் பேசி விட்டு அவர்கள் வீட்டில் இரவுத் தங்கிய நினைவு. மீண்டும் மயிலாடுதுறையில் ஞானம் திருமணத்துக்குப் போயிருந்த போது பார்த்தேன். ஆறுதலடைங்க, காலையில் விடிந்த பிறகு பேசலாம் என்று சொல்லி விட்டேன்.

ஞானம் பற்றிய நினைவுகள்: இயக்க அலுவலகம் அப்போது அம்பத்தூரில் இருந்தது. இயக்கத் திங்களேடாகத் தமிழ்த் தேசம் வெளிவந்து கொண்டிருந்தது. நானும் தோழர்களும் நகரப் பேருந்துகளிலும் புறநகரத் தொடர்வண்டிகளிலும் ஏறிப் பயணிகளிடம் பேசி இதழ் விற்பனை செய்வது வழக்கம். ஒரு நாள் அந்தப் பணி முடிந்து பேருந்தில் தமிழ்த் தேசம் இதழ்கள் நிறைந்த பையுடன் அம்பத்தூர் திரும்பிக் கொண்டிருந்தேன். என் பக்கத்து இருக்கையில் உட்கார்ந்திருந்த குங்குமப் பொட்டு இளைஞர் என்னைப் பார்த்துப் புன்னகை பூத்தார். நான் இதைப் படியுங்கள் என்று தமிழ்த் தேசம் இதழைக் கையில் கொடுத்தேன். ஆர்வமாய்ப் பார்த்துக் கொண்டே “நீங்கள்?” என்றார். தியாகு, இந்த இதழின் ஆசிரியர் என்றேன். இதழைத் திருப்பிக் கொடுத்த போது நீங்களே எடுத்துப் போய்ப் படியுங்கள் என்றேன். என்ன வேலை செய்றீங்க? ”தனியார் கம்பெனியில் விற்பனைப் பிரதிநிதியா இருக்கேன். நிரந்தர வேலை

இல்லை.” உங்களுக்கு ஏதாவது அரசியல் உண்டா? ஆர்எஸ்எஸ் கொள்கை பிடிக்கும் என்றார். இருக்கட்டும், தொடர்ந்து தொடர்பில் இருங்கள், இதழில் முகவரி உள்ளது, எப்போது வேண்டுமானாலும் வாருங்கள் என்று கூறிக் கைகுலுக்கி விடைகொடுத்து அனுப்பினேன்.

அடுத்த சில நாளில் இயக்க அலுவலகம் வந்தார். பழைய இதழ்கள், புத்தகங்கள் எடுத்துப் படிப்பார். மருதுபாண்டியன், நலங்கிள்ளி, கதிர்க்குமரன் உள்ளிட்ட தோழர்களிடம் ஏதாவது கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பார். என்னிடமும் நேரம் கேட்டுப் பேசுவார். ஒரே கேள்வியைப் பலமுறை கேட்பார். நாங்கள் கொடுக்கும் நடைமுறைப் பணிகளைக் கவனமாகச் செய்வார். அந்த நேரம் அம்பத்தூரில் நாங்கள் நடத்திக் கொண்டிருந்த மக்கள் கோரிக்கை இயக்கம் நடத்திக் கொண்டிருந்தோம். வீடுவீடாகச் சென்று துண்டறிக்கை கொடுத்து உண்டியலேந்துவோம். அதில் மற்றத் தோழர்களுடன் அவரும் அலுப்பின்றிக் கலந்து கொண்டார். ஞானம் தனக்கு நிரந்தர வேலை இல்லாததால் தோழர்களிடம் அவ்வப்போது கைமாற்று வாங்குவார். தோழர்கள் தமக்குள் கடன் வாங்குவது கொடுப்பதில் பிழை இல்லை, ஆனால் அதற்கொரு வரம்பு வைத்துக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்துவேன். என்னைப் பொறுத்த வரை ஆயிரம் ரூபாய்தான் எல்லை. ஆயிரம் ரூபாய்க்கு மேல் கடன் கொடுக்கவும் மாட்டேன். கடன் வாங்கவும் மாட்டேன் என்று சொல்லிக் கொள்வேன்.

ஒரு நாள் ஞானம் என்னிடம் வந்து “தோழர், உதவி வேண்டுமே” என்றார். ”சொல்லுங்க ஞானம்.” ”மூணு மாசமா வீட்டு வாடகை கொடுக்கல, வேலையும் கிடைக்கல, அம்மா ஏதாவது கடன் வாங்கிட்டு வாடான்றாங்க.” ”என்ன வேணும் சொல்லுங்க?” “நாலாயிரம்? அடுத்த மாசம் கொடுத்துருவேன்.” ”சரி, மாலைக்குள் தருகிறேன்” என்றேன். எப்படியோ கொடுத்தும் விட்டேன். மறு நாள் இரு தோழர்களை ஆவடி அருகிலிருந்த அவர் வீட்டுக்கு நேரில் அனுப்பி அம்மாவையும் பார்த்து விட்டு, வீட்டுரிமையாளரிடமும் பேசி வரச் செய்தேன்.

2009 ஈழப் போர் நிறைவுற்ற பின் 2010இல் தமிழ் மீட்பு தமிழர் மீட்பு நெடுநடைப்பயணம் நடத்தத் திட்டமிட்டுக் கொண்டிருந்தோம். தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் 1000

கிலோமீட்டருக்கு மேல் 47 நாள் நடக்கத் திட்டம். ஞானம் “நானும் நடக்கலாமா?” என்றார். நடக்கலாமே? ”இயக்கத்தில் சேரலாமா?” ”சேரலாமே!”

”ஆர் எஸ் எஸ் கொள்கை என்னாச்சு?”

"அது எப்பயோ போயாச்சு."

மகிழ்ச்சி! என்று சொல்லி விட்டு உற்றுப் பார்த்தேன்.

"கடவுள் நம்பிக்கையை விட முடியாது, குங்குமப் பொட்டையும் விட முடியாது" என்றார்.

"அதெல்லாம் விடத் தேவையில்லை" எனறேன்.

"ஒன்று கேட்க வேண்டும், தவறில்லையே?"

"கேளுங்கள்" என்றேன்.

"நீங்க சாதி பார்ப்பீங்களா?"

“இது என்ன கேள்வி?”

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது எல்லாவற்றுக்கும் தான்! குமுகத்திலும் அமைப்பிலும்!

"சரி, இனி உங்களோடுதான்! நடைப்பயணத்தில் வரணும்."

"வரலாம்."

கோடிக்கரை முதல் கும்பகோணம் வரை 1047 கிலோமீட்டர் 47 நாள் நடந்தார். அந்த நெடுநடைப்பயணத்தில் பொறுப்புடன் புத்தக விற்பனை செய்தார்.கொடுத்த பணி எதுவானாலும் மறுக்காமல் செய்து அனைத்துத் தோழர்களின் அன்பையும் பெற்றார்,
விழியிழந்த பெண்ணை மணக்கும் முடிவைத் தெரிவித்த போது வரவேற்றேன். மணவிழாவுக்கு நேரில் சென்று வாழ்த்தி மகிழ்ந்தேன் இயக்கம் சார்பில் கையில் ஒரு தொகையைக் கொடுத்து "கடனில்லை, கடமை" என்றேன்.

கடைசி வரை நிலையான வருமானம் இல்லாமல் இருந்தார். ஆனால் இயக்கத்துக்குத் தன் திங்கள் பங்களிப்பைத் தவறாமல் செய்து வந்தார். நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜகவைத் தோற்கடிக்க வேண்டும் என்றால் திமுகவை ஆதரிக்க வேண்டும் என்று உறுதியாக நம்பினார். முகநூலில் ஞானம் பொன்னையா என்ற பெயரில் உதயசூரியன் சின்னத்தோடு தொடர்ந்து இடுகையிட்டு அதற்காக என்னோடும் தோழர்களோடும் வாதிட்டு வந்தார். ஆர் எஸ் எஸ் ஆதரவு நிலையிலிருந்து தீவிர எதிர்ப்பு நிலைக்கு மாறியதன் விளைவாக இருக்கலாம் .முடியட்டும், பேசிக் கொள்வோம் என்று இருந்தேன். அதற்கு வாய்ப்பில்லாமற் போய் விட்டது. எல்லாம் ஒரு புறமிருக்க, இயக்கத்துக்கான பங்களிப்பை மறவாமல் செய்து வந்தார். கடைசியாக இந்த மே தொடக்கத்தில் இரண்டு மாதத்துக்கு 200 அனுப்பி விட்டுப் புலனத்தில் தகவல் கொடுத்தார்.

இயக்கத்துக்கும் தமிழ்க் குமுகத்துக்கும் ஞானத்தின் எதிர்காலப் பங்களிப்பு குறித்து என் நம்பிக்கைகள் பொய்த்துப் போயின ஞானம் போன்ற அரிதான தோழர்களை பெருந்தொற்றுக்குப் பறிகொடுக்கும் போது எந்தத் தன்னாறுதலும் எடுபடாமல் போகிறது

போய் விட்டவர்களுக்காகவும் சேர்த்து உழைக்க வேண்டிய பொறுப்பு பிழைத்திருப்பவர்களுக்கு உள்ளது.

# ஒவ்வொரு சுற்றுச் சூழலியலாளரும் முதலாளித்துவத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

**சமந்தா**

ஃபிரெட் மாக்டோஃப் என்ற சூழலியலாளரும், ஜான் பெல்லாமி ஃபாஸ்டர் என்ற மார்க்சியpப் பொருளியலாளரும் இணைந்து “What every environmentalist needs to know about Capitalism” --- “ஒவ்வொரு சுற்றுச்சூழலியலாளரும் முதலாளித்துவத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?” என்ற நூலை 2011ஆம் ஆண்டில் வெளியிட்டனர். சூழலியல் அடிப்படையில் முதலாளித்துவம் குறித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பல புதிய தகவல்களைக் கொண்டுள்ளது இந்த நூல். பொருளாதார வளர்ச்சி குறித்துpப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கண்ணோட்டம் மறுபரிசீலனைக்குரியது என்ற அடிப்படையில் சமூக மாற்றத்தில் அக்கறையுள்ள அரசியல், பொருளாதார, மார்க்சிய ஆர்வலர்கள் என அனைவருக்குமே சரியான கொள்கை-நடைமுறைகளை கடைpப்பிடிப்பதற்கான சிறந்த வழிகாட்டும் நூலாகத் திகழ்கிறது.

இந்த நூலின் ஆசிரியர்களில் ஒருவரான ஜான் பெல்லாமி ஃபாஸ்டர் 20 ஆண்டுகளுக்கும் மேலாகச் சூழலியல் குறித்து ஆய்வுகடள் மேற்கொண்டு முக்கியமான நூல்களை வெளியிட்டுள்ளார். “இயற்கை திரும்புகிறது”- “The Return of Nature” என்ற தலைப்பில் ஜான் பெல்லாமி ஃபாஸ்டர் எழுதிய நூலுக்கு 2020ஆம் ஆண்டின் சிறந்த மார்க்சிய நூலுக்கான டியூசெர் நினைவுப் பரிசு அளிக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டது.

புவியால் தாங்கக் கூடியதைக் காட்டிலும் மனித சமூகம் அதீத சுமையையும் அழுத்தத்தையும் புவியின் மீது சுமத்தியதால் சுற்றுச்சூழலியல் நெருக்கடி பல்வேறு பிரச்சனைகளாக வெளிப்பட்டுள்ளது. முதலாளித்துவப் பொருளாதாரத்தால் ஏற்படும் சூழலியல் அழிவுகள் குறித்து மார்க்ஸ், எங்கெல்ஸ் தங்கள் படைப்புகளில் பல்வேறு இடங்களில் விவரித்துள்ளனர்.

ஒரு பிரச்சனைக்கான முதன்மைக் காரணத்தைத் தெரிந்து கொள்ளாமல் அப்பிரச்சனையை நாம் முழுமையாகச் சரி செய்ய முடியாது. மனித சமூகம் இயற்கையின் அங்கமாகத் தன்னை பார்த்தக் கொள்ளாமல், இயற்கை மீது வெற்றி கொள்வது போன்ற போட்டி போடும் மனநிலையையும், செயல்முறையையும்தான் இன்றைய பொருளாதார அமைப்பு வளர்த்துக்

கொண்டுள்ளது. இயற்கையின் மீதான மனித வெற்றிகள் குறுகிய கால அளவில் வெற்றியாகத் தோன்றினாலும், நீண்ட கால அளவில் அந்தச் சிறிய வெற்றியும் மிகப்பெரிய தோல்வியை ஏற்படுத்தவே வழிவகுக்கும். உடனடி ஆதாயங்களையே இலக்காகக் கொண்ட முதலாளித்துவத்தின் சந்தர்ப்பவாதSsச் செயல்பாடே, மனித சமூகத்தின் மிகப்பெரும் தோல்வியாகவும், இன்று நாம் சந்திக்கும் மிகப்பெரும் சூழலியல் நெருக்கடிகளுக்கான முதன்மைVக் காரணமாகவும் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாமல் சூழலியல் பிரச்சனைகளுக்கு நாம் முழுமையான தீர்வு காண முடியாது.

முதலாளித்துவத்தைப் பற்றி நூலாசிரியர்கள் அளித்துள்ள முக்கியத் தகவல்கள் பின்வருமாறு: சுற்றுச்சூழல் சீரழிவு என்பதொன்றும் புதிதல்ல, பதிவு செய்யப்பட்ட வரலாறு முழுவதிலும், சுற்றுச்சூழல் சீரழிவால் மெசொபடோமியா, மாயா போன்ற பல புராதன நாகரிகங்கள் அழிவுற்குள்ளாகியுள்ளன. காடுகள் அழிக்கப்படுதல், மண் அரிப்பு, பாசனநீர் உவர்ப்பாதல் போன்ற பல சிக்கல்கள் பழங்காலத்தில் இருந்துள்ளன.

பண்டைய கிரேக்கத்தில் சுற்றுச்சூழல் அழிவு குறித்து பிளேட்டோ “இது ஏதென்ஸ் என்பதற்கு என்ன ஆதாரம் உள்ளது? . . அதன் எச்சமே உள்ளது . . . நோயால் அரிக்கப்பட்ட உடலின் எலும்புக்கூடு போலத்தான் மிஞ்சியுள்ளது. வளமான மென்மையான மண் அனைத்தும் அடித்துச் செல்லப்பட்டு எலும்பும் தோலுமாக நிலம் உள்ளது” என (கி.மு. 427- 347) கிரிட்டியாஸில் எழுதியுள்ளார்.

அந்தப் பண்டைக் காலத்திலிருந்து இன்றைய நவீன காலம் எவ்விதத்தில் வேறுபட்டிருக்கிறது என்றால், இன்று புவியில் அதிக எண்ணிக்கையிலானோர் வாழ்ந்து வருகிறோம். அழிவேற்படுத்தும் அதிவேகத் தொழில்நுட்பங்கள் பயன்பாட்டில் உள்ளன. எல்லை அறியாது செயல்படும் பொருளாதார அமைப்பைக் கொண்டுள்ளோம். அன்று ஆங்காங்கே சிறிய அளவில் பிராந்திய அளவில் காணப்பட்ட சூழலியல் பிரச்சனைகள் இன்று உலகெங்குமே பரவலாகக் காணப்படும் மிகப்பெரும் சூழலியல் நெருக்கடிகளாக நம்மை எதிர்கொள்கின்றன. பண்டைய நாகரிகங்களில் சிறிய அளவில் சுற்றுச்சூழல்கள் அழிவிற்குட்பட்டன ஆனால் இன்று ஒட்டுமொத்த உயிர்க்கோளமே பாதிக்கப்பட்டு உயிரினங்களின் இருப்பே அச்சுறுத்தப்பட்டுள்ளது. எனவே புவியின் சுற்றுச்சூழலின் தற்போதைய விரைவான சீரழிவு குறித்து முக்கியமான

அறிவியல் காரணங்களின் அடிப்படையில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இன்று நாம் சந்திக்கும் சூழலியல் பிரச்சனைகளில் காலநிலை மாற்றமே நம்மை அச்சுறுத்தும் முக்கியமான உடனடிப் பிரச்சினையாகவும், மற்ற பிரச்சனைகளுடனும் தொடர்புள்ள மையப் பிரச்சனையாகவும் உள்ளது. காலநிலை மாற்றத்தால் நம் உணவுப் பாதுகாப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. புவியின் வெப்பநிலை அதிகரிக்கும் போது உணவு உற்பத்தி குறைவதாக ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது. இதற்கான காரணம் என்னவென்றால் வெப்பநிலை அதிகரிக்கும் போது இரவு நேரத்தில் தாவரங்களின் சுவாசித்தல் அளவு அதிகமாகிறது (enhanced respiration). அதனால் காலையில் ஒளிச்சேர்க்கையின் போது சேமித்த ஆற்றலில் அதிகளவு சுவாசத்திற்கே செலவழிக்கப்படுகிறது.

கடலில் அதிக அளவில் கார்பன்-டை-ஆக்சைடு சேரும் போது கடலமிலமாக்கத்தால் ஓடுள்ள விலங்குகளுக்கான கட்டுமான அமைப்பு, எலும்பு ஆக்கத்திற்குத் தேவையான ஆர்கனைட்டின் (கால்சியம் கார்பனேட்) செறிவு நிலை குறைந்திருக்கிறது. உரப் பயன்பாட்டின் அதிகரிப்பால் நைட்ரஜன், பாஸ்பரஸ் சுழற்சி பாதிக்கப்பட்டுள்ளது. உலகளவில் பாஸ்பரஸ் தாதுவிற்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நன்னீர் சுழற்சியும் பாதிக்கப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் நகரமயமாதலால், நிலப் பயன்பாட்டிலும் நிறைய சிக்கல் ஏற்பட்டுள்ளது. வளி மண்டலம் அதிகளவில் மாசடைவதாலும் நாம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளோம். நெகிழிப் பயன்பாடு மிகவும் அதிகரித்துள்ளது. கடலில் நெகிழிக் கழிவுகள் தீவுக் கூட்டங்களைப் போல் தேங்கி கடல் முழுதும் நிறைந்து காணப்படுகின்றன. கடலில் உள்ள நெகிழி சிதைந்து நுண் நெகிழிகள் ஆகிறது. அதை விலங்கினங்கள் எடுத்துக் கொள்ளும் போது கடுமையான பாதிப்பு ஏற்படுகிறது.

.

அமெரிக்காவில் மருத்துவர்கள், செவிலியர்களின் இரத்த மாதிரிகள், சிறுநீர் ஆகியவற்றைச் சோதித்த போது அவற்றில் பிஸ்ஃபீனால், சில வகை தாலேட், பெர்ஃபுளூரினேட்டட் சேர்மங்கள், பாலி புரோமினேட்டட் டை ஃபீனைல் ஈதர் போன்ற --- உடல் நலக் கோளாறுகளை ஏற்படுத்தும் --- பல்வேறு வேதிப் பொருட்கள் கலந்திருப்பது கண்டறியப்பட்டது. இந்த வேதிப் பொருட்கள் நரம்பியல் கோளாறுகளையும், கருவுறுதல் கோளாறுகளையும் ஏற்படுத்தக் கூடியவை. ஆர்கனோ பாஸ்பேட் என்ற பூச்சிக் கொல்லியின் பயன்பாட்டினால் ஆட்டிஸம் எனப்படும்

கவனச் சிதறல் நோய் குழந்தைகளிடம் ஏற்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு சூழலியல் பொறுப்பற்ற மனித நடவடிக்கைகளால், புவியின் உயிர்ச் சூழல் நஞ்சாக்கப்பட்டுள்ளது.

நவீன சுற்றுச்சூழல் இயக்கம் உருவாவதற்குத் தூண்டுகோலாக இருந்த கடல் உயிரியலாளர், "அமைதியான வசந்தம்" என்ற உன்னதப் படைப்பின் ஆசிரியர் ரேச்சல் கார்சன் அவர்கள் "வேகத்தையும், அளவையும், விரைவாக எளிதாகப் பெறும் இலாபத்தையுமே கடவுளாக வணங்கும் சமூகமே சுற்றுச்சூழல் சீரழிவுக்கான முக்கிய காரணமான வலியுறுத்துகிறார்.

விவிலியத்தின் முதல் கட்டளையை பின்வருமாறு மாற்றுவதன் மூலம் முதலாளித்துவத்தின் சாரத்தைப் பெற முடியும்: "மூலதனத் திரட்டலைத் தவிர உனக்கு வேறு கடவுள்கள் இல்லை." சுற்றுச்சூழல் நிபுணர் ரிச்சர்ட் லெவின்ஸ் கூறுகிறார்: "முதலாளித்துவத்தில் விவசாயம் என்பது இலாபத்திற்காகச் செய்யப்படுகிறதே தவிர உணவு உற்பத்தி செய்வதற்காக அல்ல. உணவு என்பது ஒரு துணைவிளைவாகவே உள்ளது. . . . சுகாதார சேவை என்பது ஒரு சரக்கு, உடல்நலம் என்பது துணைவிளைவே. "

முதலாளித்துவ அமைப்பில் நுகர்வு என்பது இரண்டாம்பட்சமானது, ஒரு துணைவிளைவைப் போன்றது. மருந்து நிறுவனங்களுக்கு ஒரு தடுப்பு மருந்து எவ்வாறு செயல்படும் என்பது இரண்டாம்பட்சம்தான். அதை விற்றுப் பெறும் இலாபமே முதன்மையானதாகவும், அவற்றின் உந்துசக்தியாகவும் உள்ளது. முதலாளித்துவத்தில் பயன்பாடு, நுகர்வு என்பது இரண்டாம்பட்ச முக்கியத்துவம் கொண்டதாகவும், இலாபமே முதன்மையான முக்கியத்துவம் கொண்டதாகவும் இருப்பது இந்த அமைப்பின் அடிப்படைக் கோளாறு.

முதலாளித்துவத்திற்கு நீண்ட காலத்திற்கு முன்பே சந்தைகள் இருந்த போதிலும், சந்தையில் இலாபத்திற்கு விற்பனை செய்வதற்காகவே பொருட்களின் உற்பத்தியை ஒழுங்கமைக்கும் ஒரு பொருளாதாரம் முதலாளித்துவத்திற்கு மட்டுமே தனித்துவமானது.

செல்வத்திற்கு ஒரு வரம்பிடாமல் இருந்தோமென்றால் அதுவும் ஒரு பெரிய வறுமை என்று குறிப்பிடுகிறார் மார்க்சின் அபிமானத்துக்குரிய தத்துவஞானி எபிகூரஸ். நாம் எவ்வளவுதான்

செல்வம் சேர்த்துக் கொண்டிருந்தாலும் அது நமக்குக் குறைவாகத்தான் தெரிகிறது என்றால் அதுவும் நம்மைப் பீடித்துள்ள வறுமையையே குறிக்கிறது. போதுமென்ற மனநிலை இல்லாது நிரந்தரமான பேராசை மனநிலையைப் பெறச் செய்வதே இந்த அமைப்பின் குணாதிசயமாக உள்ளது.

வரம்புக்குட்பட்ட சூழலில் வரம்பற்ற பொருளாதார வளர்ச்சி குறித்து சூழலியல் பொருளியலாளர் ஹெர்மான் டேலி சாத்தியமற்ற கோட்பாடு என்ற கருத்தாக்கத்தை வலியுறுத்துகிறார். புவியில் உள்ள வளங்கள் எல்லையற்றவையாக இல்லை. அவை வரம்புக்குட்பட்டவையாகவே உள்ளன. அந்த வரம்பிற்குட்பட்ட வளங்களை வைத்துக் கொண்டு வரம்பற்ற பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் என்பது சாத்தியமற்றதே என்று கூறுகிறார். மற்ற எதைப் பற்றியும் கருத்தில் கொள்ளாமல் தொடர்ச்சியாக வரம்பில்லாப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முயற்சித்தோமானால் அது சாத்தியமற்றதே. நாளைய எதிர்காலத் தலைமுறைக்கும் வேண்டும் என்று விட்டுவைக்காமல் பெரும்பாலான இயற்கை வளங்கள், மூலப்பொருட்கள், காடுகள், சுரங்கங்கள், பெட்ரோலியப் பொருட்கள் என அனைத்தையுமே நாம் அதீதமாகப் பயன்படுத்தி வருகிறோம். இயற்கை வளங்களை நீடித்த அடிப்படையிலான பயன்பாட்டிற்கு உட்படுத்தாமல் உடனடித் தேவைகளுக்காகவே அதிகமாகப் பயன்படுத்துகிறோம். என்றென்றைக்குமே இவ்வாறு செய்ய முடியுமா என்றால் முடியாது. இந்த அமைப்பை இப்படியே தொடர முடியுமா என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது. ஹெர்மன் டேலியின் கோட்பாட்டையே இன்றுள்ள பொருளாதார அமைப்புக்கும் பொருத்திப் பார்க்க முடியும். முதலாளித்துவ அமைப்பைக் கேள்விக்குட்படுத்த முடியும். அமெரிக்க பாணியிலான அதீத நுகர்வு வாழ்க்கைமுறையையும், பொருளாதாரத்தையும் உலகெங்கும் கடைப்பிடிக்க வேண்டும் என்றால் அதற்குப் புவியில் உள்ள மூலப்பொருட்கள் போத மாட்டா. வரம்பற்ற மூலதனத் திரட்டலையே நோக்கமாகக் கொண்ட முதலாளித்துவ அமைப்பை என்றென்றும் நிலைக்கச் செய்ய முடியும் என்பது நடைமுறை சாத்தியமற்றதே. ஆகவே எல்லையற்ற மூலதனத் திரட்டலையும், பொருளாதார வளர்ச்சியையும் இலக்காகக் கொண்ட இப்போதுள்ள அமைப்பிலிருந்து விடுபட வேண்டும். இவ்வமைப்பிலிருந்து துண்டித்துக் கொள்வதன் மூலம்தான் புதிய சூழலியல் நாகரிகத்தை உருவாக்க முடியும். நம் புவியைக் காப்பாற்ற முடியும்.

சுற்றுச்சூழல் மாசுபடுத்தப்பட்டுப் பொருளாதாரமும் நோய்வாய்ப்பட்டிருக்குமானால்

இரண்டுக்குமே காரணமான வைரஸை உற்பத்தி அமைப்பில் காண முடியும் என்கிறார் பேரி காமனர்.

இன்றுள்ளது போலவே என்றும் தொழில்வணிகத்தைத் தொடர்வோம் என்ற வழிமுறை உலகப் பேரழிவிற்கே வழிவகுக்கும். புவியின் மீதான மனிதர்களின் சூழலியல் சுவட்டைக் குறைக்க வேண்டும். அதற்குக் குறிப்பாக வளர்ந்த நாடுகள் பொருளாதார வளர்ச்சியை நிறுத்த வேண்டும். ஏனெனில் வளரும் நாடுகள் சராசரி வாழ்க்கைத் தரத்தை அடைய முயலும் போது வளர்ந்த நாடுகளும் வளர்ச்சியையும், செல்வத்தையும் மேலும் விரிவுபடுத்த முயலுமானால் புவியால் தாங்கக் கூடிய அளவைக் காட்டிலும் சுற்றுச்சூழல் மாசுபாடு அதிகரிப்பதுடன், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலும் பற்றாக்குறை ஏற்படும். சமூகநீதியின் அடிப்படையில் செயல்பட வேண்டும். வளர்ந்த நாடுகளே காலநிலை மாற்றம் போன்ற கேடுகளுக்கு முக்கியக் காரணமாக இருந்துள்ளன என்பதால் பொருளாதார வளர்ச்சி அடைந்த வளர்ந்த நாடுகளின் வளர்ச்சியை நிறுத்த வேண்டும். அதே நேரத்தில் வளரும் நாடுகளின் வளர்ச்சியைத் தடுக்காது, அவை வளர்வதற்கான வாய்ப்புகளை அளிக்க வேண்டும். நாம் புதுப்பிக்க இயலா புதைபடிவ எரிபொருட்களான நிலக்கரி,பெட்ரோலியப் பொருட்களை அதிகளவில் பயன்படுத்தி வருகிறோம். புதுப்பிக்கத்தக்க ஆற்றலும் வரம்புக்குட்பட்டதுதான். புவியின் வளங்கள் எல்லையற்றவையாக இல்லை. வீட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு மகிழுந்து வேண்டும், 24 மணி நேரமும் வீட்டிலுள்ள அனைத்து மின்சார சாதனங்களும் உபயோகத்தில் இருக்க வேண்டும் என்று விரும்பினால் அத்தகைய தேவையைப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களைக் கொண்டு நிறைவு செய்ய முடியாது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களும் வரம்புக்குட்பட்டவையாகத்தான் இருக்கின்றன.

எனவே, சாத்தியமின்மைக் கோட்பாட்டின் படி, அமெரிக்க வாழ்க்கைத் தரத்தை அனைவரும் அடைய வேண்டும் என்றால் 2011ஆம் ஆண்டுக் கணக்கீட்டின் படி நமக்கு 6 புவிக் கோளங்கள் தேவைப்படும். புவியின் வளங்கள் வரம்புக்குட்பட்டவையாக இருப்பதால் அவற்றை அனைவருக்கும் கிடைக்கும் வகையில் முறையாகப் பகிர்ந்து பயன்படுத்த வேண்டும். அதற்காக வறுமையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று பொருள் கொள்ள வேண்டாம். புவியின் பெரும்பாலான வளங்கள் அரசியல் பொருளாதார அதிகாரங்களைத் தனதாக்கிக் கொண்ட முதலாளர் வகுப்பைச் சேர்ந்தவர்களாலேயே, ஒரு தரப்பு மக்களாலேயே அதிகம்

பயன்படுத்தப்படுகிறது. நாம் அதை அனைவருக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

இந்த உலகின் 3 பில்லியன் மக்கள் கார்பன்-டை-ஆக்சைடு போன்ற பசுங்குடில் வாயுக்கள் எதையுமே வெளியிடவில்லை. வளர்ந்த நாடுகளே பெருமளவில் மாசுக்களை வெளியிடுகின்றன என்கிறார் ஸ்டெ.்பன் பெக்கலா என்ற அறிஞர்.

வளர்ச்சிக்கான வரம்புகள் (1972) என்ற நூலின் ஆசிரியர்கள் முன்னோக்கிப் பார்த்துப் பின்வரும் முடிவுகளை அறிவித்துள்ளனர்:

உலக மக்கள்தொகை, தொழில்மயமாக்கம், மாசுபாடு, உணவு உற்பத்தி, அதீதப் பயன்பாட்டால் வளங்களில் ஏற்படும் குறைவு ஆகியவற்றில் காணப்படும் தற்போதைய வளர்ச்சிப் போக்குகள் மாறாமல் தொடருமானால், அடுத்த நூறு ஆண்டுகளில் எப்போது வேண்டுமானாலும் இந்த புவியில் வளர்ச்சியானது அதன் வரம்புநிலையை அடையலாம். மக்கள்தொகை, தொழில்துறையின் திறன் இரண்டிலும் கட்டுப்பாடற்ற திடீர் சரிவுக்கான சாத்தியப்பாடு ஏற்படும். இந்த வளர்ச்சிப் போக்குகளை மாற்றவும், சுற்றுச்சூழல், பொருளாதாரம் ஆகியவற்றில் எதிர்காலத்திலும் நிலைத்து நீடிக்குபடியான சமநிலையை ஏற்படுத்தவும் முடியும். ஒவ்வொருவரின் அடிப்படைப் பொருளாயதத் தேவைகளையும் நிறைவு செய்யும் விதமாகவும், ஒவ்வொரு தனியாளும் தன் ஆற்றலை வெளிக்கொணர சமவாய்ப்புகளை பெறும் விதமாகவும் உலகளாவிய சமநிலையை நிலைநாட்ட முடியும்.
உலக மக்கள் முதலாவதை விடுத்து, இந்த இரண்டாவது முடிவுக்குப் பாடுபட முடிவு செய்தால், விரைவில் அவர்கள் அதை அடையச் செயல்படுவார்களானால் அவர்களின் வெற்றி வாய்ப்புகள் அதிகம்.

தொழில்நுட்பமே சூழலியல் பிரச்சனை உட்பட அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வாக அமையும் என்று கூறப்படுகிறது. ஆனால் எந்தத் தொழில்நுட்பத்தை முன்வைக்கிறோம் என்பதும் பிரச்சனையாக உள்ளது. ஏனெனில் சில நேரங்களில் தொழில்நுட்பமே பிரச்சனையாகி விடுகிறது. சூழலியல் சிக்கலை ஏற்படுத்தும் அணு உலைகளையே சூழலியல் பிரச்சனைக்கான தீர்வாக முன்வைக்க முடியாது. முதலாளித்துவத்தில் எந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் அதிக இலாபம் ஈட்ட முடிகிறதோ அந்தத் தொழில்நுட்பத்திற்கே அதிக முதலீடுகள் செய்யப்பட்டு

ஊக்கமளிக்கப்படுமே தவிர அது எல்லோருக்கும் பயன்படக் கூடிய தொழில்நுட்பமாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. சுற்றுச் சூழலுக்கு அழிவேற்படுத்தும் புதைபடிவ எரிபொருள் சார்பு, நச்சுத் தன்மை உள்ள செயற்கை வேதிப்பொருட்கள் (பகுதியளவு பெட்ரோலிய வேதிப்பொருட்களிருந்து பெறப்பட்டவை), பேரணைகள், அணு ஆற்றல் ஆகிய தொழில்நுட்பங்களையே ஊக்குவித்த வரலாறு முதலாளித்துவத்திற்கு உள்ளது. தொழில்நுட்பங்களின் துணையில்லாமலே மனித உழைப்பை மலிவாகச் செயல்படுத்த முடியும் என்றால் அங்கே தொழில்நுட்ப வளர்ச்சி ஊக்கமளிக்கப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக இந்தியச் சூழலில் பாதாள சாக்கடையை சுத்தம் செய்வதற்கு அதற்கான சிறந்த தொழில்நுட்பம் இருந்த போதும் மனிதர்களே பயன்படுத்தப்படுகிறார்கள், கூடுதல் தொழில்நுட்பச் செலவுகளைத் தவிர்க்கும் விதமாக சாதிக் கட்டமைப்பின் அடிப்படையில் மலிவான மனித உழைப்பைப் பயன்படுத்துவதையே முதலாளித்துவம் விரும்பும்.

திறமிகு ஆற்றல் பயன்பாடு காலநிலை மாற்றத்திற்கான தீர்வாக முன்வைக்கப்படுகிறது. ஆனால் தொழில் நுட்ப மேம்பாடுகளும், திறமிகு ஆற்றல் பயன்பாடும் முதலாளித்துவ அமைப்பை மேலும் விரிவுபடுத்தப் பயன்படுத்தப்படுகிறதே ஒழிய அதனால் ஆற்றல் பயன்பாடு குறையவில்லை. இதுவே ஜெவோன்ஸ் முரண்பாடு எனப்படுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பொருளாதார நிபுணர் வில்லியம் ஸ்டான்லி ஜெவன்ஸ் தன் புத்தகத்தில் இப்பிரச்சினையைக் கேள்விக்குட்படுத்தினார். அது ஜெவன்ஸ் முரண்பாடு என்று அழைக்கப்படுகிறது. அவர் நிலக்கரி பற்றிய கேள்வி என்று தானெழுதிய நூலில் இப்பிரச்சினையை முதலில் எழுப்பினார்

ஒவ்வொரு புதிய நீராவி இயந்திரமும் முன்பு இருந்ததை விட நிலக்கரிப் பயன்பாட்டில் திறமிக்கதாக இருந்தது, இருப்பினும், ஒவ்வொரு மேம்பட்ட திறமிகு இயந்திரத்தின் அறிமுகமும் உற்பத்தி விரிவாக்கம் காரணமாக மேலும் அதிக அளவு நிலக்கரி நுகர்விற்கே வழிவகுத்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

எப்படிப்பட்ட பொருளாதார அமைப்பால் திறமிகு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கருத்தில் கொள்ளாமல் தொழில்நுட்பத்தை மட்டுமே தீர்வாக முன்னிறுத்த முடியாது. சமூக உறவுகளில் மாற்றம் ஏற்படுத்தாமல் தொழில்நுட்பத்தால் மட்டும் முதலாளித்துவத்தின்

சூழலியல் முரண்பாடுகளைத் தீர்க்க முடியாது என்பதற்கு ஜெவன்ஸ் முரண்பாடே முதன்மைக் காரணமாக சுற்றுச் சூழலியலாளர்களால் அறிந்தேற்கப்பட்டுள்ளது.

திறமிகு முறையில் ஆற்றலை அதிக அளவில் வரம்பற்றுப் பயன்படுத்தினாடபலும் அதன் மூலமும் சுற்றுச்சூழல் சீர்கேடு அதிகரிக்கும். திறமிகு ஆற்றல் பயன்பாட்டின் மூலம் மொத்த ஆற்றல் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும். ஆற்றலைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். பொருளாதார அமைப்பைத் தொடர்ந்து விரிவுபடுத்திக் கொண்டே சென்றால் ஆற்றல் பயன்பாட்டைக் குறைக்க முடியாது .

மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தினால் சூழலியல் பிரச்சனைகளைக் குறைக்க முடியும் என்று கூறப்படுகிறது. ஆனால் மக்கள்தொகைப் பிரச்சனையைத் தனியாகப் பரிசீலிக்க முடியாது. இந்த முதலாளித்துவ அமைப்பின் துணைவிளைவாகவும் மக்கள்தொகைப் பெருக்கம் உள்ளது. ஆகையால் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு இந்த முதலாளித்துவ அமைப்பே முக்கியக் காரணமாக உள்ளது. எப்படி என்றால், பெரும் எண்ணிக்கையில் வேலையில்லாத சேமப் பட்டாளத்தின் இருப்பே முதலாளித்துவம் இலாபகரமாக நீடித்திருப்பதற்கான உந்துசக்தியாக உள்ளது. வேலைவாய்ப்பு குறைவாக இருந்து வேலைக்கான வேண்டல் அதிகமாக இருக்கும் போதுதான் கூலியைக் கணிசமாகக் குறைக்க முடியும். சேமப் பட்டாளம் அதிகமாக இருக்கும் போதுதான் கூலிக்கான கூட்டுபேர ஆற்றல் குறையும். அதிக மக்கள்தொகையால்தான் இலாபத்தை நோக்கிய இந்த அமைப்பு இயங்க முடியும். வேலையின்மையைப் பெருகச் செய்வது முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த பண்பாக உள்ளது என்பதால் பொருளாதார அமைப்பிலிருந்து தனியாக மக்கள்தொகைப் பிரச்சனையை பார்க்க முடியாது. அதிக மக்கள்தொகை ஒரு பிரச்சனை அன்று என்பதல்ல இதன் பொருள்.மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் அதனால் மட்டுமே சூழலியல் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இயலுமா என்றால் இயலாது. மக்கள்தொகைப் பிரச்சனையைச் சரிசெய்தால், இந்த முதலாளித்துவ அமைப்பினால் ஏற்படும் பிரச்சனைகளைச் சரிசெய்ய முடியுமா என்பதே தர்க்க பொருத்தமற்ற ஒரு தவறான கேள்வி. ஜப்பானில் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 2005இல் சுழியமாகக் குறைந்து அதன் பின் தேக்கமடைந்துள்ளது. எனினும் ஜப்பானின் முதலாளித்துவ வளர்ச்சியைத் தொடர வெளிநாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

மக்கள்தொகையைக் குறைப்பதன் மூலம் சூழலியல் பிரச்சனைகளை சரிசெய்ய முடியும் என்ற கருத்தே இன்றைய பொருளாதார அமைப்பில் தர்க்கப் பொருத்தமற்றது.

முதலாளித்துவத்திற்கு இலாபமே இயக்குசக்தியாக உள்ளது. வரம்பற்ற மூலதனத் திரட்டலை நோக்கி முதலாளித்துவம் ஓடிக் கொண்டிருக்கிறது. மூலதனத் திரட்டல் குறையும் போது தான் மந்தநிலை ஏற்படும். அந்த மந்தநிலையால் உழைக்கும் மக்களே அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். பொதுவாக, மந்தநிலையின் போது சுற்றுச்சூழலின் தரம் மேம்படுகிறது. புகையின் அளவும், பசுங்குடில் வாயுக்களின் உமிழ்வும் குறைகிறது. நீர்நிலையின் கழிவுகள் குறைகின்றன, போக்குவரத்தின் அளவும் குறைகிறது, சுரங்க வளங்களின் பயன்பாடும் குறைகிறது. ஆனால் மந்தநிலையின் போது சுற்றுச்சூழலுக்கான பாதுகாப்புகளை அகற்றுவதன் மூலம் பொருளாதாரம் புதுப்பிக்கப்படும், ஏனெனில் கடினமான பொருளாதாரக் காலங்களில் சுற்றுச்சூழல் ஒழுங்குமுறைக்கான செலவு தேவையற்ற ஆடம்பரமாகக் கருதப்படும். இது சுற்றுச்சூழலுக்கு அழிவேற்படுத்தும். ஏனெனில் வளர்ச்சியைத் தூண்டுவதற்கு சூழல் பாதுகாப்புகள் தளர்த்தப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், விரிவாக்கப்பட்ட பொருளாதாரம் இப்போது அதிக ஆற்றலையும் வளங்களையும் நுகரக் கூடியது.

பொருளாதார மந்தநிலையால் உழைக்கும் மக்களே இழப்பிற்குள்ளாகி அதிகமாகppப் பாதிக்கப்படுகிறார்கள். பொருளாதார வளர்ச்சி இல்லாத அல்லது குறைந்த காலங்களில் அதிகாரவர்க்கம் கூலிகளையும், செலவுகளையும் குறைத்து பிறரதுdhu இழப்பின் மூலம் தnaங்களது செல்வத்தை அதிகரித்துக் கொள்கிறது.

இயற்கை வளங்களை அழித்து சுரங்கப் பாதை, சுரங்க வேலைகள், பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சூழலியல் அடிப்படையில் அதற்கு எதிர்ப்புக் குரல் ஓங்கும் போது முதலாளித்துவ ஆதாரவாளர்கள் கூறுவது என்னவென்றால், சுற்றுச்சூழல் என்ற பெயரில் எதற்குப் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கிறீர்கள்? வேலைவாய்ப்பை ஏன் பறிக்கிறீர்கள்? என்பது போன்ற ஒரு தவறான கருத்தாக்கத்தை முன்வைப்பார்கள். தொழிலாளர்களும் இதனால் வேலைவாய்ப்பு பறிபோகும் என்றே நோக்க முடியும். ஒரு மலையின் வளத்தை அழிக்க வேண்டுமென்பது ஒரு தொழிலாளியின் விருப்பம் அல்ல, அவர் விருப்பத்திற்கு மாறாக ஒரு வேலையை மேற்கொள்ளும் நிலைக்கு அவர் தள்ளப்படுகிறார்.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

சுற்றுசூழலை அழிக்கக் கூடிய இக்கட்டான நிலைக்கு அவர் தள்ளப்படுகிறார்.

ஒவ்வொரு பொருளாதார மந்தநிலையின் போதும் சுற்றுச்சூழல் ஓரளவிற்குத் தெளிவடைந்தால் கூட அதில் பாதிக்கப்படுவது உழைக்கும் மக்களாகத்தான் உள்ளார்கள். முதலாளித்துவத்தில் அவர்களைப் பலி கொடுத்தே சுற்றுச்சூழல் மேம்பாடு அடையப்படுகிறது.

இந்த முதலாளித்துவ அமைப்பு தொடர்ந்து இயங்க வேண்டும் எனில் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும். முதலாளித்துவ அமைப்பு வளர வளரத் தொழில்நுட்பம் மேம்படுவதால் வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை குறையும். வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையைக் குறையாமல் தக்க வைக்க வேண்டும் என்றால் பொருளாதார வளர்ச்சியை மேலும் அதிகமாக்க வேண்டும். பொதுவாக முதலாளித்துவ அமைப்பின் மூலம் முழு வேலைவாய்ப்பு நிலையை உருவாக்க இயலாது. ஏனென்றால் முதலாளித்துவத்தில் சேமப் பட்டாளத்தின் இருப்பே கூலியைக் குறைத்து, இலாபத்தைக் கூடுதலாக்கும் பொறிமுறையாகச் செயல்படுகிறது. முதலாளித்துவத்தில் போர்ப் பொருளாதாரத்தின் மூலமே அதிக வேலைவாய்ப்புகளைக் கொடுக்க முடியும். இரண்டாம் உலகப் போர் ஏற்படும் போது அமெரிக்காவில் போர் வேலைகள், அழிவு வேலைகள் மூலம் வேலையின்மை மிகவும் குறைந்து போனது. முதலாளித்துவத்தில் வேலையின்மை இல்லாத நிலையை ஆக்கப்பூர்வமான வழியில் ஏற்படுத்த முடியாது. போர்ப் பொருளாதாரத்தின் மூலம் வேலையின்மையைக் குறைக்க முடியும் என்ற போதும் போர்முறையிலுமே தொழில் நுட்பம் மேம்பட்டுள்ளதால் அதன் மூலம் பெறப்படும் வேலைவாய்ப்புகளின் அளவும் குறையும் வாய்ப்பே உள்ளது.

முதலாளித்துவம் என்பது வேலையில்லாத தொழிலாளர்களின் இருப்பைத் தொடர்ந்து உருவாக்கும் ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பில் முழு வேலைவாய்ப்பு என்பது அரிதாக மிக உயர்ந்த வளர்ச்சி விகிதங்களில் மட்டுமே ஏற்படும். ஆனால் அது சுற்றுச்சூழலின் சமநிலைக்கு மிகவும் ஆபத்தானது.

அமெரிக்காவில் கடந்த அறுபதாண்டுகளில் பொருளாதார வளர்ச்சிக்கும் வேலையின்மைக்கும்

இடையிலான உறவை ஆய்வு செய்யும் போது அமெரிக்காவின் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க (GDP) மதிப்பு ஆண்டுதோறும் 5.0 விழுக்காட்டிற்கும் அதிகமாக வளர்ந்த பதிnன்மூன்று ஆண்டுகளில் மட்டுமே வேலையின்மை அதிகரிக்கவில்லை. 5 விழுக்காட்டிற்கும் குறைவாகப் பொருளாதார வளர்ச்சி இருந்த மற்ற ஆண்டுகளில் வேலையின்மை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக மக்கள்தொகை அதிகரிக்கும் வீதத்தைக் காட்டிலும் பொருளாதார வளர்ச்சி கணிசமாக அதிகரித்தால்தான் முதலாளித்துவ அமைப்பில் வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையை அதிகம் குறையாமல் தக்கவைக்க முடியும். இல்லையெனில் வேலையின்மை அதிகரிக்கும் என்பது முதலாளித்துவ அமைப்பின் பிரச்சனையாக உள்ளது. முதலாளித்துவ அமைப்பில் குறைந்த வளர்ச்சி அல்லது வளர்ச்சியின்மை என்பது இலாபத்தைப் பெருக்க முயலும் முதலாளிகளுக்கு இலாபப் பிரச்சனையாக அமையலாம். ஆனால் உழைக்கும் மக்களுக்கு அது பேரழிவை ஏற்படுத்தும். அதனால் இந்த அமைப்புக்குள்ளே வளர்ச்சியற்ற நிலையை அடைய முடியுமா என்றால் தொழிலாளர்களை பலியிட்டுத்தான் அப்படியோர் அமைப்பைக் கொண்டுவர முடியும்.

முதலாளர்கள் தங்கள் உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் போட்டியில் தங்களை நிலைநிறுத்திக் கொள்கிறார்கள். சரக்குகளின் விலையைக் குறைப்பதன் மூலம் சந்தையில் கூடுதலான பங்குகளை கைப்பற்றிப் போட்டியாளர்களை வெளியேற்றுகிறார்கள்.

ஏகபோக முதலாளித்துவ அமைப்பில், ஒரு குறிப்பிட்ட துறையின் உற்பத்தி, சந்தை அனைத்திலுமே குறைந்த எண்ணிக்கையிலான முதலாளர்கள் / நிறுவனங்கள் மட்டுமே அதிக ஆளுகை கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக இந்தியாவில் தகவல் தொழில்நுட்பத் துறையை ஜியோ, ஏர்டெல், விக்(VIG) ஆகிய நிறுவனங்களே கட்டுப்படுத்துகின்றன. ஏகபோக முதலாளித்துவ அமைப்பில் விலைக் குறைப்பு என்பது கடைசி வாய்ப்பாகத்தான் பயன்படுத்தப்படுகிறது. எதற்குத் தேவையில்லாமல் இலாபத்தைக் குறைக்க வேண்டும் என்று முதலாளிகள் தங்களுக்குள் பேசி விலைக்கு ஒரு குறைந்தபட்ச வரம்பை நிர்ணயித்து, அதற்குக் கீழே குறைக்க வேண்டாம் என ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். இது சக போட்டியாளரை மதிக்கும் நடத்தை (corespective behavior) என அழைக்கப்படுகிறது. விலை குறைப்பதற்குப் பதிலாக

விளம்பரங்களின் மூலம் விற்பனையை அதிகப்படுத்தவே பெருமளவில் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

எந்தச் சமூகப் பயன்பாடும் இல்லாத விளம்பரங்களுக்கு அதிகச் செலவு செய்யப்படுகிறது. பொருட்களின் விற்பனை விலையில் 10-11 விழுக்காடு வரை விளம்பரத்திற்காகவே செலவு செய்யப்படுகிறது. 2005இல் 1 லட்சம் கோடி அமெரிக்க டாலர், மொத்த உள்நாட்டுப் பொருளாக்கத்தில் 9 விழுக்காடு சந்தைப்படுத்தலுக்காகவே செலவிடப்பட்டுள்ளது. 2004-5ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஆரம்ப, இடைநிலைக் கல்விக்காக வெறும் 53,600 கோடி டாலர் மட்டுமே செலவிடப்பட்டது. அமெரிக்க சில்லறைத் தொழில்துறை அதன் வருவாயில் 12 விழுக்காட்டை விளம்பரங்களுக்காகச் செலவிட்டுள்ளது.

விற்பனையை அதிகப்படுத்த ஏகபோக முதலாளிகளிக்கிடையே நடைபெறும் போட்டி கடந்த 50 ஆண்டுகளில் நுகர்வுக் கலாசாரத்தை அதிகரித்துள்ளது. மக்கள் மனிதர்களாகப் பார்க்கப்படாமல் நுகர்வோராகவே பார்க்கப்படுகிறார்கள். ஊதாரித்தனமான வாழ்வுமுறையும், கடன் பெற்று நுகர்வு செய்யும் கலாச்சாரமும் இன்று பரவலாகக் காணப்படுகிறது, அதுவே உயர்ந்த வாழ்க்கைத் தரத்துக்கு வழி என்றும் நம்பவைக்கப்படுகிறது. நமது பழக்கவழக்கங்களில் பெறும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. நாம் என்ன உண்கிறோம், அருந்துகிறோம், எப்படி வாழ்கிறோம் என்பதை பெருநிறுவனங்களே கட்டுப்படுத்துகின்றன. இணையத்திலான நம் தேடலின் அடிப்படையில் நம்மைப் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு, ஒவ்வொருவரையும் இலக்கு வைத்துத் தம் நுகர்வோராக்கும் தொடர் முயற்சி செய்யப்படுகிறது. எந்த சமூக விழுமியமும் இல்லாத ஒட்டுண்ணி அமைப்பாக விளம்பரத் துறை உள்ளது

பன்னாட்டுப் பெரு நிறுவனங்கள் பிற நாடுகளில், பெரும்பாலும் ஆப்பிரிக்காவில் நிலங்களை அபகரித்துள்ளன. அங்கே தங்கள் நாடுகளுக்கான உயிரி எரிபொருள், உணவு உற்பத்திக்குப் பயன்படுத்துகிறார்கள்.

பொதுவாக முதலாளித்துவ நிறுவனங்கள் குறுகிய கால உடனடி நலன்களை அடிப்படையாகக் கொண்டுதான் செயல்படுகின்றன. ஆனால் நீடித்த நலன்களை அடிப்படையாகக் கொண்டு, நீண்ட காலப் பயன்பாடு கருதிச் செயல்படுவதே சமூகத்திற்கு நலம் பயக்கும்.

முதலாளித்துவத்தின் நலன்கள், சமூக நலன்களுக்கு முரண்பட்டிருக்கின்றன என்பதால் சமூக நலன்கள் அடிப்படையில் அதனால் செயல்பட முடியாது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பிரிட்டிஷ் பெட்ரோலியம் என்ற நிறுவனம் அதிக எண்ணெய்க் கசிவினால் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தியது. அந்த நிறுவனத்தின் முதன்மை நிர்வாக அலுவலர், ஜான் பிரௌன் ”பெட்ரோலியத்திற்கு அப்பால் (beyond petroleum) என்ற கருத்தை முன்வைத்தார். பெட்ரோலியத்தை மட்டுமல்லாது சுற்றுச்சூழலையும் கவனத்தில் கொள்ள வேண்டும், சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்று பொருள். 2004இல் மில்டன் ஃபிரைட்மேன் என்ற முதலாளித்துவ அறிஞரிடம் ”தலைமை நிர்வாக அதிகாரி ஜான் பிரவுன் தனது சூழலியல் அக்கறைக்காக பிரிட்டிஷ் பெட்ரோலிய நிறுவனத்தின் பொருளாதார நலன்களைத் தியாகம் செய்யும் அளவிற்கு போகலாமா? என்று கேட்கப்பட்டது.
ஃபிரைட்மேன் இவ்வாறு பதிலளித்தார்:

"இல்லை. . . . அவர் தன் சொந்த பணத்தைக் கொண்டு அவ்வாறு செய்யலாம். சுற்றுச்சூழல் நலன்களுக்காக நிறுவனத்தை சரியாகத் திறம்பட இயக்கவில்லையென்றால் அவர் நெறியற்றவர் என்றே நான் நினைக்கிறேன். அவர் எவ்வளவு உயர்ந்த பதவியை வகித்தாலும் கூட அவர் பங்குதாரர்களின் ஊழியரே, அவர்களுக்காகச் செயல்படும் தார்மிகப் பொறுப்புடையவர். அதிக இலாபம் ஈட்டுவதும் பங்குதாரர்களின் பங்குகளை அதிகபட்சம் உயரச் செய்வதுமே ஒரு தலைமை நிர்வாக அதிகாரியின் பொறுப்பு.”

முதலாளித்துவம் ஒவ்வொருவரும் தன்னலத்தின் (பேராசை) அடிப்படையில் செயல்படுவதே பொதுநலனையும் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆடம் ஸ்மித் கூறுகிறார்: “கசாப்புக்காரன், மதுபானம் தயாரிப்பவர் அல்லது ரொட்டி சுடுபவரின் தயவில் நாம் நம் இரவு உணவை எதிர்பார்ப்பது இல்லை, அவர்கள் தன்னலத்துடன் இருப்பதால்தான் பெறுகிறோம்.” முதலாளித்துவ அமைப்பைத் தன்னலமும் பேராசையுமே இயக்குகிறது மனிதத் தேவைகள் வெறும் துணைவிளைவாகவே நிறைவு செய்யப்படுகின்றன. பொருளாதார நிபுணர் டங்கன் ஃபோலே, ஆடம் ஸ்மித்தின் கருத்தாக்கத்தையும் அதனால் சுற்றுச்சூழலிலும், சமூகத்திலும் ஏற்பட்ட பகுத்தறிவின்மையையும் "ஆடமின் தவறான வாதம்" என்று குறிப்பிட்டுள்ளார். " தனிநபரின் பேராசையும், தனிநபரின் ஆதாயமுமே முக்கியமானது

என்ற அனுமானத்தில் நாம் தொடர்ந்து செயல்பட்டால், [சுற்றுச்சூழலும்] பொதுச்சொத்தும் அழிக்கப்படும். வருங்கால சந்ததியினர் உயிர்வாழ வேண்டுமெனில் மற்ற மனித விழுமியங்களும் வெளிப்படுத்தப்பட வேண்டும்” என்று நோம் சாம்ஸ்கி கூறியுள்ளார்.

"பேராசை, thannaதன்னலம், போட்டித் திறன், பிறரைச் சுரண்டுதல், நுகர்வியம் ஆகிய பண்புகள் பள்ளிகளிலும் ஊடகங்களிலும் பணியிடங்களிலும் தொடர்ந்து மக்களிடம் போதிக்கப்படுகிறது.

<u>உண்மையின் தலைகீழ் திருப்பம்:</u>

அயன்மைப்பாட்டை ஏற்படுத்துவதே முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த பண்புகளில் ஒன்றாக உள்ளது. முதலாளித்துவம் தலைகீழாகத் திருப்பபட்ட உலகமாகிறது. அங்கே இயற்கை, மனித சமூகத்தின் மதிப்புகளும், படைப்பாற்றலும் மதிக்கப்படுவதில்லை. இயற்கையை விட இன்றுள்ள முதலாளித்துவப் பொருளாதார அமைப்பே முக்கியமானதாகவும், பாதுகாக்கப்பட வேண்டியதாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

சுற்றுச்சூழல் அமைப்புகளில் புவி வெப்பமாதலைத் தடுப்பதற்கான உத்திகளில் புவிக் கோளத்தைப் பாதுகாப்பதில் அக்கறை செலுத்தாமல், எந்த அமைப்பால் இப்புவிக்கோளம் அச்சுறுத்தப்படுகிறதோ, அந்த முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாப்பதிலேயே அதிக அக்கறை செலுத்தும் போக்கே காணப்படுகிறது.

ஐநா பொதுச் செயலாளர் பான் கீ மூன் "புவி வெப்பமாதலை எதிர்த்துப் போராடுவதற்கான அவசர நடவடிக்கை" என்ற தலைப்பில் உரையாற்றும் போது “எல்லா இடங்களிலும் வளர்ச்சிக்குக் கடுமையான அச்சுறுத்தலாக இருக்கும் காலநிலை மாற்றத்தின் உலகளாவிய சவாலை நாம் முனைப்புடன் எதிர்கொள்ள வேண்டும்.” என்று கூறியுள்ளார். இதில் முதலாளித்துவ வளர்ச்சி காலநிலை மாற்றத்தைத் தூண்டுவதன் மூலம் புவியின் சுற்றுச் சூழலுக்கு அச்சுறுத்தலாய் இருப்பதாகக் கருதப்படவில்லை. மாறாக கால நிலை மாற்றமே முதலாளித்துவ வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாய் இருப்பதாகக் கருதப்படுகிறது.

முதலாளித்துவத்தை பசுமையாக்க முடியுமா.?. முதலாளித்துவத்தை சீர்திருத்துவதன் மூலம் சூழலியல் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும், பசும் முதலாளித்துவத்தின் மூலம் தீர்வு பெற

முடியும் என்ற கருத்தாக்கம் முன்வைக்கப்படுகிறது.

அதில் ஒரு பெரும் சிக்கல் உள்ளது. இலாபம் பெருக்குவதையும், முடிவில்லாமல் மூலதனத் திரட்டலை வரம்பற்ற முறையில் விரிவுபடுத்துவதையும் வேட்கையாகக் கொண்ட அமைப்பை, உலகிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் விலை வைத்து சரக்காக்கும் இதயமற்ற அமைப்பை ஒரு போதும் பசுமையாக்க முடியாது.

.முதலாளித்துவம் புறத் தாக்கம் அனைத்தையும் வெளியே வைத்துள்ளது. அவை அனைத்தையுமே முதலாளித்துவத்திற்குள் உள்ளிணைத்தோம் என்றால் முதலாளித்துவம் முதலாளித்துவமாகத் தொடர முடியாது என்கிறார் டேவிட் ஹார்வி.

சூழலியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண என்ன செய்ய வேண்டும்?

கார்பன் வரியை அறிமுகப்படுத்த வேண்டும். கார்பன்-டை-ஆக்சைடு உமிழ்வைக் குறைக்காத அனல் மின் நிலையங்கள் இயங்குவதைத் தடை செய்ய வேண்டும்.

புதிதாக செயல்படுத்தப்படும் எண்ணெய் துரப்பன திட்டங்களைத் தடை செய்ய வேண்டும்.

வளர்ந்த நாடுகள் அவர்களுடைய சூழலியல் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்காமல் செயல்படுத்துமாறு நிர்ப்பந்திக்க வேண்டும்.குறிப்பாக அமெரிக்காவைக் கூடுதல் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும். வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கு உதவி செய்ய வேண்டும். ஏற்கெனவே அழிவுக்குட்பட்ட இயற்கை வளங்களை மேலும் அபகரிக்காமல் பாதுகாத்திட வேண்டும்.

ஆற்றல் பயன்பாட்டுத் திறனை அதிகரிப்பதோடு நிறுத்தி விடாமல் ஆற்றல் பயன்பாட்டையும் குறைக்க வேண்டும். எல்லாவிதமான பொதுப் போக்குவரத்து முறையையும் அதிகமாக பயன்படுத்த வேண்டும்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பங்களையும் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டை நிறுத்தி அணு ஆற்றல், உயிரி எரிபொருளைப்

பயன்படுத்தாமல் முற்றிலும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை பயன்படுத்த வேண்டும்.

சுற்றுசூழல் நெறிமுறைகளை வலுப்படுத்த வேண்டும். சூழலுக்குகந்த வேளாண் உணவு உற்பத்தி முறையை ஏற்படுத்த வேண்டும். தொழில்மய பண்ணை வளர்ப்புமுறையை நிறுத்தவேண்டும்.

நகரமயமாக்கத்தை முறைப்படுத்தி,நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையில் காணப்படும் தீவிர முரண்பாடுகளைக் களைய வேண்டும். நிலச்சீர்திருத்தத்தின் மூலம் அனைவருக்கும் சமமான நிலப்பயன்பாடு கிடைக்குமாறு செய்யவேண்டும்.

நன்னீரை தனியார்மயப்படுத்துவதற்கு முடிவுகட்ட வேண்டும்.அனைவருக்கும் நன்னீர் கிடைக்கப்பெறச் செய்வதை அடிப்படை உரிமையாக்க வேண்டும்.

மீன்பிடித்துறையை ஒழுங்குக்குட்டுப்படுத்த வேண்டும்.அழிந்து வரும் தாவர இனங்களை பாதுகாக்கவேண்டும். பன்மைத்துவத்தை பாதுகாக்கவேண்டும்.அழிவின் விளிம்பில் இருக்கும் உயிரினங்களையும், அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாக்கவேண்டும்.

பொதுச்சுகாதார சேவையை நடைமுறைபடுத்த வேண்டும்.அனைவருக்கும் சரியான ஊதியத்துடன் வேலைவாய்ப்புகளை கிடைக்கப்பெறச் செய்யவேண்டும். அனைவருக்கும் போதிய அளவு தரமான உணவு கிடைக்குமாறு செய்யவேண்டும்.

இயற்கை வளங்களின் பயன்பாடுகளை அனைவருக்கும் கிடைக்கப்பெற செய்யவேண்டும்.
சூழலியல் நெருக்கடிகளால் விளிம்பு நிலை மக்கள் பாதிக்கப்படும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

ராணுவ செலவுகளை குறைக்க வேண்டும். ஏகாதிபத்திய போர்ச் செலவுகளை நிறுத்த வேண்டும். அயல் நாட்டில் உள்ள ராணுவத் தளங்களை அப்புறப்படுத்தவேண்டும். இதற்கு ஒதுக்கப்பட்டத் தொகையை சமூகத்தேவைகளுக்காகவும், சூழலைப் பாதுகாக்கவும் பயன்படுத்த வேண்டும்.

சூழல் மேம்பாட்டுக்கான போராட்ட செயல்பாடுகளில் பங்கேற்பதுடன், எவ்வாறு இந்தப்p பொருளாதார அமைப்பே சூழலியல் நெருக்கடிகள் ஏற்படுவதற்குக் காரணமாக உள்ளது என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமூக மாற்றத்திற்காகச் செயல்படும் அனைவருடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

கார்ல் மார்க்ஸ் மனிதருக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவை, வளர்சிதைமாற்ற உறவுகள் என்றே குறிப்பிட்டார். அதாவது இயற்கையின் பிரிக்க முடியாத அங்கமே மனிதர்கள் என்ற பொருளிலே மார்க்ஸ் இப்படிச் சொன்னார். முதலாளித்துவ அமைப்பிலுள்ள மக்கள் அயன்மைப்பாட்டிற்கு உட்படுகிறார்கள். முக்கியமாக இயற்கையிடமிருந்து அயன்மைபட்டுள்ளார்கள் என்பதையும் மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார். பெருந்தொகையான மக்கள் தொழில்மயமாக்கப்பட்ட ஒரு நகரத்தில் இருக்கும் நிலை ஏற்படும் போது அவர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான பரிமாற்ற உறவுகளில், வளர்சிதைமாற்ற முறிவு (metabolic rift) ஏற்படுகிறது. நகர்ப்புறங்களில் அதிகரித்து வரும் மக்களுக்கான உணவு கிராமங்களிலிருந்து பெறப்படுகிறது. ஆனால் இயற்கையிடமிருந்து பெறப்பட்டவை மீண்டும் இயற்கையை அடையாதவாறு வளர்சிதை மாற்ற முறிவு ஏற்படுகிறது என்கிறார்.

பொருளாதாரத்திற்கும் சூழலியலுக்கும் இடையில் காணப்படும் "வளர்சிதை மாற்ற முறிவை"" சரிசெய்ய இயற்கையோடு இயைந்த முறையில் புதிய வாழ்க்கைமுறை, உற்பத்தி முறை, உணவு பயிர் செய்யும் முறை, போக்குவரத்து என அனைத்தையுமே மாற்றத்திற்குட்படுத்த வேண்டும்.

ஒரு சுற்றுச்சூழல் புரட்சி என்பது சாத்தியம் மட்டுமல்ல அது மிகவும் அவசியம். இயற்கையையும், மக்களையும் சுரண்டும் இந்த அமைப்பிலிருந்து விடுதலை பெறுவதே சூழலியல் புரட்சியாகும்.

# தோழர் சுபவீ அவர்களுக்குத் திறந்த மடல்

*== தியாகு ==*

## திராவிடம் மொழி? திராவிடம் இனம்? திராவிடம் நாடு?

திராவிட வல்லுநர் மன்றம் சென்ற மே 18ஆம் நாள் இரவு 'The DRAVIDIAN STOCK' என்ற தலைப்பில் ஒழுங்கு செய்திருந்த இணையக் கருத்தரங்கில் உங்கள் உரை கேட்டேன். அதே உரை மே 21ஆம் நாள் முரசொலி நாளேட்டிலும் வெளியிடப்பட்டிருக்கக் கண்டேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் தம்மைப் பற்றி Dravidian Stock என்று அறிமுகம் செய்து கொண்டிருப்பதை ஒட்டி எழுந்துள்ள விவாதத்தில் உங்கள் பங்களிப்பாக இந்த உரை அமைந்துள்ளது.

திராவிடம் என்ற சொல் அரசியல் அரங்கில் புழங்கத் தொடங்கிய வரலாற்றுப் பின்னணியை எடுத்துரைத்து விட்டுச் சொல்கின்றீர்கள்:


"எல்லாம் தெரிந்திருந்தும், கற்றறிந்த சிலரே இதில் உள்நுழைந்து குறுக்குச்சால் ஓட்டுகின்றனர்."

உங்கள் நெடுக்குச் சாலின் ஊடே குறுக்குச் சால் ஓட்டும் அந்தக் கற்றறிந்த சிலரில் யாரெல்லாம் உண்டோ இல்லையோ - நான் உண்டு என்பது மட்டும் தெளிவாகப் புரிகிறது. சில நாள் முன்னதாக ஆதன் வலைக்காட்சிக்கு நான் இதே பொருள் குறித்து வழங்கி விரிவாகக் காணப்பெற்ற செவ்வியையே "ஒருவர் ஒரு நேர்காணலில்" கூறியவை என்று சொல்லி மறுத்துரைக்க முற்பட்டுள்ளீர்கள் என்பது தெளிவு.

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் திமுக நண்பர்களுக்கு அரசியல் கல்வி புகட்டும் உங்கள் பாராட்டத்தக்க முயற்சி இந்த உரையிலும் வெளிப்படுகிறது.

நீங்கள் சொல்கின்றீர்கள்: 'தமிழ்' என்பது நம் மொழியின் பெயர், 'தமிழர்' என்பது நம் இனத்தின் பெயர், 'தமிழ்நாடு' என்பது நம் நிலத்தின் பெயர். நூற்றுக்கு நூறு உண்மை. அப்படியானால் திராவிட மொழி, திராவிட இனம், திராவிட நாடு என்பன எங்கிருந்து வந்தன என்ற கேள்வி சரியானதுதான்."

நம் மொழி தமிழ். இனம் தமிழர் நிலம் தமிழ்நாடு இது நூற்றுக்கு நூற்றுக்கு உண்மை என்று அறுதியிட்டுரைக்கின்றீர்கள். அதாவது திராவிட மொழி என்றோ திராவிடர் இனம் என்றோ



சென்னை 21. 5. 2021 முரசொலி 9

# BELONG TO DRAVIDIAN STOCK

திராவிட வல்லுநர் மன்றத்தின் (DPF) நிறுவனர் நிதி அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மன்றத்தின் பொறுப்பாளர்கள் புகழ் காந்தி, தரணீதரன், கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், இணைய வழியிலும், முகநூல் வழியிலும் கருத்துகளை செவி மடுத்துக் கொண்டிருக்கும் அருமை நண்பர்கள், அனைவருக்கும் என் அன்பு வணக்கம்!

கொரானா என்னும் பெருந்தொற்று பரவிக் கொண்டிருக்கின்ற இந்நேரத்தில், திராவிடம், ஆரியம், தமிழ்த் தேசியம் போன்ற விவாதங்கள் எல்லாம் தேவையா என்று தோன்றும். தேவையில்லைதான். எனினும், திராவிடம் என்று சொன்னவுடனேயே நம் மீது பாய்ந்து குதறும் சிலரைப் பார்க்கும் வேளையில், நாம் விடை சொல்லத்தான் வேண்டியுள்ளது.

நம் கழகத் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், தன் ட்விட்டர் பக்கத்தில், தன்னைப் பற்றிய ஓர் அறிமுகமாக, "தமிழக முதல்வர், திமுக தலைவர், திராவிட மரபினத்தவர்'' என்னும் குறிப்புகளைப் பதிவு செய்தார். அவ்வளவுதான்; உடனே திராவிட ஒவ்வாமையும், திராவிட எதிர்ப்பும் வெளிப்படத் தொடங்கிவிட்டன.

இருப்பினும் முதல்வர் எந்த எதிர்ப்புக்கும் எந்த விளக்கமும் சொல்லவில்லை. விளக்கம் சொல்லிக் கொண்டிருப்பதை விட, வேலை செய்து கொண்டிருப்பதே நாட்டிற்குத் தேவையானது என்பதை அவர் புரிந்து வைத்துள்ளார். சற்றுக் கவனித்துப் பார்ப்பவர்களுக்கு இன்னொன்று புரியும். கடந்த பத்து நாட்களாகவே, முதலமைச்சர் மிகக் குறைவாகவே பேசுகின்றார். தேவையானவைகளை மட்டுமே பேசுகின்றார். உலக மொழிகளிலேயே ஆகச் சிறந்த மொழி செயல்தான் என்பதை அவர் நமக்கெல்லாம் உணர்த்துகின்றார் என்றே கருதுகின்றேன்.

இருப்பினும் நம்மைப் போன்றவர்கள் சரியான சில விளக்கங்களைச் சொல்ல வேண்டியுள்ளது. இல்லையேல் அவர்களின் பொய்யுரைகளே உண்மை என்றாகிவிடும்!

"நான் திராவிட மரபைச் சேர்ந்தவன்'' என்று நம் தலைவர் குறிப்பிட்டுள்ள அந்த வரி யாருடையது, எங்கிருந்து எடுக்கப்பட்டது என்பதை நம்மில் பலரும் அறிவோம். 1962 ஏப்ரல் மாதம், இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய கன்னிப் பேச்சில் அந்த வரி இடம்பெற்றுள்ளது. "I BELONG TO DRAVIDIAN STOCK. I AM PROUD TO CALL MYSELF A DRAVIDIAN'' என்றார் அண்ணா.

அறிஞர் அண்ணாவின் உரையை முழுமையாகப் படிக்கும்போது, இன்னும் ஆயிரம் செய்திகள் அதில் உள்ளடங்கி இருக்கின்றன என்பதை நாம் அறியலாம். அண்ணாவின் உரை பற்றி விரிவாகப் பார்ப்பதற்கு முன், இன்றைய சூழலில் எந்த அடிப்படையில் 'திராவிடம்' எதிர்க்கப்படுகிறது என்பதை நாம் பார்த்துவிட வேண்டும்.

நம்மை எதிர்ப்பவர்கள் என்ன சொல்லி எதிர்க்கிறார்கள் என்றால், "நீங்கள் ஏன் உங்களை திராவிடன் என்று சொல்லிக் கொள்கின்றீர்கள்? தமிழன் என்பதுதானே சரி. திராவிடன் என்று சொல்லிச் சொல்லி, கடந்த ஒரு நூற்றாண்டாகத் தமிழை, தமிழ் முகத்தை, தமிழர் முகவரியை அழிக்கின்றீர்கள்'' என்கிறனர்.

திராவிடன் என்று சொல்லிக் கொள்ளும் நாம், தமிழை, தமிழ் இனத்தை, தமிழ்ப் பண்பாட்டை மேம்படுத்தியிருக்கிறோமா அல்லது இழிவுபடுத்தி இருக்கிறோமா என்னும் கேள்விக்கு விடை சொல்ல வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

'திராவிடம்' என்ற சொல் எந்தெந்தக் காலகட்டங்களில், என்னென்ன பொருளில் ஆளப்பட்டுள்ளது; இன்று அதன் பொருள் என்னவாக இருக்கிறது என்பதை நாம் விளக்க வேண்டும். "திராவிடன் என்று சொல்லாதே, தமிழன் என்று சொல்'' எனக் கூறுகின்றவர்கள், ஏதோ திராவிடமும் தமிழும் எதிரெதிரானவை என்பது போலப் பேசுகின்றனர். உண்மையில் 'ஆரியம்' என்பதுதான் 'திராவிடத்தின் எதிர்ச்சொல்' இவர்கள் ஆரியத்தை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் தமிழைக் கொண்டுவந்து வைக்கின்றனர்.

இதற்கு ஓர் உள்நோக்கம் இருக்கிறது. உண்மையான எதிரிக்குப் பதிலாக, அந்த இடத்தில், இணக்கமான ஒன்றைக் கொண்டு வருவதன் மூலம், எதிரி தப்பித்துச் செல்வதற்கு வழிவகுக்கின்றனர் என்றே இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்போது நாம் 'திராவிடம்' என்ற சொல்லை வரலாற்று அடிப்படையில் நோக்குவோம்.

'தமிழ்' என்பது நம் மொழியின் பெயர், 'தமிழர்' என்பது நம் இனத்தின் பெயர், 'தமிழ்நாடு' என்பது நம் நிலத்தின் பெயர். நூற்றுக்கு நூறு உண்மை.

அப்படியானால், திராவிட மொழி, திராவிட இனம், திராவிட நாடு என்பன எங்கிருந்து வந்தன என்று கேள்வி சரியானதுதான். இனம் என்று எடுத்துக் கொண்டால், உலகம் முழுவதும், தொடக்கத்தில் மரபினங்கள் (Ethnic Race) இருந்தன. பிறகு அவை தேசிய இனங்களாகப் (National Race) பரிணாம வளர்ச்சி பெற்றன. நம் பழைய மரபினத்தின் பெயர் 'திராவிடர்' என்பது. ஆனால் இன்று 'திராவிடம்' என்னும் சொல், மொழியை, இனத்தை, நாட்டைக் குறித்ததிலிருந்து விடுபட்டு, ஒரு கருத்தியலை, ஒரு சித்தாந் தத்தைக் குறிக்கும் சொல்லாக மாற்றம் பெற்றுள்ளது. அதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன.



**சுப. வீரபாண்டியன்**
பொதுச்செயலாளர்
திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை

19 ஆம் நூற் றாண்டின் மத்தியில், கால்டு வெல், 'திராவிட மொழிக் குடும்பங்களின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலை வெளியிட்ட பின்பே, 'திராவிடம்' என்னும் சொல் பெருவழக் காயிற்று. ஆனால், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில், அச்சொல் ஓர் அமைப்பின் பெயரில் இடம்பெற்றது.

ஆம், 1892 ஆம் ஆண்டு, அயோத்திதாசப் பண்டிதர், "ஆதிதிராவிட ஜனசபை'' என்று தன் அமைப்பிற்குப் பெயர் சூட்டினார். அவரைத் தொடர்ந்து, 1894 இல், ரெட்டைமலை சீனிவாச னார், "திராவிட மகா ஜனசபை'' என்னும் அமைப்பைத் தொடங்கினார். அங்குதான், திராவிடம் என்பது ஒரு சமூக அமைப்பின் பெயராகி, ஒரு கருத்தியல் வடிவத்தைப் பெறத் தொடங்கியது. தந்தை பெரியார் காலத்தில், அக்கருத்தியல் முழுமை பெற்றது.

அது என்ன கருத்தியல்? சமத்துவத்தை

> **இருப்பினும் முதல்வர் எந்த எதிர்ப்புக்கும் எந்த விளக்கமும் சொல்லவில்லை. விளக்கம் சொல்லிக் கொண்டிருப்பதை விட, வேலை செய்து கொண்டிருப்பதே நாட்டிற்குத் தேவையானது என்பதை அவர் புரிந்து வைத்துள்ளார். சற்றுக் கவனித்துப் பார்ப்பவர்களுக்கு இன்னொன்று புரியும். கடந்த பத்து நாட்களாகவே, முதலமைச்சர் மிகக் குறைவாகவே பேசுகின்றார். தேவையான வைகளை மட்டுமே பேசுகின்றார். உலக மொழிகளிலேயே ஆகச் சிறந்த மொழி செயல்தான் என்பதை அவர் நமக்கெல்லாம் உணர்த்துகின்றார் என்றே கருதுகின்றேன்.**

நோக்கிய சமூகநீதிக் கருத்தியல். சாதி ஒழிப்பும், பாலின சமத்துவமும் 'பெரியாரியம்' என்று பெயர் பெற்றன. அதனையே நாம் 'திராவிடம்' என்கிறோம்.

அயோத்திதாசர் 'திராவிடம்' என்ற பெயரில் அமைப்பைத் தொடங்கினாலும், 1906 இல் அவர் நடத்திய ஏட்டிற்கு "ஒரு பைசா 'தமிழன்''' என்று தானே பெயர் சூட்டினார். திராவிடத்தைக் கைவிட்டு விட்டாரே என்று கேட்கின்றனர். அவர் திராவிடம் என்னும் சொல்லையோ, அதன் கருத்தியலையோ இறுதிவரையில் கைவிட வில்லை என்பதுதான் உண்மை. 1914 இல் அவர் இறந்து போகும் வரையில் அந்தச் சொல்லைப் பெருமை யுடன் கையாண்டார்.

1910 டிசம்பர் 14 அன்று, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு பற்றிய செய்தியில், அயோத்தி தாசர், "இத்தேசப் பூர்வச் சரித்திரங்களைக் கொண்டும், இத்தேசப் பூர்வச் சரித்திரங்கள் ஆதாரங்களைக் கொண்டும், பூர்வ குடிகளை, சாதி பேதமுள்ள இந்துக்களினின்று பிரித்து, சாதி பேதமற்ற திராவி டர்கள் என்றே எழுதும்படி யான உத்தரவளிக்க வேண்டுகிறோம்'' (ஞான அலோசியஸ் – "அயோத்திதாசர் சிந்தனைகள்'' – தொகுதி 1 – பக்.307–08) என்று குறிப்பிடுகின்றார்.

எனவே சாதி பேதமற்ற இந்துக்களே திராவிடர்கள் என்பது தெளிவாகின்றது. திராவிடர்களும் தமிழர்களே. ஆனால் சாதி பேதமற்ற, பாலின சமத்துவத்தை ஏற்கும் தமிழர்கள் திராவிடர்கள் ஆகின்றனர்.

1913 ஆம் ஆண்டு, மறைமலை அடிகளாரும், சென்னையில், "திராவிட நாகரிகம்'' என்னும் தலைப்பில் இரண்டு நாட்கள் உரையாற்றி யுள்ளார்.

இன்னொரு இடத்திலும் திராவிடர்கள் என்பதற்கான விளக்கம் கிடைக்கிறது.

நீதிக் கட்சியின் சார்பில், 01.06.1917 அன்று திராவிடன் என்று ஓர் ஏடு வெளியாகியது. அந்த ஏட்டிற்கு அந்தப் பெயரை எப்படித் தேர்ந்தெடுத்தோம் என்று அந்த ஆசிரியர் குழுவில் இருந்த எஸ்.எஸ். அருணகிரி என்பவர் ஒரு விளக்கம் சொல்லியுள்ளார். "ஏட்டின் ஆசிரியர் பக்தவத் சலம், டி.எம்.நாயர், நான் எல்லோரும் பத்திரிகை யின் பெயர் பற்றிப் பேசினோம். பார்ப்பனர் அல்லாத அனைவரையும் குறிக்கும் ஒரு சொல்லாக இருந்தால் நல்லது என்ற கருத்து பேசப்பட்டது. அந்த அடிப்படையில்தான் திரா விடன் என்ற பெயரை வைக்க முடிவு செய் தோம்'' என்கிறார். (நீதிக்கட்சி நூற்றாண்டு விழா மலர்)

எனவே இங்கும் பாப்பனர் அல்லாதோரைக் குறிக்கும் கருத்தியலாகவே திராவிடம் உருப் பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

எல்லாவற்றையும் தாண்டி, திராவிடர் கழகம் தொடங்கிய அதே 1944 ஆண்டின் இறுதியில் (டிசம்பர் 29–31) கான்பூரில் மூன்று நாள் நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றி யுள்ள உரையில் மேலும் தெளிவான விளக்கம் நமக்குக் கிடைக்கிறது. அந்த மாநாட்டில், "உங் களைத் தீண்டாமையும் சாதி இழிவும் அணுகாத வண்ணம் ஏதேனும் ஒரு மதத்திற்கு நீங்கள் மாறுவதாக இருந்தால் மாறிக்கொள்ளலாம். மதம் எதுவும் வேண்டாம், அதே நேரத்தில் தீண்டாமை, சாதி இழிவு எங்களை அணுகிடக் கூடாது என்று நீங்கள் சொல்வீர்களேயானால், உங்களை 'திராவிடன்' என்று அழைத்துக் கொள்ளுங்கள்'' என்கிறார் பெரியார்.

இப்போது திராவிடக் கருத்தியல் தெள்ளத் தெளிவாக ஆகிவிட்டது. சாதி இழிவையும், தீண்டாமையையும் ஏற்றுக் கொள்ளாத தமிழர்கள் 'திராவிடர்கள்' ஆகின்றனர்.

இத்தனை அடிப்படைகளையும் வைத்துக் கொண்டுதான் அறிஞர் அண்ணா, மாநிலங்கள வையில், "நான் திராவிட மரபினத்தைச் சேர்ந்தவன்'' என்கிறார். அவருடைய உரையின் அடுத்தடுத்த பகுதிகளையும் நாம் பார்க்க வேண்டும். தான் ஏன் தன்னை திராவிடன் என்று சொல்லிக் கொள்கிறார். என்பதையும் அண்ணா அவர்கள் விளக்குகின்றார். "உலகத் தவர்க்குக் கொடுப்ப தற்கு, மிக உறுதியான, மிகத் தெளிவான, மிக வேறுபட்டவை திராவிடரிடம் இருப்பதாலேயே நான் அப்படி அழைத்துக் கொள்கிறேன்'' என்கிறார். ("....it's only because I consider Dravidian have got something concrete, something distinct, something different to offer to the world at large").

ஆம்; திராவிடர்கள் மிகத் தொன்மையான இனத்தினர் என்பதனால் எல்லாம் இல்லை, அவர்களிடம் இவ்வுலகிற்குக் கொடுப்பதற்கு மிக உறுதியான சில கருத்தியல்கள் உள்ளன என்கிறார் அவர். அருகாட்டுமல்லாமல், மத நம்பிக்கை, கடவுள் வழிபாடு ஆகியனவற்றைக் கொண்டு ஒரு தேசத்தை வரையறுத்துவிட முடியாது என்றும் கூறுகிறார்.

"கன்னியாகுமரியிலிருந்து இமாலயம் வரையில் இங்கே ராமரையும் கிருஷ்ணரையும் வணங்குவதால் இதனை ஒரே தேசம் என்று சிலர் கூறுகின்றனர். அப்படிப் பார்க்க முடியாது. அவ்வாறாயின், ஐரோப்பா முழுவதும் யேசுநாதரை வணங்குகின்றனர். அதனால் அது ஒரு தேசம் ஆகிவிடுமா?'' என்றும் கேட்கிறார்.

அண்ணா அவர்கள் தன் பேச்சில் தொடர்ந்து, "நாங்கள் குறுகிய எண்ணம் கொண்டவர்கள் இல்லை. ஒரே உலகம், ஒரே அரசு என்பதைக் கூட நாங்கள் விரும்புகிறோம். ஆனால் அதற்காக எங்கள் தேசிய இன வரையறைகளை மறந்துவிட முடியாது'' (we want one world, one govern- ment. But we dont forget our national fron- tiers) என்பதுதான் அண்ணாவின் கூற்று.

இவை அனைத்தையும் வைத்துக் கொண்டுதான் "belong to dravidian stock" என்னும் முதல்வரின் குறிப்பைக் காண வேண்டும்.

எல்லாம் தெரிந்திருந்தும், கற்றறிந்த சிலரே, இதில் உள்நுழைந்து குறுக்குச்சால் ஓட்டுகின்றனர். ஒருவர் ஒரு நேர்காணலில், அன்று அண்ணா சுய நிர்ணய உரிமை (Self determination) என்பதையும் வலியுறுத்திப் பேசினாரே, அதனை ஏன் இன்றைய முதல்வர் குறிப்பிட வில்லை என்று கேட்கிறார்.

ஆம், அன்று அந்த உரையில் சுய நிர்ணய உரிமை – அதாவது, பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னாட்சி – என்பதை வலியுறுத்தவே செய்துள்ளார். ஆனால் அதற்குப் பிறகு, அதே அறிஞர் அண்ணாதானே "மாநில சுயாட்சி'' என்னும் கொள்கையையும் நமக்கு வகுத் தளித்தார்! அந்த மாற்றத்திற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றைத் தனியாக ஒரு கட்டுரை யிலேதான் நாம் பார்க்க வேண்டும்.

அதே நண்பர், அதே நேர்காணலில், "பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்....." என்றுதானே பாரதிதாசன் பாடியுள்ளார். பொங்கு திராவிடர்க்கு இன்னல் விளைத்தால் என்று ஏன் பாடவில்லையே என்று கேட்கிறார். இவையெல் லாம் இளைஞர்களைத் திசை திருப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் திட்டமிட்டுக் கேட்கப்படும் கேள்விகள்.

பாரதிதாசன் திராவிடம் பற்றியோ, திராவிடர் பற்றியோ பாடவே இல்லையா? "வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு'' என்று திராவிடர் நாட்டுப் பண் ஒன்றையே பாடியவர் அவர். அது மட்டுமில்லை. இன்னொரு கவிதையில், "இனப்பெயர் என்னென்று பிறர் என்னைக் கேட்டால்/ மனத்தினில் எனக்குச் சொல் லொணா மகிழ்ச்சி/ நான்தான் திராவிடன் என்று நவில்கையில்/ தேன்தான் நாவெல்லாம் வான் தான் என்புகழ்!'' என்று பாடியவர் அல்லரோ அவர்!

வேறொரு கவிதையில், திராவிடக் கொள்கை என்பதையும் குறித்துள்ளார். அந்தக் கவிதையின் தொடக்க வரிகள், இன்றைய சூழலுக்கும் பொருந்தும். "கோட்டையில் நாற்காலி இன்றுண்டு நாளை/ கொண்டுபோய் விடுவான் திராவிடக் காளை'' என்று தொடங்கும் அந்தப் பாடலின் அடுத்த வரிகள், "கேட்டை விளைத்துத் திராவிடக் கொள்கையை / கிள்ள நினைப்பது மடமையின் செயலே'' என்று அமைந்துள்ளன.

திராவிடர் கொள்கை என்று ஒன்று இருக்கிறது என்பதை இவ்வரிகள் உறுதிப் படுத்தவில்லையா?

**எனவே திராவிடம் என்பது மொழியின், இனத்தின், நாட்டின் பெயரை ஒரு கட்டத்தில் குறித்திருக்கலாம் என்றபோதிலும், இன்று அது ஒரு கருத்தியலாக, சித்தாந்தமாக வளர்ந்து நிற்கிறது என்பதே உண்மை. அந்த உண்மையையும், அந்தக் கருத்தியலையும் ஏற்க விரும்பாத வர்களே, முதலமைச்சரின் அடிக் குறிப்பைக் கண்டு குமுறிக் கொந்தளிக் கின்றனர்.**

**'ஆரியம் என்னும் அடிமைக் கருத்தியலுக்கு நேர் எதிரான விடுதலைக் கருத்தியல், சமத்துவக் கருத்தியலே திராவிடம் என்பதை மக்களிடம் உரத்துச் சொல்வோம்! ஒவ்வொருவரும் தங்களின் சமூக வலைத்தளங்களில் தங்களைப் பற்றிய குறிப்பில், இப்படி அழுத்தமாக எழுதுவோம்**

"WE BELONG TO DRAVIDIAN STOCK."

சொல்கின்றீர்கள். இது மாறா உண்மை. நேற்றும் இன்றும் நாளையும் உண்மை. இடைக்கால உண்மையன்று. முக்கால உண்மை. யார் எப்போது சொன்னாலும் திராவிடம் மொழியோ இனமோ நாடோ ஆகாது என்று பொருள்.

அப்படியானால் திராவிடம் என்ற சொல் ஒருபோதும் மொழியையோ இனத்தையோ நாட்டையோ குறித்திருக்க முடியாது.

ஆனால், "'திராவிடம்' என்னும் சொல், மொழியை, இனத்தை, நாட்டைக் குறித்ததிலிருந்து ஒரு கருத்தியலை, ஒரு சித்தாந்தத்தைக் குறிக்கும் சொல்லாக மாற்றம் பெற்றுள்ளது" என்று அறிவிக்கவும் செய்கின்றீர்கள். இந்த மாற்றம் எப்போது எப்படி நிகழ்ந்தது? இது இயற்கையாக நிகழ்ந்த மாற்றமா? நீங்கள் வலிந்து இட்டுக்கட்டிய மாற்றமா?

"இனம் என்று எடுத்துக் கொண்டால் உலகம் முழுவதும், தொடக்கத்தில் மரபினங்கள் (Ethnic Race) இருந்தன. தேசிய இனங்களாகப் (National Race) பரிணாம வளர்ச்சி பெற்றன. நம் பழைய மரபினத்தின் பெயர் 'திராவிடர்' என்பது."

சுபவீ அவர்களே! நம் பழைய மரபினத்தின் பெயர் திராவிடர் என்று எங்கே படித்தீர்கள்? இதற்கு இலக்கியச் சான்று உண்டா? வரலாற்றுச் சான்று உண்டா? தொல்காப்பியம் "தமிழ்கூறும் நல்லுலகம்" என்ற போதே நாம் தேசிய இனம் ஆகி விட்டோம். தமிழ்த் தேசிய இனமாக இருந்தோம், தமிழ்த் தேசமாக வளர்ந்து நிற்கிறோம். இப்போது போய் திராவிடம் என்று செயற்கையாக ஒரு வடமொழிப் பெயரைச் சூட்ட வேண்டிய தேவை என்ன?

அறிஞர் கால்டுவெல்லின் தமிழ்த் தொண்டினை அறிந்தேற்றுப் போற்றிய பாவாணரே திராவிட மொழிக் குடும்பம் என்ற அன்னாரின் விளக்கத்தை ஏற்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியாத செய்தியா? தமிழ், தெலுங்கு, துளு, கன்னடம், மலையாளம் பேசியோரைத் திராவிட இனம் என்று சேர்த்தடைத்ததும், அதே போல் சென்னை மாகாணத்தைத் திராவிட நாடெனக் குறித்ததும் வரலாற்றுப் பிழைகள் என்பதை உணர்ந்தாலும் ஒப்புக் கொள்ள உங்களுக்கு மனம் வரவில்லையோ?

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

எப்படியானாலும், திராவிடம் மொழியோ இனமோ நாடோ அல்ல என்ற தெளிவு உங்களுக்கு இருப்பது நன்று. திமுக நண்பர்களுக்கும் உங்கள் தெளிவு தொற்றிக் கொள்ளட்டும்.

ஆனால் திராவிடர் என்பதற்கு நீங்கள் தரும் புத்தம்புது இலக்கணம் அந்த சொல் மீது நீங்கள் கொண்டிருக்கும் மையலையே காட்டுகிறது. நாளை பார்ப்போம்.

(27/05/2021)

## (2) செருகலும் உருவலும் திராவிட உத்திகளா?

நம் மொழி தமிழ், நம்மினம் தமிழினம், நம் நிலம் தமிழ்நாடு என்பதில் உங்களுக்குள்ள தெளிவைப் போற்றும் போதே, நம் மொழியையும் இனத்தையும் நாட்டையும் வேறு பெயரால் அழைக்கும் முயற்சிகளை மறுதலிக்காமல் அந்தத் தெளிவு நிறைவு பெறாது என்பதைச் சுட்டிகாட்டாமல் இருக்க முடியவில்லை.

இனப் பெயராகவும் நாட்டுப் பெயராகவும் திராவிடம் என்ற சொல்லை ஆள முடியாது என்ற முடிவுக்கு வந்த பிறகும் அந்தச் சொல்லை விட்டு விட மனமில்லை உங்களுக்கு! எனவே திராவிடம் என்பது ஒரு கருத்தியல் என்ற கண்டுபிடிப்பைச் செய்துள்ளீர்கள்.

அயோத்திதாசர், இரட்டைமலை சீனிவாசனார், பெரியார்... இவர்கள் எல்லாம் திராவிடம் என்று சொல்லவில்லையா? சொன்னார்கள் அதானல் என்ன? அவர்கள் சமத்துவத்தை, சமூகநீதியைச் சொன்னார்கள் என்கின்றீர்கள். இதிலிருந்து ஒரு புதிய வரையறையைச் சமைக்கின்றீர்கள். அதாவது திராவிடம் என்பது ஒரு கருத்தியலின் பெயர் என்கின்றீர்கள். இதிலேயே நீங்கள் உறுதியாக நின்றால் நல்லது. திராவிடக் கருத்தியலை ஏற்றுக் கொண்டவர்கள் தங்களைத் திராவிடர்கள் என்று அழைத்துக் கொள்ளட்டும். நீங்களும் உங்களை திராவிடர் என்றே சொல்லிக் கொள்வதில் எனக்கு எவ்வித மறுப்பும் இல்லை. ஆனால் ஒரு மக்கள் கூட்டத்துக்கு ஒரு கருத்தியலின் பெயரைச் சூட்ட உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. தமிழர்களில் சிலர் பொதுமையராக இருப்பது போல் வேறு சிலர் திராவிடர்களாக இருக்கட்டும். இன்னுஞ்சிலர் பிற்போக்காளர்களாகவே கூட இருக்கட்டும். ஆனால் அனைவரும் இனத்தால் தமிழர்களே!

ஆனால் திராவிடர் என்பதற்கு ஒற்றை இலக்கணம் உரைத்து அதில் ஊன்றி நிற்க உங்களால் முடியவில்லையே! திராவிடர் என்றால் யார்?

"சாதி பேதமற்ற இந்துக்களே திராவிடர்கள்"!

”சாதி பேதமற்ற, பாலின சமத்துவத்தை ஏற்கும் தமிழர்கள் திராவிடர்கள்!”

”பார்ப்பனர் அல்லாத அனைவரும் திராவிடர்கள்”!

”சாதி இழிவையும் தீண்டாமையையும் ஏற்றுக் கொள்ளாத தமிழர்கள் திராவிடர்கள்”!

இத்தனையும் உங்கள் விளக்கங்கள்! அல்லது எப்படியும் நீங்கள் ஏற்றுக் கொள்ளும் விளக்கங்கள்! ஆனால் திராவிடர் என்பதற்குத் தந்தை பெரியாரும் மானமிகு ஆசிரியர் வீரமணியும் சொல்கிற விளக்கத்தை உங்கள் தலைமையிலான திராவிட இயக்கத் தமிழர் பேரவை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையே அதன் பெயர் சுட்டி நிற்கிறது.

தமிழர் என்றால் சாதி நுழைந்து விடும், திராவிடர் என்றால்தான் சாதி வராது என்கிறார்களே? ஆதன் வலைக்காட்சிக்காக என்னிடம் செவ்வி எடுத்தவரின் இந்தக் கேள்விக்கு விடை சொல்லும் போதுதான் பாவேந்தர் ”பொங்குதமிழர்” என்கிறாரே? பெரியார் ”தமிழ்நாடு தமிழருக்கே” என்கிறாரே? அவர்கள் சொன்ன தமிழரும் சாதித் தமிழர்தானா? என்று திருப்பிக் கேட்கிறேன். பாவேந்தரோ பெரியாரோ திராவிடர் என்று சொல்லவில்லை என்பதன்று என் வாதுரை. பாவேந்தர் திராவிடர் என்ற போதும் தமிழரையே குறித்தார் என்பதற்கு நீங்கள் எடுத்துக்காட்டும் அவரது திராவிட நாட்டுப் பண்ணே சான்று.

”தமிழ்நாடு தமிழருக்கே!” என்ற முழக்கம் ஏற்புடைத்த அறிவியல் காரணம் ஏதுமின்றி ”திராவிட நாடு திராவிடருக்கே!” என்ற முழக்கமாக மாற்றி எழுப்பப்பட்ட காலத்தில் திராவிட நாடு என்பது நாட்டையும் திராவிடர் என்பது இனத்தையும் குறிக்குமாறுதான் செய்யப்பட்டன அல்லவா? பெரியார் இந்த முழக்கத்தைக் கைவிட்டு ”தமிழ்நாடு தமிழருக்கே!” என்ற முழக்கத்தை மீட்டெடுத்தமைக்கும், அண்ணா பழைய முழக்கத்தை விடாமல் தொடர்ந்தமைக்கும் திராவிட(ர்?) இயக்க அறிவாளராக நீங்கள் தரும் விளக்கம் என்ன?

இறுதியாக ஒன்று: இந்த விவாதத்துக்கு மையமான அறிஞர் அண்ணா உரையை - அந்த உரையின் மையமான Dravidian Stock என்பதை மெய்யாலுமே நீங்கள் புரிந்து கொண்டுதான் பேசுகின்றீர்களா? அண்ணாவின் உரை சொல்லும் ஆயிரம் செய்திகள் என்கின்றீர்கள்! 999 செய்திகளைச் சொன்னீர்கள், ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்லாமல் விட்டீர்களே, ஏன்? அது என்ன தெரியுமா? உரையை மீண்டும் படியுங்கள்:

"I claim Sir, to come from a country, a part of India now, but which I think is of a different stock, not necessarily antagonistic. I belong to the Dravidian stock. I am proud to call myself a Dravidian….”

“நான் ஒரு நாட்டிலிருந்து வருகிறேன், அது இப்போது இந்தியாவின் பகுதியாக உள்ளது. ஆனால்

அது வேறு கூட்டத்துக்குரிய நாடெனக் கருதுகிறேன், அது பகைமை கொண்டதாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. நான் திராவிடக் கூட்டத்தை சேர்ந்தவன். என்னைத் திராவிடன் என்று அழைத்துக் கொள்வதில் பெருமை கொள்கிறேன்."

(Stock = கூட்டம் என்று தமிழாக்கம் செய்கிறேன். இனம் என்று சொல்வதிலும் தவறில்லை.)

மற்றதையெல்லாம் எடுத்துக்காட்டிய நீங்கள் ஒரு நாட்டைச் சொல்லி (அது தமிழ்நாடாகவோ திராவிட நாடாகவோ இருக்கட்டும்) அந்த நாட்டிற்குரிய இனத்தைச் சொல்கிறார் என்பதை மட்டும் ஏன் மறைத்தீர்கள்? அண்ணா சொன்ன திராவிடமும் கூட வெறும் கருத்தியல்தான் என்ற உங்கள் செருகலுக்காகச் செய்த உருவல்தானா இது?

அண்ணா கருத்தியலையே சொன்னார் என்ற உங்கள் செருகலை நிலைநிறுத்துவதற்காக அவர் நாடாகச் சொன்னதை உருவி விட்டீர்களோ? என்ற ஐயம் எழுகிறது. உங்களைப் பொறுத்த வரை இந்தச் செருகலும் உருவலும் கூட திராவிட உத்திகள் என்றே புரிந்து கொள்ளலாமா?

எதையும் தாங்கும் இதயம் இதையும் தாங்கிக் கொள்ளட்டும்!

அண்ணா தமதுரையில் குறிப்பிட்ட தன்தீர்வுரிமை (self-determination - சுய நிர்ணயம் அல்லது சுருக்கமாகத் தன்னுரிமை) என்ற கொள்கையையும் கூட உங்களால் உவந்தேற்க முடியவில்லை என்பது எனக்கு வியப்பளிக்கிறது. நாளை பார்ப்போம்.

(28/05/2021)

## (3) தமிழ்த் தேசியம் மீது உங்கள் திராவிடத்துக்கு ஏன் ஒவ்வாமை?

திராவிடம் மொழியோ, இனமோ, நாடோ இல்லை என்றாலும் அது ஒரு கருத்தியலின் பெயர் என்பதுதான் உங்கள் நிலைப்பாடு என்பதைத் தெளிவாக்கியுள்ளீர்கள். நன்று.

திராவிடம் ஒருகாலத்தில் இனத்தையோ நாட்டையோ குறித்திருந்தாலும் அது ஒரு கருத்தியலைக் குறிக்கும் நிலைக்கு மலர்ச்சி கண்டுள்ளது என்றும் உங்கள் கருத்தைப் புரிந்து கொள்ளலாம். நன்று.

ஆனால் ஒரு காலத்திலாவது அது இனமாகவோ நாடாகவோ இருந்ததா? பிறகு எப்போது இனத்தையோ நாட்டையோ குறிக்காத நிலை உருவாயிற்று எனபதற்கு உங்களிடம் எந்த

விளக்கமும் இல்லை. ஏனெனில் தந்தை பெரியார் ”தமிழ்நாடு தமிழருக்கே!” என்ற முழக்கத்தை “திராவிட நாடு திராவிடருக்கே!” என்று மாற்றிக் கொண்ட போதும், அறிஞர் அண்ணா அதே முழக்கத்தை எழுப்பிய போதும் திராவிடம் என்பதை நாட்டுக்கும் இனத்துக்கும் பெயராகக் கொண்டார்கள் என்பதில் ஐயமிருக்க முடியாது. அப்படி அவர்கள் முழங்கியது பிழை என்றால் பின்னோக்கிப் பார்த்துக் குற்றாய்வு செய்வதில் ஓர் அரசியல் மாணவனாக எனக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை. உங்களுக்கும் எவ்விதத் தயக்கமும் இருக்கக் கூடாது என்றே எதிர்பார்க்கிறேன்.

பெரியார் 1956க்குப் பின் இந்தத் தவறான முழக்கத்தைக் கைவிட்டுத் “தமிழ்நாடு தமிழருக்கே!” என்ற சரியான முழக்கத்திற்கே மீண்டு விட்டார். அண்ணா இறுதி வரை மீளவில்லை. அவர் தனிநாடு கோரிக்கையை அரசியல் அரங்கில் கைவிட்டாரே தவிர திராவிட இனம், திராவிட நாடு என்ற கருத்தாக்கங்களை இறுதி வரை கைவிடவில்லை. பெரியார் கடுமையாகச் சாடிய போதும் கைவிடவில்லை. ஈவெகி சம்பத் கூர்மையாகச் சுட்டிக் காட்டிய போதும் கைவிடவில்லை. திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்ட போதும் அந்தக் கோரிக்கைக்கான காரனங்கள் மறைய வில்லை என்பதை அண்ணா தெளிவாக்கினார். எனவே அறிஞர் அண்ணா அவர்களே திராவிடத்தை இனப் பெயராகவோ நாட்டின் பெயராகவோ ஆளவில்லை, அதனை ஒரு கருத்தியலின் பெயராக மட்டுமே கொண்டார் என்று சொல்வதற்கு அடிப்படை ஏதுமில்லை.

இப்போதைய நெருக்கடிச் சூழலில் இந்த வரலாற்று வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தாமல், பெரியார், அண்ணாவின் சமூகநீதிச் சிந்தனைகளைப் பொதுவாக முன்னெடுப்போம் என்றும், அந்தச் சிந்தனைத் தொகுப்பை திராவிடம் என்று அழைப்போம் என்றும் நீங்கள் கருதுவதாகப் புரிந்து கொள்கிறேன். திராவிடம் என்று பெயரிட்டாலும், வேறு பெயரிட்டாலும், இந்துத்துவ (பார்ப்பனிய) வல்லரசியத்துக்கு எதிராக பெரியார், அண்ணா சிந்தனைகளைக் கருத்தியல் படைக்கலனாக்குவதில் எனக்கு மாறுபாடில்லை. வரலாற்றைத் திரிக்காமலே அதைச் செய்ய முடியும் என நம்புகிறேன்.

ஆனால் அதற்காகப் பெரியாரும் அண்ணாவும் கூட திராவிடத்தை இனமாகவோ நாடாகவோ வரையறுக்கவில்லை, கருத்தியலாக மட்டுமே முன்வைத்தார்கள் என்று வாதிடத்

தேவையில்லை. குறிப்பாக, மாநிலங்களவையில் 59 ஆண்டுகள் முன்பு அண்ணா ஆற்றிய உரையில்,

“நான் ஒரு நாட்டிலிருந்து வருகிறேன், அது இப்போது இந்தியாவின் பகுதியாக உள்ளது. ஆனால் அது வேறு கூட்டத்துக்குரிய நாடெனக் கருதுகிறேன், அது பகைமை கொண்டதாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. நான் திராவிடக் கூட்டத்தை சேர்ந்தவன். என்னைத் திராவிடன் என்று அழைத்துக் கொள்வதில் பெருமை கொள்கிறேன்”

என்று இந்திய வல்லரசியத்தின் ஆட்சி மன்றத்தில் நின்று முழங்கியதை மறைக்கத் தேவையில்லை. அறிஞர் அண்ணா ஆற்றிய உரையின் பிற்பகுதியை நீங்கள் எடுத்துக்காட்டுவதும் சரியானதே.

”உலகத்தவர்க்குக் கொடுப்பதற்கு, மிக உறுதியான, மிகத் தெளிவான, மிக வேறுபட்டவை திராவிடரிடம் இருப்பதாலேயே நான் அப்படி அழைத்துக் கொள்கிறேன்" என்கிறார் ("and it's only because I consider Dravidians have something concrete, something distinct, something different to offer to the world at large')”

மிக உறுதியான, மிகத் தெளிவான, மிக வேறுபட்ட அவற்றையே திராவிடக் கருத்தியல் என்று நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள், சரிதானே? அதாவது திராவிட நாடு திராவிட இனத்துக்குரியது, அந்த இனத்துக்குரிய விழுமியங்களே திராவிடம் என்பதுதான் அண்ணா அவர்களது உரையின் சாறம். இதை எடுத்துக்காட்டுவதில் உங்களுக்கு என்ன தயக்கம்? என்னைப் பொறுத்த வரை திராவிடம் என்ற பெயரைத் தவிர வேறு மறுப்பு ஒன்றுமில்லை. ”பெயரில் என்ன இருக்கிறது?” என்று ஒதுக்கித் தள்ளி விட்டு தமிழையும் தமிழினத்தையும் தமிழ்நாட்டையுமே அண்ணா குறித்ததாகக் கொண்டு போற்றுவேன்.

திராவிடக் கூட்டம் அல்லது திராவிட இனம் என்று அண்ணா கூறியதை மீட்டுப் பயன்படுத்துவது போலவே அதே உரையில் அவர் குறிப்பிட்ட தன்தீர்வையும் (சுயநிர்ணயம் self-determination) நினைவிற்கொள்ளுங்கள் என்று நான் வேண்டிக் கொள்ளவே செய்தேன். இதற்கும் நீங்கள் மறுப்புச் சொல்கின்றீர்கள். பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடுவதற்கு முன்பு அண்ணா அப்படிச் சொன்னார், ஆனால் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு மாநில சுயாட்சிக் குறிக்கோளை ஏற்றுக் கொண்ட பின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை பொருந்தாது என்பது உங்கள் நிலைப்பாடு.

தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம் (தேசம்) என்பதும், எல்லாத் தேசிய இனங்களையும் போல் தமிழ்த் தேசிய இனமும் தன்தீர்வுரிமையைப் பிறப்புரிமையாகக் கொண்டது என்பதும் அடிப்படை உண்மைகள் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா? பிரிவினையா? மாநில சுயாட்சியா? என்பது அரசியல் கோரிக்கை தொடர்பான வினா. மாநில சுயாட்சி கோருவதால் தேசிய இனம், தேசம் என்ற தகுநிலை போய் விடாது.

திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டு, மாநில சுயாட்சிக் குறிக்கோளை திமுக ஏற்றுக் கொண்ட பின் ”மாநில சுயாட்சி” என்ற தலைப்பிலேயே முரசொலி மாறன் எழுதிய நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் நாவலர் நெடுஞ்செழியன் சொல்கிறார்:

“இந்தியாவில் மொழிவழித் தேசிய இனத்தின் வழிவந்த மாநிலங்கள் உண்மையான முழுப் பொருளும் பொதிந்த மாநில சுயாட்சி கொண்டனவாக இருக்க வேண்டும் என்பதையும் அந்த மாநிலங்களெல்லாம் தாமே விரும்பி ஏற்படுத்தும் முறையில் மத்திய கூட்டாட்சி அமைய வேண்டும் என்பதையும் திராவிட முன்னேற்றக் கழகம் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தி வருகிறது.”

திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்ட பிறகும் தமிழ்த் தேசிய இனம் என்ற கருத்தாக்கத்தை அண்ணா மட்டுமல்ல, கலைஞரும் வைகோவும் கூட எடுத்துரைத்த தருணங்கள் உண்டு. இது என்னை விடவும் உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்.

இன்னொன்றையும் தெளிவாக மனத்திற்கொள்ள வேண்டும். அதாவது மாநில சுயாட்சிக் குறிக்கோளை அடைவதற்கும் கூட தேசியத் தன்தீர்வுரிமை இன்றியமையாதது. தன் வாழ்வைத்தானே தீர்வு செய்து கொள்ளும் உரிமையற்ற ஒரு தேசிய இனம் பிற இனங்களோடு சேர்ந்து கூட்டாட்சி காண்பது எப்படி? மாநில சுயாட்சி என்பது திமுகவின் குறிக்கோள் மட்டுமல்ல, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் குறிக்கோளும் அதுவேதான் என்றால் தன்தீர்வுரிமை இல்லாமல் மாநில சுயாட்சி அடைவது எப்படி? என்பதை நீங்கள்தான் விளக்க வேண்டும்.

திமுக ஆட்சி செய்யட்டும், மாநில ஆட்சிக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு நன்மைகள் செய்யட்டும். வரவேற்போம்! ஆனால் மாநில சுயாட்சிக்குச் செல்லும் வழி இதுவன்று,

வேறு.

விடுதலையின் வழியாகத் தன்னாட்சி (சுயாட்சி) உண்டே தவிர விடுதலைக்குத் தன்னாட்சி மாற்றாகாது. விடுதலை என்றாலும் தன்னாட்சி என்றாலும் தேசியத் தன்தீர்வுரிமைதான் அடிப்படை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுகிறேன்.

திராவிடம் என்ற கருத்தியலை விளக்குவதற்கு நீங்கள் இவ்வளவு இடர்ப்பட்டிருக்கத் தேவையில்லை. "பெரியாரின் இடதுசாரித் தமிழ்த் தேசியம்தான் நான் சொல்லும் திராவிடம்" என்று நீங்கள் இரத்தினச் சுருக்கமாகச் சொல்லியிருக்க முடியும். ஏன் அப்படிச் செய்யவில்லை? பெரியார் பெயரோடு தமிழ்த் தேசியம் இணைந்து வருவதை நீங்கள் விரும்பவில்லையா? தமிழ்த் தேசியம் மீது திராவிடத்துக்கு - உங்கள் திராவிடத்துக்கு - ஏன் இந்த ஒவ்வாமை?

தமிழ்ச் சூழலில் சமூக நீதிக்கும், நிகர்மைக்குமான போராட்டத்துக்குத் தமிழ்த் தேசியம் ஒன்றே வழி என்பதை ஏற்றுக் கொண்டு சிலபல வரலாற்றுக் காரணங்களால் அதற்கு நீங்கள் திராவிடம் என்று பெயரிட்டுக் கொள்வதானால் அது உங்கள் உரிமை.

தமிழ்த் தேசிய உள்ளடக்கத்தின் உருத்திரிந்த வடிவமே திராவிடம் என்று நான் பல முறை கூறியதில் மாற்றமில்லை. தமிழ்த் தேசியத்தின் மலர்ச்சியிலும் வளர்ச்சியிலும் மக்கள் பெருந்திரள் இயக்கமாகவும் அதற்கான கருத்தியலாகவும் திராவிடத்துக்குரிய வகிபாகத்தை அறிந்தேற்பதில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்துக்குத் தயக்கமில்லை.

அதே திராவிடம் மாநில ஆட்சி என்னும் இறைமையற்ற அதிகார மாயையில் வீழ்ந்து பதவி அரசியலில் மூழ்கிய பின் மொத்தத்தில் தன் முற்போக்கு உள்ளடக்கத்தை இழந்து நிற்கிறது என்பது என் தாழ்மையான கருத்து. அந்த உள்ளடக்கத்தை மீட்டெடுக்கும் முயற்சியில் உரிய பங்களிப்புச் செய்ய வேண்டிய நீங்கள் ஒரு சீரழிந்த அரசியல் பண்பாட்டுக்கு முட்டுக் கொடுக்க அல்லும் பகலும் அயராது பாடுபடுவதைப் பார்க்க வருத்தமாக உள்ளது தோழரே!

தமிழ்த் தேசியத்துக்கான உங்கள் உழைப்பையும் ஈகத்தையும் நாங்கள் மறந்தோமில்லை. இப்போது தமிழ்த் தேசியத்தின் மீது ஒவ்வாமை கொண்டு, இதுதான் உங்கள் திராவிடமா? என்று கேட்க வைத்து விட்டீர்களே!

அப்படி இருந்த சுபவீதானே இப்படி ஆகிப் போனார்? இப்படி இருக்கும் சுபவீ அப்படி ஆக மாட்டாரா? என்ற ஏக்கத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன்.

(03/06/2021)

# ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான வியன்னா ஒப்பந்தமும், மான்ட்ரியல் நெறிமுறையும்:

## சமந்தா

புவியைச் சுற்றியுள்ள வளிமண்டலத்தில் காணப்படும் ஓசோன் படலம் என்பது சூரியனிலிருந்து வரும் பெரும்பாலான புற ஊதாக் கதிர்வீச்சு புவியின் மேற்பரப்பை அடையாதவாறு தடுக்கும் ஒரு கவசம் போல் செயல்படுகிறது. ஓசோன் படலம் நம் உயிர்க்கோளத்தைத் தீங்குசெய் புற ஊதாக் கதிர்களிடமிருந்து பாதுகாக்கும் முக்கியப் பணியைச் செய்கிறது. ஓசோன் படலம் நலிந்து, புவி நேரடியாக புற ஊதாக் கதிர்களின் தாக்கத்திற்கு உட்படுமானால் உயிர்ப் பாதுகாப்பே கேள்விக்குள்ளாகும். சுற்றுச்சூழல் அமைப்புகள் கடுமையான பாதிப்பிற்குள்ளாகும். விவசாய உற்பத்தித் திறன் குறையும். தோல் புற்றுநோய்கள், கண்புரை, கண் பார்வையிழத்தல், பலவீனமான நோயெதிர்ப்பு மண்டலம் ஆகியவற்றால் உயிரினங்கள் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் ஏற்படும்.

குளிர்சாதனப் பெட்டிகள், அறைக் குளிரூட்டிகள், வளிமக் கரைசல் தெளிப்பான்களில் பயன்படுத்தப்படும் குளோரோ ஃபுளோரோ கார்பன்களின் பயன்பாடு அதிகரிப்பினாலும் வளிமண்டலத்தின் ஸ்ட்ரேட்டோஸ்பியரில் உள்ள ஓசோன் படலத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்பது குறித்த கவலை 1970களின் முற்பகுதியில் முதன்முதலாக எழுந்தது. இந்த ஓசோன் படலம் திடீரென மறைந்து விட்டாலோ, அல்லது நாம் பயன்படுத்தும் வேதிப் பொருட்களால் சேதப்படுத்தப்பட்டாலோ நாம் பாதிக்கப்படுவோம் என்பதை கலிஃபோர்னியா இர்வின் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஷெர்வுட் ரோலண்ட், மரியோ மோலினா என்ற இரண்டு விஞ்ஞானிகள் 1974ஆம் ஆண்டில் கண்டறிந்தனர். நேச்சர் இதழில் குளுரூட்டிகள், வளிமக் கரைசல் தெளிப்பான்களில் பயன்படுத்தப்படும் குளோரோ ஃப்ளுரோ கார்பன்கள் எவ்வாறு ஓசோன் படலத்தை அழிக்கக் கூடும் என்பதை விவரித்தனர்.

.

ஆனால் இந்த அறிவியல் உண்மை உடனே அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படாமல், கடும் விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டது. "தொழில்துறைகளை சேர்ந்தவர்கள் மோலினா-ரோலண்ட் கருதுகோள் வளிமண்டலத்தில் நடைபெறுவதைக் குறிப்பிடவில்லை, விண்வெளியில் நடைபெறுவதையே குறிப்பிடுகிறது எனக் கூறியதாகவும் அவ்விஞ்ஞானிகளை முட்டாள்கள் எனச் சாடியதாகவும் குறிப்பிடுகிறார் மேலாண்மை, வளங்குன்றா வளர்ச்சிக்கான அமைப்பின் தலைவரான டர்வுட் ஸால்கே. ஆரம்பத்தில் இத்தகைய பின்னடைவு இருந்த போதிலும், ரோலண்ட் மற்றும் மோலினாவின் ஆய்வு பத்தாண்டுகளுக்குப் பிறகு நிரூபிக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் அண்டார்டிகாவிற்கு மேலே ஓசோன் படலத்தில் ஒரு துளை இருப்பதைக் கண்டுபிடித்தனர். ஓசோன் துளை என்பது உண்மையில் ஒரு துளை அல்ல. ஓசோன் படலத்தில் ஓசோனின் செறிவு மிகவும் குறைந்து மெலிந்து காணப்படுவதே துளை எனக் கூறப்படுகிறது.

வளிமண்டலத்தில் குளோரோஃப்ளூரோகார்பன்களிலிருந்து வெளியேறும் குளோரின் ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைக்கிறது. புவியை அடையும் புற ஊதாக் கதிர்களைத் தடுக்கும் ஓசோன் படலத்தின் திறன் இதனால் பாதிக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பின் கூற்றுப்படி, ஒரு குளோரின் அணுவானது 100,000 ஓசோன் மூலக்கூறுகளை அழிக்கிறது, ஓசோன் பதிலீடு செய்யப்படும் வேகத்தை விட அதிவேகமாக ஓசோனைக் குறைக்கிறது.

1976ஆம் ஆண்டில் ஐநா சுற்றுச்சூழல் அமைப்பின் ஆளும் குழுவில் ஓசோன் படலத்திற்கு அதிகரித்து வரும் ஆபத்து குறித்து விவாதிக்கப்பட்டது. ஐநா சுற்றுச்சூழல் அமைப்பு மார்ச் 1977இல் ஒரு மாநாடு கூட்டி, ஓசோன் குறைவை மதிப்பிடவும், ஓசோன் படலம் குறித்த எதிர்கால சர்வதேச நடவடிக்கைக்கு வழிகாட்டவும், ஓசோன் படலத்திற்கான உலகச் செயல் திட்டத்தை ஏற்படுத்தவும், ஓர் ஒருங்கிணைப்புக் குழுவை நிறுவியது.

1995 பால் ஜே. க்ரூட்ஸன், மரியோ ஜே. மோலினா, எஃப். ஷெர்வுட் ரோலண்ட் ஆகியோருக்கு "வளிமண்டல வேதியியலில் ஓசோனின் உருவாக்கம் மற்றும் சிதைவு" குறித்த அவர்களின் பணிக்காக, வேதியியல் துறைக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

<u>வியன்னா ஒப்பந்தம்:</u>

1981 மே மாதத்தில், ஐநா சுற்றுச்சூழல் அமைப்பின் ஆளும் குழு ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு சர்வதேச ஒப்பந்தம் ஏற்படுத்துவது குறித்த பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது. 5 ஆண்டுகள் தொடர்ந்த இந்த பேச்சுவார்த்தைகளின் விளைவாக 1985 மார்ச்சில் ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான வியன்னா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் ஓசோனைக் குறைக்கும் பொருட்கள் (ODS) என குறிப்பிடப்படும் கிட்டத்தட்ட 100 வேதிப் பொருட்களின் உற்பத்தியையும், நுகர்வையும் ஒழுங்குபடுத்தும் நெறிமுறை உருவாக்கப்பட்டது. வளிமண்டலத்தில் ஓசோனின் அளவைக் குறைக்கும் பொருட்களின் கண்காணிப்பு, ஆய்வு மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றில் ஒத்துழைப்பு ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் ஓசோனைக் குறைக்கும் பொருட்களின் (ODS) பயன்பாட்டைக் குறைப்பதற்கான கடப்பாடுகளை உறுப்பு நாடுகள் மீது நிர்ப்பந்திக்கவில்லை. வியன்னா ஒப்பந்தம் 1988இல் செயலாக்கப்பட்டது. மாண்ட்ரியல் நெறிமுறையின் வடிவத்தில் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை உருவாக்கத் தேவையானக் கட்டமைப்பை வியன்னா ஒப்பந்தம் வழங்கியது.

தற்போது, வியன்னா ஒப்பந்தத்தின் உறுப்பு நாடுகளுக்கிடையிலான பேரவை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட்டப்படுகிறது. மேலும் இது மான்ட்ரியல் நெறிமுறையின் உறுப்பு நாடுகளுக்கிடையிலான சந்திப்புகளுடனும் ஒருங்கிணைக்கப்படுகிறது. கென்யாவின் நைரோபியில் உள்ள ஓசோன் செயலகம் இவற்றை நிர்வகிக்கிறது.

<u>மான்ட்ரியல் நெறிமுறை:</u>

1987 செப்டம்பர் 16ஆம் நாள், கனடாவில் உள்ள மான்ட்ரியல் நகரில், ஓசோனைக் குறைக்கும் பொருட்களின் பயன்பாட்டைக் குறைத்து ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான மான்ட்ரியல் நெறிமுறை ஏற்படுத்தப்பட்டது. இதன் முக்கியத்துவத்தைக் குறிக்கும் விதமாக 1987ல் இருந்து செப்டம்பர் 16ம் நாள் உலக ஓசோன் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் மான்ட்ரியல் நெறிமுறை குளோரோ ஃபுளோரோ கார்பன்களையும், ஹாலஜன்களையும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை வளர்ந்த நாடுகளுக்கு அறிமுகப்படுத்தியது. வளரும் நாடுகள் இக்கடப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்கு முன் ஓசோனை குறைக்கும் பொருட்களின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான சலுகையும் அளிக்கப்பட்டது.

மான்ட்ரியல் நெறிமுறையின் கீழ் 1993க்குள் குளோரோ ஃபுளூரோ கார்பன் நுகர்வை 1986ஆம் ஆண்டில் காணப்பட்ட அளவில் 50 விழுக்காடு குறைக்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மான்ட்ரியல் நெறிமுறையில், குளோரோ ஃபுளோரோ கார்பன், ஹாலஜன்கள் ஆகியவற்றின் பயன்பாட்டைக் குறைப்பது பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது. மான்டிரியல் நெறிமுறையின் உறுப்பு நாடுகள் ஆண்டுதோறும் தொடர்ந்து சந்திக்கின்றன, உறுப்பு நாடுகளின் பேரவை ஈராண்டுக்கு ஒரு முறை ஏற்படுத்தப்படுகிறது. நாடுகள் ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான கடமைகளைச் செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும், அதில் ஏற்படும் முக்கியச் சிக்கல்களைக் கவனத்தில் கொள்வதற்கும் இச்சந்திப்பு ஏற்படுத்தப்படுகிறது.உறுப்பு நாடுகளின் பேரவையில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

குளோரோ ஃபுளோரோ கார்பன்கள் மிகவும் சக்திவாய்ந்த பசுங்குடில் வாயுக்கள் ஆகும். இவை ஓசோனைக் குறைக்கும் பொருட்களில் முதல் வகையைச் சேர்ந்தவை (வகுப்பு ஒன்று). மான்ட்ரியல் நெறிமுறையின் படி குளோரோ ஃபுளோரோ கார்பன்களின் (ஓசோன் குறைக்கும்

பொருட்கள் - வகுப்பு ஒன்று) பயன்பாட்டை அறவேக் குறைத்து அவற்றின் இடத்தில் ஹைட்ரோ குளோரோ ஃப்ளூரோ கார்பன்கள் 1980களில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு பரவலாகப் பயன்படுத்தப்பட்டன.

வகுப்பு ஒன்றைச் சேர்ந்த ஓசோன்-குறைக்கும் பொருட்களுக்கு இடைக்கால மாற்றாக உருவாக்கப்பட்ட ஹைட்ரோ குளோரோ ஃப்ளூரோ கார்பன்கள் ஓசோன்-குறைக்கும் பொருட்கள் வகுப்பு இரண்டு என வகைபடுத்தப்பட்டன. இவற்றின் ஓசோன்- குறைக்கும் ஆற்றல் 0.2 ஆகும்.

மான்ட்ரியல் நெறிமுறையின் கீழ் ஓசோன்-குறைக்கும் பொருள்களான ஹைட்ரோ குளோரோ ஃபுளோரோ கார்பன்களின் நுகர்வையும், உற்பத்தியையும் 2013க்குள் நிறுத்த வேண்டும் என்று ஒப்புதல் பெறப்பட்டது. வளர்ந்த நாடுகள், ஹைட்ரோ குளோரோ ஃபுளோரோ கார்பன்களின் நுகர்வு மற்றும் உற்பத்தியை முறையே 2004, 2010லிருந்து குறைக்க வேண்டும் என்றும் 2020க்குள் அடியோடு நிறுத்த வேண்டும் என்றும், வளரும் நாடுகள் ஹைட்ரோ குளோரோ ஃபுளோரோ கார்பன்களின் நுகர்வையும், உற்பத்தியையும் 2015இலிருந்து குறைக்கவும், 2030க்குள் அறவே நிறுத்தவும் வேண்டும் என்றும் ஒப்புக் கொண்டன.

மான்ட்ரியல் நெறிமுறையில் ஓசோனைக் குறைப்பதில் உயர் திறன் கொண்ட குளோரோ ஃபுளூரோ கார்பன்களிலிருந்து (CFC) ஓசோனைக் குறைப்பதில் இடைத் திறன் கொண்ட ஹைட்ரோ குளோரோ ஃபுளூரோ கார்பன்களை ((HCFC) பயன்பாட்டிற்குக் கொண்டுவருமாறு மாற்றம் ஏற்படுத்தப்பட்டது, இறுதியாக ஓசோன் குறைக்கும் திறன் கொண்ட பொருட்களின் பயன்பாட்டை அறவே நீக்கி சுழிய அளவு ஓசோன் குறைக்கும் திறன் கொண்ட வேதிப் பொருட்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும் என்ற மாற்றமும் இப்பொழுது நடைமுறையில் உள்ளது.

மான்ட்ரியல் நெறிமுறையில் இது வரை ஐந்து திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன: அவையாவன: லண்டன் திருத்தம் (1990), கோபன்ஹேகன் திருத்தம் (1992), மாண்ட்ரியல் திருத்தம் (1997), பெய்ஜிங் திருத்தம் (1999), கிகாலி திருத்தம் (2016).

லண்டன் திருத்தம்: 1990ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் லண்டனில் நடைபெற்ற உறுப்பு நாடுகளின் இரண்டாவது பேரவையில் கூடுதலாகப் பத்து குளோரோ ஃபுளோரோ கார்பன்களையும், கார்பன் டெட்ராக்ளோரைடு மற்றும் மெத்தில் குளோரோஃபார்ம் ஆகியவற்றையும் ஓசோனைக் குறைக்கும் பொருட்களின் பட்டியலில் சேர்க்க ஒப்புக்கொள்ளப்பட்டது. மான்ட்ரியல் நெறிமுறையைச் செயல்படுத்துவதற்காக 1990இல் பலதரப்பு நிதியம் ஏற்படுத்தப்பட்டது. வளரும் நாடுகளுக்குத் தகவமைப்பு, இடர்தணிப்பு ஆகியவற்றுக்கான தொழில்நுட்ப உதவி, தகவல், பயிற்சி அளிக்கவும், கடன் சலுகை அளிக்கவும் வழிவகை செய்யப்பட்டது. ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டம் (யு.என்.இ.பி.), ஐ.நா. வளர்ச்சி திட்டம் (யு.என்.டி.பி), ஐ.நா. தொழில்துறை மேம்பாட்டு அமைப்பு (யுனிடோ), உலக வங்கி ஆகிய நான்கு சர்வதேச நிறுவனங்களால் பலதரப்பு நிதியத்தின் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

கோபன்ஹேகன் திருத்தம்: 1992இல் டென்மார்க்கின் கோபன்ஹேகனில் நடைபெற்ற உறுப்பு நாடுகளுக்கிடையிலான நான்காவது பேரவையில், மெதில் புரோமைடு, ஹைட்ரோ புரோமோ ஃப்ளூரோ கார்பன்கள் (HBFCகள்) மற்றும் ஹைட்ரோ குளோரோ ஃப்ளூரோ கார்பன்கள் (HCFCகள்) மீதான கட்டுப்பாடுகள் சேர்க்கப்பட்டன. உறுப்பு நாடுகளுக்கு இடையிலான நான்காம் மாநாடு செயலாக்கக் குழுவை ஏற்படுத்த ஒப்புக்கொண்டது.

மான்ட்ரியல் திருத்தம்: 1997ஆம் ஆண்டில் கனடாவின் மான்ட்ரியலில் நடைபெற்ற உறுப்பு நாடுகளுக்கு இடையிலான 9ஆம் பேரவை, ஓசோனின் அளவைக் குறைக்கும் பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான புதிய உரிம அமைப்புக்கு ஒப்புதல் பெறப்பட்டது. கோபன்ஹேகன் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்காத உறுப்பு நாடுகளிடையேயான மெத்தில் புரோமைடு வர்த்தகம் தடை செய்யப்படுவதற்கும் ஒப்புதல் பெறப்பட்டது.

பெய்ஜிங் திருத்தம்: 1999 ஆம் ஆண்டில் சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெற்ற உறுப்பு நாடுகளுக்கு

இடையிலான 11வது பேரவையில் புரோமோகுளோரோமீதேன் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் ஹைட்ரோ குளோரோ ஃபுளூரோ கார்பன்கள் மீதான கூடுதல் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன.

கிகாலி திருத்தம்:

2016 அக்டோபர் 15ல் மான்ட்ரியல் நெறிமுறைக்கான 28வது கூட்டம் ஆப்பிரிக்க நாடான ருவாண்டாவின் தலைநகர் கிகாலியில் ஏற்படுத்தப்பட்டது.கிகாலியில் மான்ட்ரியல் நெறிமுறையில் ஐந்தாவது திருத்தம் ஏற்படுத்தப்பட்டது. கிகாலி திருத்தத்தின் மூலம் அடுத்த 30 ஆண்டுகளில் ஹைட்ரோஃப்ளூரோகார்பன்களின் திட்டமிடப்பட்ட உற்பத்தியையும், நுகர்வையும் 80 விழுக்காட்டிற்கும் மேல் குறைக்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இதன் மூலம் புவி வெப்பமாதலை 0.5 பாகை குறைக்க முடியும். நெறிமுறையின் விதிமுறைகளை முழுமையாக செயல்படுத்துவதன் மூலம், 1980 க்கு முந்தைய நிலைக்கு ஓசோன் படலத்தை 2050 க்குள் கொண்டுவர முடியும்.

கிகாலி திருத்தம் மூன்று குழுக்களுடன் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படும் இலக்குகளைக் கொண்டுள்ளது. முதல் குழுவில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போன்ற பணக்கார மற்றும் வளர்ந்த பொருளாதாரங்கள் உள்ளன, அவை 2019ல் ஹைட்ரோஃப்ளூரோகார்பன்களின் பயன்பாட்டை குறைத்து 2036 க்குள் 2012ல் காணப்பட்ட அளவில் 15 விழுக்காடாகக் குறைக்க வேண்டும்.

இரண்டாவது குழுவில் வளர்ந்து வரும் பொருளாதாரங்களான சீனா, பிரேசில் மற்றும் சில ஆப்பிரிக்க நாடுகள் உள்ளன, அவை 2024 லிருந்து ஹைட்ரோ ஃபுளோரோ கார்பன் பயன்பாட்டைக் குறைக்கத் தொடங்கி 2045 ஆம் ஆண்டில் 2021ல் காணப்பட்ட அளவில் 20 விழுக்காடாகக் குறைக்கவேண்டும்.

மூன்றாவது குழுவில் வளரும் பொருளாதாரங்கள் மற்றும் இந்தியா, பாகிஸ்தான், ஈரான், சவுதி அரேபியா போன்ற வெப்பமான காலநிலை கொண்ட நாடுகள் உள்ளன, அவை 2028 ஆம் ஆண்டில் ஹைட்ரோ ஃபுளோரோ கார்பன் பயன்பாட்டைக் குறைக்கத் தொடங்கி 2047 க்குள் 2024-

2026 காணப்பட்ட அளவில் 15 விழுக்காடாகக் குறைக்கவேண்டும். கிகாலி திருத்தம், 2019 ஜனவரி 1முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

ஓசோன் குறைக்கும் பொருட்களான குளோரோ ஃபுளோரோ கார்பன்கள், ஹைட்ரோ குளோரோ ஃப்ளூரோ கார்பன்கள் ஆகியவற்றுக்கு மாற்றாக ஹைட்ரோ ஃப்ளூரோகார்பன்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. ஹைட்ரோ ஃபுளோரோ கார்பன்களில் குளோரின் இல்லை ஆதலால் அவை ஓசோன் படலத்திற்கு எந்தத் தீங்கும் ஏற்படுத்தாது, என்ற போதும் அவை கார்பன் டை ஆக்சைடை விட 14,800 மடங்கு வரை அதிக புவிவெப்பமாக்கும் திறனைக் கொண்டுள்ளன. ஒட்டுமொத்த ஹைட்ரோ ஃபுளூரோ கார்பன்களின் உமிழ்வு ஆண்டுக்கு 8 விழுக்காடு என்ற விகிதத்தில் உயர்ந்து வருகின்றது, மேலும் வருடாந்திர உமிழ்வுகள் 2050 க்குள் உலகளாவிய கார்பன்-டை-ஆக்சைடு உமிழ்வுகளில் 7-19 விழுக்காடாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஆகவே காலநிலை மாற்றத்தில் ஹைட்ரோ ஃப்ளூரோகார்பன்களின் அளவைக் குறைத்தல் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது.

உயர் புவிவெப்பமாக்கும் திறன் கொண்ட ஹைட்ரோ ஃபுளோரோ கார்பன்களை குறைந்த புவிவெப்பமாக்கும் திறன் கொண்ட ஹைட்ரோ ஃபுளோரோ ஒலியீன் மாற்றுவதன் மூலம் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் 0.5 பாகை வரை வெப்பமாதலைத் தவிர்க்க உதவும்.

"மான்ட்ரியல் நெறிமுறைக்கு இணங்கும் விதமாக தகவமைத்துக் கொள்ள தொழில்துறை ஓசோன் குறைக்கும் பொருட்களை பதிலீடு செய்யும் விதத்தில் புதிய வேதிப்பொருட்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தது. ஓசோன் சிதைவு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றின் அடிப்படையில், சுற்றுச்சூழலில் குறைந்தத் தாக்கத்தை ஏற்படுத்தும் சிறந்த குளிர்பதனப் பொருள்களாக ஹைட்ரோ ஃப்ளூரோ ஒலிஃபீன்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஹைட்ரோ ஃப்ளூரோ ஒலிஃபீன்கள் (HFO) ஹைட்ரஜன், ஃப்ளோரின், கார்பன் ஆகியவற்றாலான நிறைவுறாக் கரிமச் சேர்மங்கள் ஆகும். ஹைட்ரோ ஃப்ளூரோ ஒலிஃபீன்கள் நான்காம் தலைமுறை குளிர்பதனப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஹைட்ரோ ஃப்ளூரோ ஒலிஃபீன்களின் ஓசோன்-குறைப்பு திறன் (ODP) சுழியமாகவும், அவற்றின்

புவி வெப்பமாக்கும் திறன் (GWP) 0.1 விழுக்காடாகவும் உள்ளது. இதனாலேயே ஹைட்ரோ ஃப்ளூரோ ஒலிஃபீன்களை சூழலுக்குகந்த குளிர்பதனப் பொருட்களாகவும், குளோரோ ஃபுளோரோ கார்பன்கள், ஹைட்ரோ குளோரோ ஃபுளோரோ கார்பன்கள், ஹைட்ரோ ஃபுளோரோ கார்பன்கள் ஆகியவற்றுக்குச் சிறந்த பதிலிகளாகவும் பரவலாகப் பயன்படுத்த வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வியன்னா உடன்படிக்கையின் கீழ் ஏற்படுத்தப்பட்ட மாண்ட்ரியல் நெறிமுறை 197 உறுப்பு நாடுகளின் உலகளாவிய அங்கீகாரத்தையும் ஒப்புதலையும் பெற்ற ஒரே சுற்றுச்சூழல் ஒப்பந்தமாக அறியப்படுகிறது. அனைத்து ஐ.நா. உறுப்பு நாடுகளும் ஏகமனதாக அங்கீகரித்த ஒரே ஒப்பந்தம் இதுவே. மான்ட்ரியல் நெறிமுறையின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வளிமண்டலத்தில் ஓசோனைக் குறைக்கும் பொருட்களின் பயன்பாட்டை நீண்ட கால அளவில் குறைப்பதற்கும், ஓசோன் படலத்தின் தொடர்ச்சியான மீட்புக்கும் வழிவகுத்ததாக உலகக் காலநிலை அமைப்பு (WMO) 2018 அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மான்ட்ரியல் நெறிமுறை செயல்படுத்தாமல் இருந்தால் 2050க்குள் ஓசோன் படலம் பெருமளவில் சேதமடைந்திருக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மான்ட்ரியல் நெறிமுறையால் கட்டுப்படுத்தப்படும் பல பொருட்களும் பசுங்குடில் வாயுக்கள் என்பதால், அவற்றின் நீக்கம் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. மான்ட்ரியல் நெறிமுறையின் ஓசோன்-குறைக்கும் பொருட்கள் மீதான ஒழுங்குமுறையால் 1989- 2013 காலகட்டத்தில் ஒட்டுமொத்தமாக 135 பில்லியன் டன் கார்பன்-டை-ஆக்சைடுக்குச் சமமான பசுங்குடில் வாயுக்களின் உமிழ்வு குறைக்கப்பட்டுள்ளது. இந்த நெறிமுறை இல்லாதிருந்தால் புவிவெப்பமாதல் 25 விழுக்காடு கூடுதலாக அதிகரித்திருக்கும் என்று கூறுகிறார் விஞ்ஞானி ரோலண்டோ கார்சியா.

ஓசோன் படலம் மதிப்பீடு செய்யப்பட்டதில் 2000 முதல் ஓசோன் படலம் ஒவ்வொரு பத்தாண்டிற்கும் 1-3 விழுக்காடு வேகத்தில் மீட்சி பெற்று வருகிறது என அறியப்பட்டுள்ளது. வட அரைக்கோளம், நடு அகலாங்குப்( mid latitude) பகுதிகளில் ஓசோனின் அளவு 2030களில் முழுமையாக மீட்சியடையும் எனவும் தென் அரைக்கோளத்தில் 2050களிலும், துருவப் பகுதிகளில் 2060களிலும் மீட்சியடையும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

# நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (19)

ஆசிரியர்: சிரஜீ தாஸ்குப்தா

தலைப்பு:

## இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் சமூக-சட்ட அமைப்பு

பொதுவாக ஏற்கப்பட்ட பொருளாதாரப் போக்கில் குழுமமும்/ குடும்பமும்:



குழுமம் என்பது முழுக்க முழுக்க உற்பத்திக்கான தளமாகவும் இல்லம் அல்லது குடும்பம் என்பது நுகர்வுக்கான தளமாகவும் கருதப்படுகின்றன. சமூகம் பொருளாதாரத்திற்குப் புறத்தே அமைந்திருப்பதாகக் கருதப்படுகிறது. குழுமப் பொருளாதாரத்தில் கூட குழுமம், இல்லம் இவை இரண்டுக்கும் இடையிலான தொடர்பு பெரிய அளவில் ஆய்வு செய்யப்படவில்லை. மூலதனத் திரட்டலுக்கான நிறுவனங்களாக இவை செயல்படுவது குறித்துக் குறிப்போ, ஆய்விலக்கியமோ காணப்படவில்லை. ஆனால் வணிகக் குடும்பங்கள் நம் அன்றாட வாழ்க்கையை ஆக்கிரமித்துள்ளன. காலனியாதிக்கக் காலத்திலிருந்தே இந்தியாவில் குழுமம் குடும்பத்துடன் பிணைந்து காணப்படுகிறது. அது தனக்கேயுரிய இரட்டைத் தன்மை கொண்டுள்ளது.

இந்தியாவில் குடும்பத்திற்குச் சொந்தமான வணிகக் குழுக்களின் பின்னணி:

இந்தியாவில் குடும்பத்திற்கு சொந்தமான வணிகக் குழுக்கள் என்பவை கூட்டுப் பங்குக் குழுமங்களாகவும், (பொதுத் துறையிலும் தனியார் துறையிலும்) பங்குதாரர் நிறுவனங்களாகவும், அறக் கட்டளைகளாகவும், வரையறுக்கப்பட்ட கடப்பாடுடைய ஏராளமான கூட்டாண்மை நிறுவன அமைப்புகளாகவும் உள்ளன. இவை ஒவ்வொன்றும் முறையே நிறுவனச் சட்டம்-2013, இந்தியக் கூட்டாண்மைச் சட்டம்-1932, சங்கங்கள் பதிவுச் சட்டம்-1860, வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கூட்டாண்மைச் சட்டம்-2008 ஆகிய வெவ்வேறு சட்டங்களின் ஒழுங்குமுறைக்கு உட்பட்டவை

ஆகும். இத்தகைய வெவ்வேறு விதமான பெருங்குழுமங்களை ஒழுங்குபடுத்தப் பல்வேறு சட்டங்கள் இருந்த போதிலும், இந்தக் குழுமங்கள் ஒன்றிணைந்த இயக்குநரகமும் பொதுவான பங்குதாரர்களும் கொண்டு இந்திய வணிகக் குழுக்களின் சமூக நிறுவனமாக அமைந்துள்ளன (தாஸ் குப்தா, 2013).

1951ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் இருபத்திரண்டு வணிக நிறுவனங்கள் இந்த பின்னிப்பிணைந்த அமைப்புகளின் மூலம் இந்தியப் பொருளாதாரத்தின் மொத்த மூலதன உருவாக்கத்தில் 25 விழுக்காட்டை நேரடியாகக் கட்டுப்படுத்தின. 1990களில், இது இந்தியாவின் மொத்த மூலதன உருவாக்கத்தில் 28 விழுக்காடாக இருந்தது, இன்றைய அளவில் குறைந்தது 40 விழுக்காடாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு விழுக்காட்டிற்கும் குறைந்த அளவிலான உண்மை முதலீடுகளைப் பயன்படுத்தியே வணிகக் குழுக்கள் இந்தளவுக் கட்டுப்பாட்டை ஈட்டியுள்ளன. (தாஸ் குப்தா, 2016).

<u>இந்தியச் சட்டத்திலும் கொள்கையிலும் குடும்பத்திற்குச் சொந்தமான வணிகக் குழு:</u>

1965ஆம் ஆண்டில் நீதிபதி கே.சி. தாஸ்குப்தா தலைமையில் அமைந்த ஏகபோகங்களுக்கான விசாரணை ஆணையம் பெருங்குழுமங்களுக்கு இடையிலான முதலீடுகள் கொண்டும் ஒன்றிணைந்த இயக்குநரகம் கொண்டும் இந்தியாவில் ஏகபோக அதிகாரம் படைத்த குழுமமே 'பெருங்குழுமம்' என்று அடையாளப்படுத்தியது.

வணிகக் குழு என்பது (1967ஆம் ஆண்டின் தொழில்துறைத் திட்டமிடல், உரிமக் கொள்கை பற்றிய ஹசாரி குழு அறிக்கையின் அதிகாரமுறைச் சொல்வழக்கில் 'தொழில்துறை இல்லம்' என்பது)

உரிம அமைப்பு முறையைப் பயன்படுத்தி முதலீடுகளைக் கட்டுப்படுத்துவதில் ஏகபோகம் செலுத்தும் குழுமமாக இந்திய அரசால் அதிகாரமுறைப்படி இனங்காணப்பட்டது.

இந்த ஹசாரி அறிக்கையும், 457 அமைப்புகளின் 'குழுச் சார்பை'ப் பதிவு செய்த 1969ஆம் ஆண்டின் தொழில்துறை உரிமக் கொள்கை விசாரணைக்கான தத் கமிட்டியின் அறிக்கையும் இந்தியாவில் ஏகபோகக் கட்டுப்பாடு குறித்துக் குறுகிய காலம் நடப்பிலிருந்த சட்டத்தின்

அடிப்படையை உருவாக்கின.

ஏகபோகங்கள், கூடா வர்த்தக நடைமுறைகள் சட்டம்-1969 ‘ஒரே மேலாண்மை’, ‘ஒன்றினைந்த குழுமப் பொறுப்பு’ ஆகியவற்றை இந்தியாவில் ஏகபோகங்களைக் கண்டறிவதற்கான அளவுகோலாக்கியது.

சமூகப் பொருளாதாரத் துறைகளில் அரசின் கட்டுப்பாடு ஓங்கிய காலகட்டத்திலான (dirigisme) சட்டமும், சட்ட ஆக்கமும் வணிகக் குழுக் குழுமத்தை ஆய்வலகாகக் கொண்டு இந்தியாவில் பெரிய வணிகக் குழுக்களின் மூலதனத் திரட்டலை வரையறுத்தது.

<u>புதிய தாராளமயத்தின் கீழ் சட்ட இடையூறு:</u>

இந்தியாவில் 'வணிகக் குழுவை'த் தொழில்வணிக அலகாக அடையாளங்காணும் முறை புதுத் தாராளமய மாற்றத்திற்குப் பிறகு ஏகபோகங்கள், கூடா வர்த்தகநடைமுறைகள் சட்டம் திரும்பப் பெறப்பட்டு அதனிடத்தில் போட்டிச் சட்டம் வந்ததுடன் முடிவுக்கு வந்தது.

போட்டிச் சட்டமானது தனிப்பட்ட நிறுவனங்களைக் கட்டமைப்பின் அடிப்படையில் அல்லாது அவற்றின் குறிப்பிட்ட செயல்பாடு, நடைமுறைகளின் அடிப்படையிலேயே ‘போட்டி எதிர்ப்பை’க் குறிப்பிடும் விதமாக மாற்றம் செய்யப்பட்டது.

1970களிலிருந்து வளர்ந்து எழுந்து வரும் புதிய வணிகக் குழுக்களின் சமூக எதார்த்தத்துடன், வணிக அலகு குறித்த சட்டக் கருத்தாக்கத்தில் உள்ள முரண்பாடு குறித்துப் பெருமளவில் ஆய்வு செய்யப்படவில்லை (மசூம்தர் 2006; நௌதெட் 2015; நாஸ் 2016).

இந்தியாவில் ஏகபோக மூலதனம் ஒருசில பிரதிநிதித்துவக் குடும்பங்களுக்குச் சொந்தமான வணிகக் குழுக்களின் ஆதிக்கத்தில் இருப்பதையும், தொழில்வர்த்தகத்தின் பெரும்பாலான பகுதிகளில் மூலதன அமைப்பின் அலகுகளாக அவை இருப்பது கண்கூடாகத் தெரிந்த காலகட்டத்திலும் கூட சமூக ஆய்வுகளில் 'குடும்பத்திற்குச் சொந்தமான வணிகக் குழு' ஆய்விலிருந்து அறவே விலக்கப்பட்டிருப்பது இன்னுங்கூட விசித்திரமானது.

<u>சில தாக்கங்கள்:</u>

1. முக்கியமான பழைய, புதிய வணிகக் குடும்பங்கள் தங்களால் நடத்தப்படும் வணிக இல்லத்தின் குழுமக் கட்டமைப்பின் மூலம் முடிவுகள் எடுப்பதில் கட்டுப்பாட்டைப் பேணுவதற்கான வழிகளைக் கண்டறிந்தன (தாஸ் குப்தா, 2010).

இந்தத் தன்மையே ஒருங்கிணைந்த இயக்குநரகம், ஒருங்கிணைந்த பங்குதாரர்கள் மூலம் உரிமை மற்றும் கட்டுப்பாட்டு முறைகளைக் கைக்கொண்டு மூலதனத் திரட்டலுக்கான நிறுவன அடிப்படையை ஒழுங்கமைப்பதில் முக்கியத்துவம் பெறுகிறது.

2. குழும வணிகவியல், பொருளாதாரச் சமூகவியல் மற்றும் பரந்த சமூக அறிவியல் ஆய்விலக்கியங்களில் 'வணிகக் குழு' நிறுவனம் அதற்கான இடத்தைப் பெற்றிருந்தாலும் கூட குடும்ப அடிப்படையிலான உரிமை, கட்டுப்பாடு குறித்து அவ்வளவாக ஆய்வு செய்யப்படவில்லை.

இந்த உரிமையும் கட்டுப்பாடும் அரசின் வரி வருவாயை நேரடியாக ஏய்ப்பதில் மட்டுமல்லாது மூலதனத் திரட்டல், முதலீடு, மூலதனக் குவிப்பு ஆகியவற்றிலும் முக்கியத் தாக்கம் கொண்டிருந்தது.

பெருங்குழுமச் சட்டம், வரிச் சட்டங்கள் என பல சட்டங்கள் மூலம் 'வணிக இல்ல'த்தின் அமைப்பு சட்டமுறைப்படி அனுமதிக்கப்பட்டு, பெருங்குழும நிர்வாகத்தின் ஆய்வுப் பொருளாக்கப்பட்ட போதும், , 'குடும்பம்' என்ற நிறுவனம் 'தனியாள் சட்ட நெறிகளின்' ஆளுகையில் வைக்கப்பட்டிருந்தது (தாஸ் குப்தா, 2013).

<u>நோக்குநிலையின் முறைசார் சிக்கல்கள்:</u>

ஆனால் மேற்கூறியவை இரண்டும் வெவ்வேறு சிறப்புப் புலங்களாகத் தனித்தனியே பல்வேறு துறைகளிலும், அவற்றுக்கிடையிலும் ஆய்வு செய்யப்படுகின்றன. அதீதமான துறைசார் நிபுணத்துவமும், துறைகள், துணைத் துறைகளின் குறுகிய வரம்பும் குழுமங்கள் நிறுவனங்களைப் பற்றிய புதுத்தாராளமய புரிதலால் வடிவமைக்கப்படுகின்றன. பொதுவாக

ஏற்கப்பட்ட மரபுவழித் துறைகளில் மட்டுமல்லாமல், விமர்சனப் பாங்குள்ள முற்போக்கான, மாற்றுப் பொருளியல் ஆய்விலக்கியங்ககளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

இவ்வாறு குடும்பத்தைச் சமூக அமைப்பின் அலகாகக் கருதுவது குறித்தும், இவ்வகையில் 'உயரடுக்கினர்' குறித்துமான ஆய்வு இலக்கியத்திலும் கூட, பெரும்பாலும் மூலதனத் திரட்டலால் உந்தப்படும் சமூக உற்பத்தி, சமூக மறுவுற்பத்தி ஆகியவற்றிலிருந்து தனிமைப்படுத்தியே இப்பொருள் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

நகைமுரணாக, 'வணிகப் பேரரசுகளை' நிர்மாணிப்பதில் குடும்பத்தை மையமாகக் கொண்ட ஒரே இலக்கியம் பெரும்பாலும் புகழ்பாடும் சுயசரிதைகளில் மட்டும் காணப்படுகிறது. (முதலாளித்துவ முயற்சிகளில் 'தொழில் வணிக அறிவுக் கூர்மையே' 'வெற்றிக்கு' விளக்கமாகக் கொண்டாடப்படுகிறது) பிறகு தொழிலதிபர்களின் தனித்துவமான பண்புகளே வெற்றிக்குக் காரணமாகவும், அதில் குடும்பத்தின் ஆதரவு தடையற்ற பங்கு வகிப்பதாகவும் காட்டப்படுகிறது.

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் என்பது சட்டமுறைப்படி வரி செலுத்தும் நிறுவனமாகவும், தனிநபர்களிடமிருந்தும், பெருங்குழுமங்களிடமிருந்தும் (குழுமச் சட்டம், கூட்டுப் பங்காளர் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டவை) வேறுபட்டதாகவும் தனித்துவமானதாகவும் அங்கீகரிக்கப்பட்டது.

மற்றப் பெருங்குழும அமைப்புகள், தனியாள் வருமான வரி பெருமங்குழும வருமான வரிச் சட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டுக் குழுமச் சட்டத்தின் அடிப்படையில் வரையறுக்கப்படும் போது, பிரிக்கப்படாத இந்துக் குடும்பமோ இந்துத் தனியாள் சட்டத்தின் அடிப்படையில் வரையறுக்கப்படுகிறது.

<u>இந்துக் குடும்பத்திற்குச் சொந்தமான வணிகக் குழுக்களின் சட்டப் பதிவு:</u>

குழுமங்களும் குடும்பங்களும் முறையான சட்டக் கட்டமைப்புகள் மூலம் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. பெருங்குழும நிர்வாகத்தின் சட்ட அமைப்பானது பொதுவான பங்குதாரர்களின் மூலம் கூட்டாண்மை, வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள், பதிவு

செய்யப்படாதவையும் பதிவு செய்யப்பட்டவையுமான வரையறுக்கப்பட்ட பொதுக் குழுமங்கள் போன்ற பல்வேறு வகைக் குழுமங்களின் சாதகமான கூட்டமைப்பை ஏற்படுத்த வழிவகுக்கிறது.

இது அபாயத்தை பரவலாக்குவதற்கான ஒரு வழியாக மட்டுமல்லாமல், 1973க்குப் பிறகு ஏகபோகங்கள், கூடா வர்த்தக நடைமுறைகள் சட்டத்திலிருந்து (1991இல் அது விலக்கிக் கொள்ளப்படும் வரை) தப்பித்துக் கொள்வதற்கான சட்ட வழிகளையும் வழங்கியது. 1926ஆம் ஆண்டின் தொழிற்சங்கச் சட்டத்தின் (தாஸ்குப்தா, 2016) நிபந்தனைகளின் கீழ் தொழிற்சங்கம் உருவாக வாய்ப்பே இல்லாமற்செய்யும் வகையில் பெரும்பாலான குழுக்கள் ஏழுக்கும் குறைவான ஊழியர்களையே கொண்டிருந்தன.

பெருங்குழும ஆளுகைக் கட்டமைப்புகள், குடும்பச் சட்டங்கள் மற்றும் வரிச் சட்டநெறிகளை ஒன்றிணைப்பதன் மூலம் பிரிக்கப்படாத இந்துக் குடும்ப (HUF - Hindu Undivided Family) வகையினத்திற்குச் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டது. இவ்வாறு வணிகக் குழுக்களின் நிறுவனக் கட்டமைப்பின் மீதான குடும்பத்தின் கட்டுப்பாடும், இந்த கட்டமைப்புகள் மூலம் உருவாக்கப்படும் செல்வத்தின் மீதான உரிமையும் சட்டமுறைப்படி பேணிக் காக்கப்பட்டது (தாஸ்குப்தா, 2013).

<u>இந்தியாவில் தனித்துவமான குழும அமைப்பு:</u>

குடும்பங்களுடன் பிணைக்கப்பட்ட குழுமங்கள், இந்தியாவில் மூலதனத் திரட்டலை அமைப்புசார்ந்து பதிவு செய்யும் சட்டக் கட்டமைப்பாகும். முதல் நிலையிலான குழும-குடும்பப் பிணைப்பு உலகளாவிய முதலாளித்துவ நிறுவனங்களில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது, அதாவது குடும்பங்களின் தனிப்பட்ட உறுப்பினர்கள் பங்குகளின் மீது உரிமையும் கட்டுப்பாடும் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்தியாவில், குழுமங்களுடன் பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்துக்குள்ள பிணைப்பு குடும்பத்தின் கட்டுப்பாட்டைப் பேணுவதில் தனித்துவமானதாகவும், குறிப்பாதானகவும் உள்ளதோடு மட்டுமல்லாது, ஒரு சட்டமுறை நிறுவனமாக இந்தச் சலுகை இந்துக்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது, இது இந்துத் தனியாள், குடும்பச் சட்ட அரசுநெறிகளில்

வரையறுக்கப்பட்டுள்ளது, அதாவது முஸ்லீம், பார்சி, கிறிஸ்தவர், யூதர் அல்லாத எவரும் ஓர் இந்துவாகக் கருதப்படுவார்.

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் மூன்று-படிச் செயல்வழி மூலம் வணிகக் குழு அமைப்பின் நிறுவன அடிப்படையாகச் சட்டமுறையாக்கப்பட்டது.

முதலாவதாக, இந்துச் சட்ட நெறி அரசுச் சட்ட நெறியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. முஸ்லீம், கிறிஸ்தவர், பார்சி அல்லது யூதர் அல்லாத ஒருவர், பௌத்தம், சமணம் மற்றும் சீக்கியம் போன்ற பிற நிறுவனமயமாக்கப்பட்ட மதத்தைக் கடைப்பிடிக்கிற ஒருவர், மத ஒழுங்கமைப்புகளுக்குப் புறத்தே ஆதிவாசியாக இல்லாத ஒருவர் இந்து ஆவார் என வரையறுக்கப்பட்டது. ஒருவர் தான் இந்து அல்ல என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அந்தத் தனியாளையே சாரும் (தாஸ்குப்தா, 2016).

இரண்டாவதாக, இந்துச் சட்ட நெறி தயாபாகா மற்றும் மிடாக்ஷரா சொத்துகள் வைத்திருப்பதற்கான அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தது (சொத்து மீதான பரம்பரை உரிமைகளை வரையறுப்பதில் வழக் சார்ந்த சட்டங்களை நீக்குவதற்கு முன்மொழியப்பட்ட அசல் வரைவில் செய்யப்பட்ட சமரசம்). இரண்டு இந்துக்களுக்கு இடையிலான திருமணம் மட்டுமே (சாதி நெறிமுறைகளுக்கு இடமளிக்கும் வழக்கத்தின் சட்டப்படி அகமணமுறை, புறமணமுறை ஆகிய இரண்டின் விதிகள் மற்றும் நடைமுறைகள்) சட்ட வரம்புக்குள் கொண்டுவரப்பட்டது. தத்தெடுத்தல், வாரிசுரிமை ஆகியவை வழக்கம் சார்ந்த நெறிகள் அடிப்படையில் நீதித்துறையில் வரையறுக்கப்பட்டது. ஆண் வம்சாவளியே சொத்தின் இயல்பான வாரிசுகளாக நிறுவனமயமாக்கப்பட்டது. திருமணத்திற்கு வெளியே பிறந்த குழந்தைகளுக்கு சொத்தின் மீதான எந்தவொரு உரிமையையும் பறிக்கப்பட்டது.

மூன்றாவதாக, எந்தவொரு திருமணமான இந்து ஆணும் 'கூட்டுக் குடும்பத்திலிருந்து' விலகி, ஒரு புதிய பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தைத் தொடங்குவதற்கான சட்ட வெளியை அது உருவாக்கியது. தனிக் குடும்ப அமைப்புகள் ஏற்பட்ட போதும், ஒவ்வொரு தனிக் குடும்பமும் ஒரு புதிய பிரிக்கப்படாத 'இந்துக் குடும்பத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் என்பதால்,

பிரிக்கப்படாத 'இந்துக் குடும்பம் ஒரு சட்டமுறை நிறுவனமாக நிலைத்திருக்க முடிந்தது.

இவ்வாறு, முஸ்லீம், கிறிஸ்தவர், பார்சி, ஜெயின் அல்லாத அனைத்துக் குடிமக்களுக்கும், இந்துத் தனியாள் சட்டம் அரசுச் சட்டமாக மாறியது. இந்தியாவில் செல்வம், சொத்துக்களின் அமைப்பு முறையில் ஆணாதிக்க அடிப்படையிலான சொத்துரிமை கட்டமைப்பு நிறுவனமயமாக்கப்பட்டது.

மிடாக்ஷரா சட்டத்தின் கீழ் மகள்களுக்கு (மனைவிகள் / விதவைகள் / விவாகரத்துப் பெற்றவர்களுக்கு அல்ல) சமமான இணைமரபுரிமைகளை வழங்கிய 2005 சட்டத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் வரை பெண்களுக்கு அனைத்துச் சொத்துக்களிலும் சம பங்கு மறுக்கப்பட்டது, 'நிலம் துண்டாடப்படுவதைத் தவிர்ப்பதற்காக என்று கூறி பெண்களுக்கு நிலத்தில் எந்தவிதச் சொத்து உரிமையும் மறுக்கப்பட்டது.

ஆனால், நாங்கள் ஆய்வு செய்த நேர்வுகளில், 2011ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கூட, ஒரு விழுக்காடு பெண்கள் மட்டுமே மகள்களாக இணை மரபுரிமைகள் கொண்டிருக்கக் கண்டோம். இவ்வாறு இந்து, பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் என்ற இரண்டு வரையறைகளின் உதவியுடன், மதம், சாதி, ஆணாதிக்கம் ஆகியவை சொத்துரிமைகளை நிர்ணயிப்பதற்கான நிறுவன அடிப்படையாக நிறுவப்பட்டன.

பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தைச் சட்டபூர்வமான அமைப்பாக்குவதன் மூலம் இந்து ஆண்களுக்குச் சாதகமாகச் சொத்துரிமையை அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஒரு சட்ட உரிமையாக மாற்றியமைத்தனர். இது சுதந்திரத்திற்குப் பிறகான முதல் பத்தாண்டுகளில் செய்யப்பட்ட மிக முக்கியத் தலையீடாகும்

.

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் நடைமுறைக்கு வந்த சூழ்நிலைகள் விவாதத்திற்கு உட்பட்டவை. இந்தியாவில் வருவாய், சொத்து வரிச் சட்டங்களின் கீழ், பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் வரிவருவாய்க்கு ஒரு தனித்துவமான அளவீடாக மதிப்பிடப்படுகிறது.

சட்டத்தில் (அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்துச் சட்டநெறிமுறையின் அடிப்படையில்), ஒரு பிரிக்கப்படாத இந்துக் குடும்பம், பொதுவான மூதாதையரிடமிருந்து வந்த அனைத்து ஆட்களையும், அவர்தம் மனைவிமார்கள் மற்றும் திருமணமாகாத மகள்களையும் உள்ளடக்கியது; இந்து இணை-மரபுரிமை என்பது பிறப்பின் அடிப்படையில் சொத்துரிமை பெறுவதற்கான அமைப்பாகும்.

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் சட்டப்படியான வரிசெலுத்தும் நிறுவனமாகவும், தனியாட்களிடமிருந்தும், பெருங்குழுமங்களிடமிருந்தும் (குழுமச் சட்டம், பங்குதாரர் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டவை) வேறுபட்டுத் தனித்துவமானதாகவும் அங்கீகரிக்கப்பட்டது.

பெருங்குழுமம் மற்றும் தனியாள் வருமான வரிச் சட்டங்களால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற அனைத்து நிறுவன அமைப்புகளும் குழுமச் சட்டத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டுள்ளன என்ற போதும், பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் இந்துத் தனியாள் சட்டத்தின் அடிப்படையிலேயே இந்திய வரிச் சட்டத்தில் ஒரு சட்டப்பூர்வ நிறுவனமாக வரையறுக்கப்படுகிறது.

பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தை (HUF) 1955-56ஆம் ஆண்டில் தனியாள் சட்ட நெறிகளினால் வரையறுத்த பின்னர், சொத்து வரிச் சட்டம் 1957, 1961 வருவாய் வரி சட்டத்தின் பிரிவு 2 ஆகியவற்றின் மூலம் இந்தப் பிரிக்கப்படாத இந்துக் குடும்ப அமைப்பை நிலைத்திருக்க செய்ய அரசு அடுத்த கட்ட நடவடிக்கை எடுத்தது. இதன் மூலம் 'குடும்ப வருவாய்' மீதான வரியை ஏய்ப்பதற்கான வசதிகளும், மற்றப் பிரிவுகளுடன் ஒப்பிடும் போது அதிக வரிவிலக்குகள், குறைந்த வரிவிகிதங்கள் ஆகிய சலுகைகளும் அளிக்கப்பட்டன.

வாஞ்சூ குழு, கே என் ராஜ் குழுவின் பரிந்துரைகளினால் பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தின் மீதான வரி விகிதங்கள் தனியாட்களின் மீதான வரி விகிதத்திற்குச் சமமாக்கப்பட்டன.

இந்தியாவில் 150 குடும்பத்திற்குச் சொந்தமான வணிகக் குழுக்கள் பற்றிய எங்கள் ஆய்வு இரண்டு கட்டங்களாக (2003-05 மற்றும் 2008-11) மேற்கொள்ளப்பட்டது, எங்கள் கணக்கெடுப்பில்

இந்து வம்சாவழியைச் சேர்ந்த இரண்டு குழுக்கள் தவிர, அனைத்து வணிகக் குழுக்களும் பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தை (HUF ) சேர்ந்தவை.

சராசரியாக, ஒவ்வொரு குழுவும் 47 நிறுவனங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்டுப்படுத்தின. ஒவ்வொரு வணிகக் குழுவும் சராசரியாக மூன்று முதல் நான்கு சார்புக் குழுமங்களையும் ஒன்று முதல் மூன்று முதன்மைக் குழுமங்களையும் கொண்டிருந்தன.

இந்தக் குழுமங்களில் குடும்பத்தின் தலைவரும், மற்ற உறுப்பினர்களும் தனியாட்களாகப் பங்குகள் வைத்திருந்தனர். பிரிக்கப்படாத இந்துக் குடும்ப அமைப்புகள் இந்தக் குழுமங்களில் அடுத்த மிகப் பெரிய ஒற்றைப் பங்குதாரராக இருந்தன.

குறைந்தது இரண்டு குடும்ப உறுப்பினர்கள் இந்தக் குழுமங்களின் இயக்குநர்களாக இருந்தனர். இந்தக் குழுமங்கள் பிற வரையறுக்கப்பட்ட பொது, தனியார் மற்றும் கூட்டுக் குழுமங்களின் பங்குகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. அத்தகைய குழுமங்களில், குடும்ப உறுப்பினர்களும், பிற வணிகக் குடும்பங்களின் நெருங்கிய கூட்டாளிகளும் இயக்குநர்களாகச் செயல்பட்டனர்.

இவ்வாறு வணிகக் குடும்பங்களால் மூலதனக் திரட்டல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதற்கான உடைமையுரிமைக்கும் ஆளுகைக்கும் முறையான கட்டமைப்பு உருவாக்கப்படுகிறது.

கணக்கிடப்பட்ட 35.3 விழுக்காடு குழுக்களில், பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்கள் பட்டியலிடப்பட்ட பொதுத் துறை நிறுவனங்களில் குழுக் குழுமங்களின் பங்குகளைப் வைத்திருக்கவில்லை, வரையறுக்கப்பட்ட தனியார்' நிறுவனங்களிலிலேயே அவற்றை வைத்திருந்தன.

கணக்கிடப்பட்ட 61.3 விழுக்காடு குழுக்களில், பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தின் தலைவரும், மற்ற உறுப்பினர்களும் பட்டியலிடப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களில்

பங்குகளைக் கொண்டிருந்தனர். இவ்வாறு பிரிக்கப்படாத இந்துக் குடும்பமும், அதன் உறுப்பினர்களும் ஒரே நேரத்தில் வருவாய் பெறும் விதத்தில் இந்தக் குழுக்கள் பேணிக் காக்கப்படுகின்றன.

அதே நேரத்தில், பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் மற்றச் சொத்துகளையும் வைத்திருக்க முடியும். காட்டாக, வீடுகள், பணம், தங்கம், பங்குச் சான்றிதழ்கள், நிலையான வைப்புத்தொகை ஆகியவை வணிகக் குழுவின் சொத்துக் கணக்கில் கருதப்பட மாட்டா. பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தின் வருவாயும் செல்வ இருப்புக்களும் வணிகக் குழுவின் உரிமை மற்றும் சொத்துகளின் ஆளுகையில் கணக்கிடப்படுவதில்லை.

குழுமங்கள் மற்றும் குடும்பங்களின் இந்த ஒருங்கிணைந்த அமைப்பு பல சலுகைகளைப் பெற உதவுகிறது, இதில் இரண்டு முக்கியச் சலுகைகளாக 1. வரி ஏய்ப்பு, 2. வணிகக் குழுவின் மூலதனச் சுற்றுகள் மீது குடும்பத்தின் கட்டுப்பாடு ஆகியவை அமைந்துள்ளன.

உதாரணமாக அ, ஆ, இ என்ற மூன்று சகோதரர்களும் ஒரு நிறுவனத்தைச் சொந்தமாக வைத்துள்ளனர். அவர்களில் ஒவ்வொருவரும் திருமணமானவர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் திருமணமாகிய இரண்டு மகன்கள் உள்ளனர். அ, ஆ, இ ஆகிய ஒவ்வொருவருக்கும் ரூ.12 லட்சம் ஆண்டு வருவாய் கிடைப்பதாகக் கொள்வோம்.

பிரிக்கப்படாத இந்துக் குடும்ப அமைப்புக்கென்று சட்ட வழிமுறை இல்லாதிருப்பின் 2015-16 நிதியாண்டிற்கான வரிவிதிப்பு விகிதங்களின் படி சகோதரர்கள் ஒவ்வொருவரும் வருமான வரியாக ஆளுக்கு ரூ. 5,55,000/- செலுத்த வேண்டும்.

ஆனால் அ, ஆ, இ சகோதரர்கள் வருமான வரிச் சட்ட விதிகள் மற்றும் இந்துச் சொத்துகளைப் பற்றிய நான்கு சட்டங்களின் அடிப்படையில் தங்களுக்கிடையில் குறைந்தது பத்து பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களை உருவாக்கி, அவர்களின் வருவாயைத் தனியாள் வரிக் கணக்குகளிலும், பத்துப் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களுக்கிடையிலும் பகிர்ந்து கொள்ள முடியும். அத்தகைய சூழலில், நிறுவனத்தில் பங்குதாரராக உள்ள மூன்று சகோதரர்களும்

அவர்களது குடும்பங்களும் செலுத்த வேண்டிய மொத்த வரித் தொகை வெறும் ரூ.35,000/- மட்டுமே.

வருமான வரிச் சட்டத்தின் கீழ் பிற விதிவிலக்குச் சாத்தியப்பாடுகளைத் தனித்தனியாகப் பயன்படுத்துவதன் மூலம், பல ஆதாரங்களிலிருந்து வரும் மிகப்பெருமளவிலான வருமானத்துக்குச் செலுத்த வேண்டிய வரிப் பொறுப்பான்மையை சுழிய அளவிற்குக் குறைக்க முடியும். செல்வம் மற்றும் சொத்து வரியை ஏய்ப்பதற்குப் பிரிக்கப்படாத இந்துக் குடும்ப அமைப்பைப் பயன்படுத்த முடியும். மேலும், பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தின் உறுப்பினர் எவரும் திரட்டப்பட்ட 'குடும்ப வருவாயின் மூலமே வருவாய் ஈட்டினால், அந்த வருவாய் 'பிரிக்கப்படாத குடும்பத்தை'ப் பராமரிப்பதற்கான கூடுதல் செலவாகக் கருதப்பட்டு வரிவிதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

இந்துக் குடும்பம் நீடிப்பதால் கிடைக்கும் பொருளூக்கம்:

அ, ஆ அல்லது இ-க்கு ஒரு மகளும், திருமணமான ஒரு மகனும் இருந்தால், அவரால் ஐந்துக்கு பதிலாக மூன்று பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களை மட்டுமே உருவாக்க முடியும்.

அவர்களில் யாருக்காவது மகன் இல்லாது இரண்டுமே மகள்களாக இருந்தால், அவர் இரண்டு பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களை மட்டுமே உருவாக்க முடியும். அதேபோல், மகன்களில் யாராவது திருமணம் செய்து கொள்ளா விட்டால், கூடுதலாகப் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களை உருவாக்குவதற்கான வாய்ப்பும் குறையும்.

இவ்வாறு ஒவ்வொரு தலைமுறையிலும் மகனுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமும், அரசின் இந்து சட்டநெறிமுறையின் படி சாதி, மத நெறிமுறைகளால் பிணைக்கப்பட்ட பாரம்பரியத் திருமணங்களைச் செய்வதன் மூலமும் சாதி இந்துக் குடும்பத்தை மூலதனத் திரட்டலுக்கான ஓர் அலகாக நிர்மாணிப்பதற்கு, இந்தியாவின் பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தின் வரி அமைப்பு முறையான சட்டப்பூர்வமான பொருளூக்கம் அளித்துள்ளது.

சட்ட வழக்கு அடிப்படையில் பிரிக்கப்படாத இந்து குடும்பப் பயன்பாட்டின் வகைபாடு:

1.இந்துச் சட்ட அடிப்படையில், சட்டங்களில் ஏற்கப்பட்ட இந்து வரையறையைப் பயன்படுத்தி இந்துக் குடும்பத்திற்குள்ளே (ஆண் வம்சாவளியை அடிப்படையாகக் கொண்டது) சொத்துக்களை பராமரித்து வைத்திருத்தல்.

2. வரி ஏய்ப்புக்காகத் தனியாட்களுக்கும், பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்திற்கும் இடையில் வருவாயைப் பிரித்தல்.

3. ஒரே ஆளே தலைவராகவும் நிறுவனராகவும் செயல்பட்டுப் பிரிக்கப்படாத இந்துக் குடும்பம், மற்றும் குழுக் குழுமங்களுக்கிடையில் சிக்கலான பரிவர்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் பெரிய அளவிலான வரிகளை ஏய்த்தல்.

4. மூலதன ஆதாயங்களில் வரிவிலக்குச் சலுகை பெறுதல்.

5. முன்னோர்களால் வரதட்சணையாகப் பெறப்பட்டதாகக் கூறிப் பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தில் பெரும் மதிப்பிலான நிலத்தை வைத்திருத்தல்.

6. பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் குழுக் குழுமங்களுக்கிடையில் நிதிகளையும், சொத்துக்களையும் ஒன்றிணைத்தல்.

7. பிரிக்கப்படாத இந்துக் குடும்பக் குழுக் குழுமங்களின் பங்குகளை விற்றல், வாங்கலின் மூலம் ஊக லாபம் ஈட்டுதல்.

8. ஒரே குடும்பத்தில் பொதுவான தலைவர்களையும் உறுப்பினர்களையும் கொண்ட பல பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களை உருவாக்குதல், பின்னர் இந்த வெவ்வேறு பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களின் ஒரு சொத்தை பல பரிவர்த்தனைகளில் ஈடுபடுத்துதல். காட்டாக, பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களுக்கிடையில் ஒரே நிலம் வெவ்வேறு நோக்கங்களுக்காக உறுதியளிக்கப்பட்டு மீண்டும் மீண்டும் பரிமாற்றத்திற்குள்ளாதல்.

வட்டார உள்ளடக்கம்:

1961ஆம் ஆண்டில் மகாராஷ்டிரா, குஜராத், பஞ்சாப் டெல்லி, அரியானா ஆகிய ஐந்து மாநிலங்கள் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையில் 31 விழுக்காட்டைக் கொண்டிருந்தன. 1989இல், மொத்தமுள்ள பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களில் இந்த மாநிலங்கள் 47 விழுக்காட்டைக் கொண்டிருந்தன.

அதே காலகட்டத்தில், நடுத்தர வருவாய் கொண்ட தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், ஆந்திரம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களிலும், குறைந்த வருவாய் கொண்ட பீகார், ராஜஸ்தான், ஒரிசா, உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களின் விகிதம் குறைந்திருந்தது. நடுத்தர வருவாய் கொண்ட மாநிலங்களில் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களின் விகிதம் 31 விழுக்காட்டிலிருந்து 28 விழுக்காடாகக் குறைந்தது; குறைந்த வருவாய் கொண்ட மாநிலங்களில் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களின் விகிதம் 37 விழுக்காட்டிலிருந்து 23 விழுக்காடாக கணிசமாகக் குறைந்தது.

1976இல் கேரளத்தில் கூட்டுக் குடும்ப அமைப்பும், பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்திற்கான சலுகைகளும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. 1990க்குப் பிறகு தமிழ்நாட்டிலும் அவ்வாறே செய்யப்பட்டது இந்திய அரசு பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தின் வருவாய் மற்றும் வரி குறித்தத் தரவுகளை வெளியிடுவதை 1990 முதல் நிறுத்தி விட்டது. இந்த மாநிலங்களில் 1990க்குப் பிறகு பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களின் பங்கு மேலும் குறைந்து விட்டதாகத் தெரிகிறது.

மாநில அளவிலான மாறுபாடுகள்:

வட இந்திய மாநிலங்களான அரியானா, இமாச்சல், ஜம்மு-காஷ்மீர், உ.பி., டெல்லி ஆகியவற்றின் சொத்துரிமைச் சட்டங்கள் ஆண் வாரிசுகளுக்கு வலுவான முன்னுரிமை அளிப்பதையே பிரதிபலிக்கின்றன. குஜராத், பம்பாய், ஆந்திரா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் அத்தகைய முன்னுரிமை குறிப்பிடப்படவில்லை. இவற்றில் .ஆணாதிக்கக் கட்டமைப்பு வேரூன்றியுள்ள தனியால் சட்டங்களால் அது வரையறுக்கப்படுமாறு விடப்பட்டுள்ளது (சக்சேனா 2012).

1989க்கு பிறகு மாநில வாரியாகப் பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் குறித்த தரவுகளை வெளியிடுவதை இந்திய அரசு நிறுத்தியுள்ளது. 1976ஆம் ஆண்டில் கேரளம் கூட்டுக் குடும்ப முறையை ஒழித்தது, அதனுடன் பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்திற்கான சலுகைகளும் அகற்றப்பட்டன, மற்றத் தென் மாநிலங்களில் பெண்களுக்குச் சம உரிமைகளை வழங்கும் விதமாக சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. கேரள கூட்டுக் குடும்ப ஒழிப்புச் சட்டத்தின் (1976) வழியில் ஆந்திரப் பிரதேசத் திருத்தச் சட்டம் (1986), தமிழ்நாடு திருத்தச் சட்டம் (1990), கர்நாடகத் திருத்தச் சட்டம் (1990) ஆகியவை நிறைவேற்றப்பட்டன.

தென் மாநிலங்கள் தவிர, மகாராஷ்டிராவிலும் மகாராஷ்டிரத் திருத்தச் சட்டத்தின் (1994) கீழ் இணைச் சொத்துடைமை தொடர்பான சட்டத் திருத்தம் செய்யப்பட்டது. அதிக வருவாய் கொண்ட மாநிலங்களில், பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களில் பெரும் பகுதி குஜராத், மகாராஷ்டிராவில் காணப்பட்டது, அதற்கடுத்தபடி, பஞ்சாப், டெல்லியிலும் அதிகமாகக் காணப்பட்டது. மகாராஷ்டிராவில், 1961க்கும் 1989க்கும் இடையில் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களின் விகிதம் இரட்டிப்பாகியது. குஜராத்தில் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களின் விகிதம் 1961 முதல் 1980 வரை 10 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடாக அதிகரித்து, 1989ல் 14 விழுக்காடாக நிலைபெற்றது.

டெல்லியில் 1980 வரை குழுமங்களில் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களின் விகிதம் 2-3 விழுக்காடு என்ற நிலையான விகிதத்தைக் கொண்டிருந்தாலும், அதன் பின்னர் அதிகரிக்கவே செய்தது. 1989ல் இந்தியாவில் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களின் மொத்தத் தொகை 7 விழுக்காடு வரை இருந்தது.

பஞ்சாப் மாநிலத்தில் 1961க்கும் 1980க்கும் இடையில் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களின் விகிதம் 9 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாகச் சரிவடைந்தது. ஆனால் 1989இல் 6 விழுக்காடாக அதிகரித்தது.

<u>வணிகக் குழுமங்களின் மூலதன சுற்றுகள் மீது குடும்பத்தின் கட்டுப்பாடு:</u>

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் பெரும்பாலும் வரி ஏய்ப்புக்கான ஒரு கருவியாகக்

கருதப்படுகிறது. குடும்பத்திற்குச் சொந்தமான வணிகக் குழுமங்களின் சொத்து இருப்புகளின் அமைப்பில் இதன் முக்கியத்துவம் குறித்துப் போதிய அளவில் ஆய்வு செய்யப்படவில்லை.

ஒரு இந்து ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிக்கப்படாத இந்துக் குடும்ப கணக்குகளுக்கு தலைவராக இருக்க முடியும். ஒரு தனிப்பட்ட நபராகவும், பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தின் தலைவராகவும் இரட்டை பாத்திரம் வகிப்பதன் மூலம் பெருநிறுவன நிர்வாக கட்டமைப்புகளுடன் பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்திற்கான பிணைப்பு, ஏற்படுத்தப்பட்டது.

உதாரணமாக, ஒரு பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் மற்ற நபர்களுடன் பங்காளராக செயல்பட முடியாது, ஆனால் ஒரு பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தின் தலைவரால் அவ்வாறு செயல்பட முடியும் (சச்ச்தேவா 1987). இதேபோல் தலைவரும், பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களும் ஊதியம் பெற உரிமை உண்டு.மேலும் ஒரு பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வணிக நிறுவனங்களின் உரிமையாளராக இருக்க முடியும். பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தகங்கள் தொடர்பான பல்வேறு வகையான சொத்துக்களையும் வைத்திருக்க முடியும்.

பெறுநிறுவன நிர்வாகக் கட்டமைப்புகளில் நிறுவன உட்பொதித்தல்:

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம், வரி தவிர்ப்பதற்கான ஒரு கருவியாக இருப்பதைத் தவிர, இந்தியாவில் இந்து குடும்பத்திற்கு சொந்தமான வணிகக் குழுக்களுக்கான சொத்துக்களை வைத்திருப்பதற்கும் முக்கியமாக பயன்படுத்தப்படுகிறது.

வரி தவிர்ப்புக்கான ஆதாரமாக இருப்பதைத் தவிர, இந்து வம்சாவளியைச் சேர்ந்த 'பழைய' மற்றும் 'புதிய' முதலாளித்துவ வணிக நிறுவனங்கள் குடும்ப சொத்துக்களை ஒருங்கிணைப்பதற்கும், ஒருங்கிணைந்த இயக்குநரகம், பங்கு உடைமைகளின் மூலம் பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தில் முக்கிய நிர்வாகப் பொறுப்புகளையும், பங்குகளின் உரிமைகளையும் கொண்டவர்கள் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களுக்கு இடையிலும், அதன் அங்கத்தினருக்கு இடையிலும் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதன் மூலம் மூலதனத்தின் மீதான குடும்பத்தின் கட்டுப்பாடு உறுதி செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டது.

வணிகக் குழுவில் உள்ள மூலதன சுற்றுகள் மீது குடும்பத்தின் கட்டுப்பாட்டு முறைகளை விளக்குவதற்கு, எங்கள் கணக்கெடுப்பிலிருந்து மற்றொரு வழக்கு ஆய்வை முன்வைக்கிறோம்.

X வணிகக் குடும்பத்தைச் சேர்ந்த A என்ற ஆண், Y, வணிகக் குடும்பத்தைச் சேர்ந்த B என்பவரை மணந்தார். அவர்களுக்கு C, D என இரண்டு மகன்களும், E என்று ஒரு மகளும் உள்ளனர். C, D இருவருக்குமே M, N என்று ஒரு மகன் உள்ளனர். மகன்கள் C, D இருவருமே V, W வணிக குடும்பங்களைச் சேர்ந்த G மற்றும் Hஐ திருமணம் செய்து கொண்டனர்.

X குடும்பத்தில் இந்த கூட்டணிகளிலிருந்து உருவாக்கப்பட்ட பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்கள்:

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம்1 (A -தலைவர், C-யும், D-யும் இணை உடைமையாளர்கள், B உறுப்பினர்):

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம்2(C -தலைவர், G -உறுப்பினர்)

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம்3(D -தலைவர், H -உறுப்பினர்)

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம்4(A-தலைவர், C -இணை உடைமையாளர், B மற்றும் G -உறுப்பினர்)

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம்5(A-தலைவர், D -இணை உடைமையாளர், B மற்றும் H -உறுப்பினர்)

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம்6(C -தலைவர், M -இணை உடைமையாளர்(C -ஐ பாதுகாவலராகக் கொண்ட சிறுவர்)

பிரிக்கப்படாத இந்துக் குடும்பம்7(D -தலைவர், N -இணை உடைமையாளர்(D -ஐ பாதுகாவலராகக் கொண்ட சிறுவர்)

V, W மற்றும் Z குடும்பங்களில் இதேபோன்ற பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்கள் உள்ளன. X குடும்பம் - ABC லிமிடெட் மற்றும் DEF லிமிடெட் ஆகிய இரண்டு முக்கிய நிறுவனங்களைக் கொண்டிருந்தது. ஏபிசி லிமிடெட் நிறுவனத்தில் 5 விழுக்காடு பங்குகளை A, B மற்றும் C கொண்டிருந்தனர். பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்கள் 1, 2 மற்றும் 4 ஆகியவை 3 விழுக்காடு பங்குகளைக் கொண்டிருந்தன.

இதேபோல், DEF லிமிடெட்டில் 6 விழுக்காடு பங்குகளை A மற்றும் D கொண்டிருந்தன. மற்றொரு 2 விழுக்காட்டை பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்கள் 1, 3 மற்றும் 5 ஆகியவை கொண்டிருந்தன. மற்ற 8 குழு நிறுவனங்களும் சேர்ந்து ABC லிமிடெட் நிறுவனத்தின் 10 விழுக்காடு பங்குகளை வைத்திருந்தன. 7 வெவ்வேறு குழு நிறுவனங்கள் DEF லிமிடெட்டில் 11 விழுக்காடு பங்குகளை

வைத்திருந்தன.

குழுவில் வேறு 2 துணை / வைப்பு நிறுவனங்களும் இருந்தன. இவை மற்ற 9 குழு நிறுவனங்களில் பங்குகளை வைத்திருக்கின்றன. பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் 6ம், 7ம் பத்து குழு நிறுவனங்களில் 2 விழுக்காடு பங்குகளை வைத்துள்ளன.

இரண்டு குழு நிறுவனங்கள், A, B, C, D, E, F, G, H உடன் முறையே A இன் தாத்தா, தந்தை மற்றும் தாயின் பெயரிடப்பட்ட மூன்று அறக்கட்டளைகளில் பங்குகளை வைத்துள்ளன. இந்த அறக்கட்டளைகள் ஆறு குழு நிறுவனங்களின் பங்குகளை வைத்துள்ளன.

V, Y, W குடும்பங்களைச் சேர்ந்த பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் ஆறு குழு நிறுவனங்களில் பங்குகளைக் கொண்டுள்ளன. மகள், மருமகன் மற்றும் மருமகள் (E, F, G மற்றும் H) ஆறு பெரு நிறுவனங்களில் தனிநபர்களாக பங்குகளை வைத்திருக்கிறார்கள், இதில் மூன்று கூட்டாண்மைகளாகவும், மூன்று நிறுவனங்களாகவும் இருந்தன.

இவ்வாறு தனிநபர்கள், பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்கள், நிறுவனங்கள் / மற்றும் அறக்கட்டளைகள் வெவ்வேறு நிறுவன நிர்வாகச் சட்டங்களால் நிர்வகிக்கப்பட்டபோதும் பல்வேறு வகைகளில் பின்னி பிணைந்து 26 நிறுவனங்கள் மற்றும் இரண்டு அறக்கட்டளைகளைக் கட்டுப்படுத்துகின்றன.

குடும்பத் தலைவர் A, ஆறு நிறுவனங்களில் இயக்குநராக உள்ளார், மகன்கள் C, D மற்றும் மருமகன் F ஆளுக்கு நான்கு நிறுவனங்களில் இயக்குநராக உள்ளனர். மகள் E இரண்டு நிறுவனங்களில் இயக்குநராக உள்ளார். V, W மற்றும் Y குடும்பங்களில் இருந்து தலா மூன்று உறுப்பினர்கள் இரண்டு நிறுவனங்களில் இயக்குநராக உள்ளனர். குடும்பத்தில் உள்ள அனைத்து பெண்களும் நிர்வாக அதிகாரியாக அறக்கட்டளைகளை நிர்வகிப்பதில் ஈடுபட்டுள்ளனர். பிரிக்கப்படாத இந்துக் குடும்ப ஏற்பாடு இல்லாதிருந்தால், வணிகக் குழுவில் உள்ள நிறுவனங்கள் மீது குடும்பக் கட்டுப்பாட்டைக் கொண்டுவருவதற்கு குடும்ப உறுப்பினர்கள் அதிக அளவு பங்குகளை வைத்திருக்க வேண்டும்.

இந்த வணிகக் குழு இந்தியாவின் நான்கு மாநிலங்களில் பரவிக் காணப்படும் இரண்டு பெரிய மற்றும் ஆறு நடுத்தர அளவிலான தொழிற்சாலைகளையும், இரண்டு சிறிய அளவிலான நிறுவனங்களையும் கொண்டுள்ளது. இவற்றில், இரண்டு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களுக்கும், நான்கு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கும், இரண்டு பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களுக்கும், இரண்டு கூட்டு நிறுவனங்களுக்கும் சொந்தமானவை. இந்த தொழிற்சாலைகள் வெவ்வேறு நிலைகளில் உள்ள ஆடைத்துறை இடைநிலை பொருட்களின் உற்பத்தியின் மூலம் உலகளாவிய மதிப்பு சங்கிலியுடன் ஒருங்கிணைக்கப்பட்டன.

இந்த குழுவில் உள்ள மற்ற 15 பெரு நிறுவனங்கள் ஹோட்டல், வர்த்தகம், சொத்து நிர்வாகம், குத்தகைக்கு எடுத்தல் மற்றும் பொழுதுபோக்கு (டிஜிட்டல் ஸ்டுடியோ) ஆகியவற்றில் முதலீடு செய்துள்ளன. ஒரு கூட்டாண்மை நிறுவனம் மருத்துவ ஒலிபெயர்த்தலில் முதலீடு செய்துள்ளது, அறக்கட்டளைகள் லாப நோக்குடைய பள்ளிகளையும், கோயில்கள், முதியோர் இல்லம், மற்றும் சுற்றுச்சூழல் பூங்கா ஆகியவற்றையும் நடத்தின.

இருப்பினும், சராசரியாக, இருபத்து ஆறு பெருநிறுவனங்களில் பதினாறு நிறுவனங்கள் முந்தைய நான்கு ஆண்டுகளில் இழப்புகளைப் பதிவு செய்தன. குழு நிறுவனங்கள் மற்றும் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்கள் வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்காக சொத்து மற்றும் வருவாய் பரிமாற்றங்களின் மூலம் இலாப நட்ட கணக்கை வணிகக் குழுக்களுக்குள் பரவலாக்கி குறைந்த இலாபங்களை காட்டுகின்றன.

.

இந்தியாவின் மிகப்பெரிய வணிகக் குழுவைப் பற்றிய நாஸின் (2016) இதேபோன்ற வழக்கு ஆய்வு, 88 குழு நிறுவனங்களில் 64 நிறுவனங்களில் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளில் இழப்பு ஏற்பட்டதாகக் காட்டுகிறது.

இதுபோன்ற தொடர்புடையவர்களுக்கிடையிலான பரிவர்த்தனைகள் சட்ட அடிப்படையில் நிறுவனத்தின் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். குழுவில் உள்ள குடும்ப உறுப்பினர்களே வாரியத்திலும் உள்ளதால் இத்தகைய பரிவர்த்தனைகள் குடும்பத்துடன் ஒன்றிணைந்த பெருநிறுவன நிர்வாக கட்டமைப்பின் சட்டப்பூர்வ

அனுமதியால் ஆசீர்வதிக்கப்படுகின்றன.

இந்த பிணைக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து தன்னிச்சையாக வரிச் சட்டத்திலும் பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் உள்ளது. எடுத்துக்காட்டாக, மூன்று தொழிற்சாலைகளுக்கான நிலம் X குடும்பத்தின் மூன்று வெவ்வேறு பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களுக்கு சொந்தமானதாகவும், தொழிற்சாலையை வைத்திருக்கும் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டதாகவும் காட்டப்படுகிறது.

பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தின் குத்தகை வருவாய் மீதான வரிவிதிப்பு தனியொருவருக்கான வரிக்கு இணையானதாகவே இருக்கும். எங்கள் ஆய்வுக்குட்பட்ட நேர்வுகளில் நாங்கள் காட்டியுள்ளபடி பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் ஒரு பெருங்குழுமம் ஆகும், எனவே இது இந்தியாவில் பெருங்குழும நிர்வாகச் சட்ட அமைப்பின் மூலம் வருமானம் மீதான பெருங்குழும வரிவிலக்கை நிலைத்திருக்கச் செய்வதற்கு மற்றொரு வழியாகும்.

தாய், மகள் மற்றும் மருமகள் (B, E, G மற்றும் H) உடனான எங்கள் நேர்காணல்கள் குழும / குடும்பப் பிணைப்பு குறித்த மற்ற இரு தன்மைகளை வெளிப்படுத்தின.

நான்கு பெண்களும் திருமணத்தின் மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட குடும்பங்களை உள்ளடக்கிய பல வணிகக் குழுக்களுக்கான நிதி திரட்டலில் (சொந்த மூலதனம்) எவ்வாறு தாம் ஒரு பகுதியாக இருக்கின்றனர் என்பதை விவரித்தனர். பணமாகவும் அல்லது முறையாகத் தங்கள் சொந்த வங்கிக் கணக்குகளிலிருந்து பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்திற்கான காசோலைகளாகவும் சேர்க்கப்படும் நிதியை பெண்கள் ‘வைப்புத் தொகைகள்’ என்று குறிப்பிட்டனர். இவை பின்னர் பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தின் மூலம் நிலம் வாங்குதலிலும் இயந்திரங்கள், பங்குகள் மற்றும் பத்திரங்களிலும் முதலீட்டு நிதி போன்ற பல்வேறு தொடர்புடைய பரிவர்த்தனைகளுக்கு வழங்கப்படும், இவை அனைத்தும் குழுக் குழுமங்களின் மூலதனத் திரட்டலுக்காகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

குடும்ப வருமானம் போன்றே அதே சுற்றுவட்ட வழிகளில் ஆரம்ப மதிப்பை விடக் கூடுத்லாக

மீண்டுவரும் மூலதனச் சுற்று, மார்க்ஸின் முக்கிய வெளிபபாடான ப-ப', அதாவது (மார்க்ஸ், 1887) தன் ஆரம்ப மதிப்பை விடக் கூடுதலான பணத்தைப் பெற்றெடுக்கும் மூலதனத்தின் சமூக உறவைக் குறிப்பிடுகிறது.

பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்திற்கும் தனியொருவருக்கும் இடையிலான இந்தப் பணப் பரிவர்த்தனைகள் ஒருபோதும் பெருங்குழுமக் கணக்குகளில் காண்பிக்கப்படுவதில்லை.

தாய், மகள் மற்றும் மருமகள் (B, E, G மற்றும் H) உடனான எங்கள் நேர்காணல்கள் குழுமத்துக்கும் குடும்பங்களுக்கும் இடையிலான பிணைப்பு பற்றிய முக்கியத் தன்மைகளை வெளிப்படுத்தின. நான்கு பெண்களும் குடும்பத்தினரால் தரகர் மூலமாக பார்த்த இணையரையே திருமணம் செய்து கொண்டனர். நான்கு பெண்களில் இருவர் தங்கள் இன மரபிலிருந்து வேறுபட்ட குடும்பங்களில் திருமணம் செய்து கொண்டனர். நான்கு திருமணமும் வர்க்க நிலையின் படியும், அகமண, புறமண சாதி விதிகளின் அடிப்படையிலும் அமைந்தன.

மகனுக்கான முன்னுரிமையால் பிணைக்கப்பட்ட சாதி இந்து ஆணாதிக்கக் குடும்பம், நெருக்கம், நம்பிக்கை, குடும்ப உறவுமுறை ஆகிய அனைத்திற்குமே சட்ட அடிப்படை உள்ளது.

இவ்வாறு பிரிக்கப்படாத இந்துக் குடும்பத்தில் உறுப்பினராக உள்ள தனியொருவரைச் சட்டமுறையில் பிரித்துத் தனியாளும், பிரிக்கப்படாத இந்துக் குடும்பமும் குழுமத்தின் மீது உரிமையும், ஆளுகையும் கொண்டிருக்கும் விதமாக முறையான சட்டக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது, இதில் மூலதன உருவாக்கத்தில் குடும்ப உறுப்பினர்களிடையிலான பரிமாற்றத்தின் முறைசாரா தன்மை உட்பொதிந்துள்ளது.

சராசரியாக, ஒரு பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் என்பது ஒரு குடும்பத்திற்குச் சொந்தமான வணிகக் குழுவால் கட்டுப்படுத்தப்படும் ஒவ்வொரு ஐந்து குழுமங்களுக்கும், குடும்பத்திற்குச் சொந்தமான வணிகக் குழுக்கள் வைத்திருக்கும் கட்டமைப்புகளில் குடும்பத்தின் கட்டுப்பாட்டை சட்டப்படி எளிதாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கும் விதமாக உள்ளது.

பெருங்குழும நிர்வாக அமைப்புகளுடன் சாதி இந்து ஆணாதிக்க குடும்பத்தின் பிணைப்பானது இந்தியச் சட்டத்தில் முறையாகப் உட்பொதிந்துள்ளது. குடும்பத்திற்குச் சொந்தமான வணிகக் குழுவின் சமூக அமைப்பை உருவாக்கும் மூலதனத்தின் பொருளார்ந்த தன்மை இதுவே.

குழுமத்துக்கும் குடும்பத்துக்கும் இடையிலான தடையற்ற பிணைப்பு சட்டமுறையாக்கப்பட்டுள்ளது அதில் பிரிக்கப்படாத இந்துக் குடும்பம் குழுமமாக இருந்த போதும் குடும்பமாகப் பதியப்பட்டுள்ளது. இந்துக் குடும்பச் சட்டம், பெருங்குழும நிர்வாகச் சட்டங்கள், அரசின் வரிவிதிப்புச் சட்டங்கள் ஆகியவற்றில் இது செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் 'குடும்பத்திற்குச் சொந்தமான வணிகக் குழுவை' உருவாக்கும் நிறுவனங்களின் வலையமைப்பைச் சட்டப்படியாகவும் முறைப்படியாகவும் சாதி, ஆணாதிக்கம், மதம் ஆகியவற்றின் கீழ் இயக்கும் நிதி மற்றும் மூலதன ஓட்டங்களின் சுற்றுகளில் மூலதனம் முகன்மையான சமூகப் பங்கு வகிக்கிறது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இந்திய அரசு ஒரு மதச்சார்பற்ற அரசாகவும், தன் அனைத்துக் குடிமக்களுக்கும் சமவாய்ப்புகளை உறுதி செய்யும் அரசாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் குடும்பtத்துக்கும் குழுமத்துக்கும் இடைப்பட்ட இந்தத் தனித்துவமான, உறுதியான சட்டப் பிணைப்பு இந்துக் குடும்பத்திற்கு ஓர் அநீதியான சட்டச் சலுகையாக உள்ளது, முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள், யூதர்களுக்கு இத்தகைய சலுகை கிடையாது.

மகன்-முன்னுரிமையால் பிணைக்கப்பட்ட சாதி இந்து ஆணாதிக்கக் குடும்பம் இந்தியாவில் மூலதனத் திரட்டலுக்கான நிறுவனக் கட்டமைப்புகளின் சமூக மறுவுற்பத்திக்கு முக்கியமானதாகும். உறவுமுறையும், குடும்ப உறவுகளின் நம்பிக்கையும் முறைசாரா தன்மையும் சட்டமுறையில் இலாபத்தின் ஏரணமாக செயல்படுகிறது.

(தொடரும்)

# நான் ஏன் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தில் சேர்ந்தேன்?

## மகிழன்



தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் வட்டம் கடாட்சபுரம் கிராமத்தில் சின்னஞ்சிறு ஊர் ஆத்திக்காடு. பெரிய வரலாற்றுப் பின்னணி, அரசியல் பின்னணி இல்லாத ஒடுக்கப்பட்ட சாதிக் கிறித்தவர்கள் கணிசமாக வாழும் ஊர். வர்க்க அரசியல்,மத அரசியல் என்று பெரிய அளவில் கொடுமைகள் இருந்ததாக எனக்கு நினைவில்லை. பெரும்பாலும் விவசாயக் கூலிகள், வெகு சிலர் நிலம் வைத்திருக்கிறார்கள். எனவே உயர் சாதியினர் நிலங்களில் வேலை செய்வது, அவர்களைச் சார்ந்து வாழ்வது என்ற நிலைதான். சாதி மனப்பான்மை வெளிப்படையாக இருக்கும், மறைமுகமாக ஆதிக்கம் செலுத்தும் போக்கும் உண்டு.

இளைஞர்கள் எப்போதும் துணிந்து எதிர்ப்பதுண்டு. அதற்கு முக்கியக் காரணம் என் தாய் மாமா ஆத்திக்காடு M.A. சுந்தர். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் மாநிலக் கொள்கை பரப்பாளர்,




மாநிலப் பேச்சாளர் போன்ற பொறுப்புகளில் இருந்தவர். அவர் ஊருக்குத் தேவையான சில உரிமைகளைப் போராடிப் பெற்றுத் தந்தார். அதனாலேயே எங்கள் ஊருக்கு ஓர் அவப்பெயரும் உண்டு. சிறுத்தைகளைச் சிறுமைப்படுத்தும் அந்த அவப்பெயர்!

சாதி ஒழிப்பு, ஈழ விடுதலை, தமிழ்த் தேசியம் போன்ற பல்வேறு அரசியலுக்கும் அண்ணன் திருமாதான் அறிமுகம். திருமா பேச்சு தொலைக்காட்சியில் ஒளிபரப்பானால் ஊரே உட்கார்ந்து பார்க்கும். நானும் அவர் பேச்சுக்கு ரசிகன்தான்.

வீட்டில் மொத்தம் 5 பிள்ளைகளில் நான் இரண்டாம் பிள்ளை. ஏழ்மைக்கு நடுவிலும் என் அம்மா எங்கள் அத்தனை பேரையும் படிக்க வைத்தார். நான் சாத்தூர் புனித ஸ்தானிஸ்லாஸ் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இடைநிலை ஆசிரியர் பட்டம் பெற்றேன். அங்குதான் எனக்கு நூல்கள் படிக்கும் ஆர்வம் வந்தது. உலகத் தலைவர்கள் முதல் உள்ளூர்த் தலைவர்கள் வரை அங்குதான் அறிமுகமானார்கள்.

பிறகு 2009இல் சென்னைக்கு வேலை தேடி வந்தேன்.அப்போது ஈழப் போர் முடிவடைந்திருந்த காலம். அவ்வப்போது அரசியல் கட்சிகள் நடத்தும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களில் வந்து

நின்று வேடிக்கை

பார்ப்பதுண்டு. தமிழகத்தின் அரசியல் நகர்வுகளை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினேன். திராவிடம், கம்யூனிசம்,தமிழ்த் தேசியம் என்று உலகின் தத்துவங்களை அறிந்து கொள்ள முற்பட்டேன்.கிடைத்த புத்தகங்கள், வலையொளி, தொலைக்காட்சி விவாதங்கள் என எங்கெல்லாம் அரசியல் சார்ந்து பேசினாலும் கேட்பேன், அது எனக்குள் அரசியல் ஆர்வத்தைத் தூண்டியது. ஆனால் எந்தக் கட்சியிலும் இணைந்து செயல்பட விரும்பவில்லை. ஓட்டுக் கட்சிகளுக்குக் கொள்கை என்பது ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கும் ஆயுதம்தான், அது மக்களுக்கானதல்ல என்ற கருத்திற்கு வந்திருந்தேன்.

பிறகு ஓய்வு நாட்களில் நண்பர்களோடு இணைந்து சில சமூகப் பணிகளில் ஈடுபட ஆரம்பித்தேன். அது என்னை ஒரு நிறுவனத்தில் பணி புரிவதை விட்டு வெளியேறத் தூண்டியது. சற்று சிந்தித்து ஒரு மகிழுந்து வாங்கி உபேர் நிறுவனத்தில் இணைந்து கொண்டேன்.இப்போது நான் எவருக்கும் கட்டுப்பட வேண்டியதில்லை. நான் நினைப்பதை எந்த நேரம் வேண்டுமானாலும் செய்யலாம். அப்போது என் நண்பர்கள் இணைத்து சிகரம் தொடுவோம் என்று ஒரு அமைப்பை ஏற்படுத்த முயற்சி செய்து கொண்டிருந்த காலம்.

,

**<u>தோழர் தியாகுவின் அறிமுகம்</u>**:

ஒரு நாள் விவாத நிகழ்ச்சி ஒன்றில் தோழர் தியாகுவின் பேச்சைக் கேட்டேன். தமிழ்த் தேசியத்தின் பக்கம் நின்று நேர்நிறையாகப் பேசியதைக் கண்டு வியந்தேன். பிறகு யார் இவர் என்று தேடினேன். மார்க்சியம் என்றால் என்ன? என்ற அவருடைய 5 மணி நேர வகுப்பு ஒன்றை வலையொளியில் கண்டேன். அன்றிலிருந்து அவரைக் காண வேண்டும், அவரிடம் அரசியல் கற்க வேண்டும் என்று தேட ஆரம்பித்தேன். சில பத்திரிக்கைப் புகைப்படங்கள் கிடைத்தன. அதில் தெரிகின்ற தெருக்களை அடையாளம் கண்டு சூளைமேடு என்று கண்டுபிடித்தேன். அப்போது நான் சூளைமேட்டில்தான் வசித்து வந்தேன். அருகில் பச்சையப்பன் கல்லூரியில் பிபிஏ பயின்று கொண்டிருந்தேன். சூளைமேட்டில் நான் தேடாத தெருக்கள் இல்லை. ஆனால் அவர் எப்போதோ அங்கிருந்து இடம் பெயர்ந்திருந்தார். எல்லா செய்தித் தொலைக்காட்சிகளுக்கும் அழைத்து கேட்டுப் பார்த்தேன். எவரும் எண், முகவரி தரத் தயாராக இல்லை.பிறகு முகநூலில் ஓர் ஆர்ப்பாட்டத் துண்டறிக்கை, அதில் ஓர் எண் இருந்தது.

தோழர் வணக்கம்! நான் பாரதி, நீங்க? தியாகு ஐயா இயக்கமா ? ஆமாம். உங்களை சந்திக்க முடியுமா, நான் தியாகு ஐயாவைச் சந்திக்க வேண்டும், முடியுமா? சந்திக்கலாம் தோழர் என்றார். பிறகு ஆர்ப்பாட்டம், போராட்டம் என்றால் எனக்குத் தகவல் தருவார். நான் ஓய்வாக இருந்தால் சென்று வேடிக்கை பார்ப்பேன். ஒரு நாள் வேளச்சேரியில் ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்றார். வாங்க தோழர், ஐயாவை இன்று சந்திக்கலாம் என்றார். சென்றோம், தோழர் ஓர் அறைக்குள்ளிருந்து வந்தார். வணக்கம் ஐயா என்றேன். வணக்கம், வணக்கம், உட்காருங்க, பேசிட்டு இருங்க, நான் கொஞ்சம் எழுத வேண்டியது இருக்கு என்று கூறி விட்டு அறைக்குள் மீண்டும் போய் விட்டார். அடப் போங்கய்யா இதற்கா இவ்வளவு நாள் தவித்துக் கிடந்தோம் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

பிறகு நானும் தோழர் பாரதியும் அடிக்கடி சந்தித்தோம், அமைப்பு பற்றி, தமிழ்த் தேசியம் குறித்து விவாதிப்பேன். இதுதான் நாம் வேலை செய்யத் தகுந்த இடம் என்பதை உணர்ந்து கொண்டேன். ஆனாலும் முழுமனதாக அமைப்பின் பிரதிநிதியாக நான் முழுமையாகச் செயல்படவில்லை. என்னால் முடிந்த உதவியை ஓய்வு நேரங்களில் செய்து கொண்டிருந்தேன்.

**புரட்சிகர அரசியலுக்கு இட்டுச்சென்ற காவிரி**:

பொதுவாகவே ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களில் முழு ஈடுபாடு இல்லாத மனநிலைதான் அப்போதிருந்தது. முழுமனோதோடு ஈடுபட்ட எனது போராட்டம் என்றால் அது சல்லிக்கட்டுப் போராட்டம்தான். முதல் நாளிலிருந்து இறுதி நாள் காலை வரை மெரினாவில் இருந்தேன். பிறகு காவிரித் தீர்ப்பு வந்தது, காவிரி மீது தமிழ்நாட்டிற்கு இருக்கும் உரிமையை அது முற்றிலுமாக மறுத்தது. நாங்கள் நால்வர் தோழர் பாரதி தலைமையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை உயர்நீதி மன்ற வாசலில் வைத்துக் கொளுத்தினோம்,அதுவே என்னைப் புரட்சிகர அரசியலுக்குக் கொண்டுவந்த முதல் போராட்டம்.

அப்படியே வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது. ஸ்டெர்லைட் நிறுவனத்துக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்துவதாகச் செய்தி வந்து கொண்டிருந்தது. நான் வேலை முடிந்து வந்து இதைப்

பற்றி தோழர் பாரதியிடம் கேட்டுத் தெரிந்து கொள்வேன். நாம் ஏதாவது செய்யலாமா? என்று கேட்பேன். அவர் "செய்யலாம் தோழர்,ஏற்கெனவே திட்டமிட்ட பணிகள் சில இருக்கு தோழர், கொஞ்சம் திட்டமிட்டுச் செய்வோம் என்பார்." இப்படியே ஒரு மாதம் கடந்து விட்டது. "தோழர் இதற்கு மேலும் தாமதிக்கக் கூடாது, ஏதாவது செய்வோம்" என்றேன், நீங்களே கூட்டம் ஏற்பாடு பண்றீங்களா ? என்ன உதவி வேண்டுமோ நான் செய்து தருகிறேன் என்றார். சற்றும் தாமதிக்காமல் சரி என்றேன். எனது மாவட்டம், எம்மக்கள், இனியும் பொறுக்க முடியாது என்று மனம் உந்தித் தள்ளியது. அரசியல் என்பது தேவையின் அடிப்படையில் பிறக்கிறது என்ற மார்க்சின் வரிகளை நினைத்துக் கொண்டேன்.

**ஸ்டெர்லைட் - எதிர் - தமிழ்நாடு**:

என்னுடைய பழைய, புதிய நண்பர்கள் அத்தனை பேரையும் அழைத்தேன். இதன் தேவையை விளக்கினேன். எப்படி நடத்தப் போகிறோம், என்னென்ன செய்ய வேண்டும், எந்த அனுபவமும் இல்லை. அனைவரையும் தோழர் பாரதியோடு உட்கார வைத்தேன். இவர்கள் எல்லோரும் இணைந்துதான் நடத்தப் போகிறோம், எனவே அமைப்புப் பெயரைப் பயன்படுத்த வேண்டாம்,பேச்சாளர்கள் என்று யாரும் இல்லை, துண்டறிக்கை விநியோகம் செய்து மக்களைத் திரட்ட நேரமில்லை, ஓய்வில்லை. வார இறுதிநாளில் ஒரு நாள் வேலைக்கு விடுப்பு எடுத்துக்கொண்டு நடத்த வேண்டும் என்றேன். எனது 'ஆர்வக்கோளாறு' அத்தனைக்கும் தலையசைத்து நெறிப்படுத்தினார் தோழர் பாரதி.

2018 மார்ச் 30 மாலை 3 மணிக்கு சோழிங்கநல்லூரில் ஸ்டெர்லைட் - எதிர் - தமிழ்நாடு என்ற தலைப்பில் ஸ்டெர்லைட்டை இழுத்து மூடு, காவிரி மேலாண்மை வாரியம் அமை! என்ற முழக்கத்தோடு கூட்டம் ஏற்பாடு செய்தோம். அது தூத்துக்குடி போராட்டத்தின் 47ஆவது நாள் என்று நினைக்கிறேன். கிட்டதட்ட 50க்கும் மேற்பட்டோர் அந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் வள்ளுவர் கோட்டம் வாசம் அறியாதவர்கள். போராட்டங்களில் ஈடுபட்டிராத நண்பர்கள். இந்தக் கூட்டதித்திற்குப் பின் வள்ளுவர் கோட்டத் தேநீர்க் கடை வாடிக்கையாளர் ஆகிப் போனவர்கள். கலந்து கொண்டதில் ஆர்வமுள்ள அத்தனைப் பேரையும் பேச அனுமதித்தோம். அதுவரையில் தூத்துக்குடி தவிர

வேறெங்கும் போராட்டங்கள் நடந்திருக்கவில்லை. ஒருசில அமைப்புகள் மட்டும் சிறு அளவில் விழிப்புணர்வுப் பரப்புரை செய்திருந்தன. அந்தக் கூட்டத்தில் ஊடகத்திற்குச் செய்தி கொடுத்த நான், இந்தப் போராட்டம் தொடக்கம் தான், இதனைத் தமிழ்நாடு முழுவதும் கொண்டுசெல்லத் திட்டமிட்டுள்ளோம் என்று கூறினேன். அது போலவே அதில் கலந்து கொண்ட பல்வேறு அமைப்பு நண்பர்கள் தூத்துக்குடிக்கு நேரடியாகச் சென்றனர். சென்னையில் அடுத்தடுத்துப் போராட்டங்கள் நடைபெற இந்தக் கூட்டம் காரணமாய் அமைந்தது.

2018 மே 22 துப்பாக்கிச்சூடு நடந்ததாகக் கேள்விப்பட்டு உடனடியாகக் கூடினோம். 10 பேருக்கும் குறைவான ஆட்கள்தான், ஈக்காட்டுத்தாங்கல் மெட்ரோ ரெயில் நிலையம் அருகே உள்ள சிக்னலில் நின்று சாலையை மறித்தோம். அகன்ற சாலையை இருபுறமும் தடுப்பதில் சிரமப்பட்ட போது தோழர்கள் சுதா காந்தியும், நிலவொளியும் சாலையின் குறுக்கே படுத்தனர். அப்போது சுதா தோழர் நிறைமாதக் கர்ப்பிணி. அதைக் கண்ட நானும் தோழர்கள் பாரதி, தமிழ்க்கதிர் ஆகியோரும் மறுபுறம் படுத்துக் கொண்டோம். சிறுது நேரத்தில் பொதுமக்கள் கிட்டத்தட்ட இருநூறுக்கு மேற்பாட்டோர் திரண்டு எங்களோடு இணைந்து கொண்டனர். கிட்டத்தட்ட விமான நிலையம் தாண்டிப் பல்லாவரம் வரை இருபுறமும் 15- 20 கிலோமீட்டர் சாலை ஸ்தம்பித்தது. 1 1/2 மணி நேரத்திற்கு மேல் சாலையை மறித்து முழக்கங்கள் எழுப்பினோம். பின்பு காவல்துறை கைது செய்து இரவு பிணையில் விடுவித்தது. பிறகு பல்வேறு பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டிற்குக் கண்டனக் கூட்டம் நடத்தினோம். இப்படித்தான் நான் தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தில் இணைந்து, இன்று அதன் தலைமைக் குழுவில் இடம்பெற்றுத் தொடர்ந்து பணியாற்றி வருகிறேன்.

இப்போதும் மீண்டும் ஒரு ஸ்டெர்லைட் போராட்டம் தேவைப்படும் சூழல் எழுமானால் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் அதில் ஒரு காத்திரமான பங்கு வகிக்க வேண்டும் என்ற முடிவில் தெளிவாக உள்ளோம்.

**உயிர்வளியா? உயிர்ப் பலியா?**

திமுக ஆட்சிப் பொறுப்பேற்குமுன்பே ஆக்சிஜன் தயாரிப்பதற்காக ஸ்டெர்லைட் ஆலையைத்

திறக்க ஒப்புதலளித்து விட்டது. இப்போது திமுக அரசு அதே காரணம் சொல்லி ஆலை தொடர்ந்து இயங்க அனுமதித்துள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டம் என்பது வெறும் கார்ப்பரேட் எதிர்ப்புப் போராட்டம் மட்டுமல்ல, அது சூழலியல் கேட்டினால் பல உயிர்களைப் பறித்துக்கொண்டிருந்த நச்சாலை. அதன் மூடுவிழாவிற்கு 15 பேர் பலி கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசு மறந்து விட வேண்டாம். ஸ்டெர்லைட்டை மீண்டும் திறந்து தொடர்ந்து இயக்கும் முயற்சி தமிழ் மக்களின் தன்மானத்துக்கு இழுக்குச் சேர்ப்பதாகும்.

இத்துணைப் படை பலமும், அதிகாரப் பரிவாரங்களும் உள்ள அரசுக்கு ஸ்டெர்லைட் தான் ஆக்சிஜன் தயாரிக்க ஒரே வழி என்று எங்கள் காதில் பூச்சுற்ற எண்ண வேண்டாம்! கொரோனா நெருக்கடி முடிந்த பிறகும் ஆலையை எக்காரணம் கொண்டாகிலும் தொடர முயன்றால், மக்கள் போராட்டம் வெடிக்கும் என எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அதில் எங்கள் இன்னுயிரைத் தரவும் தயங்க மாட்டோம்.

**ஸ்டெர்லைட் ஆலையை இடித்துத் தள்ளு!**

**ஆலை இருக்கும் நிலத்தை ஸ்டெர்லைட்டால் இது வரை உயிர் நீத்த மக்களுக்கே பகிர்ந்தளி!**

பதிவு எண் :R.Dis. No. 1964/2014